

கோகுலம்

GOKULAM


மார்ச் '93 ரூ. 3.00











கோகுலம்

1993 மார்ச் மாத இதழ்
மலர் : 11 இதழ் : 2

அருமைச் சிறுவர் சிறுமியரே,

சென்ற இதழைப் பாராட்டி ஏகப்பட்ட கடிதங்கள் வந்துள்ளன. போட்டிகளைப் பற்றி உங்கள் கருத்துகளைக் கேட்டிருந்தேன். அப்பா! எத்தனை கடிதங்கள்! எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் ஆண்டுக்கு ஒருமுறையாவது கோகுலம் வாசகர்களின் கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்று ஒரு சிறுவன் எழுதியிருக்கிறான். கல்கி நினைவாகச் சிறுகதைப் போட்டிகள் நடத்துவது போல், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பெயரில் ஒரு போட்டியை நடத்த வேண்டும் என்று பல சிறுமிகள் எழுதியிருக்கிறார்கள். கோகுலம் சிறுவர் சங்கத்தை மறுபடி புதுப்பிக்க வேண்டும் என்று பல கோரிக்கைகள். கோகுலத்திற்கும் எங்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்ற எண்ணத்தை எங்களுக்கு ஏற்படுத்தி உற்சாகமூட்ட உறுப்பினர் அட்டை அல்லது கையெழுத்திட்ட ஏதாவது ஒரு படத்தை எங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என்று சில குழந்தைகள் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் 'பெற்றோர்' என்ற முறையில் கோகுலத்தில் பங்கெடுக்க, 'பெற்றோர் பக்கம்' என்று இரண்டு பக்கங்களை ஒதுக்கும்படி சில பெற்றோர்கள் எழுதியிருக்கிறார்கள். இவற்றிலிருந்து ஒன்றை உறுதியாகப் புரிந்து கொள்ள முடிகிறது. எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் கோகுலத்தில் பங்குகொள்ள விரும்புகிறீர்கள்! இது உங்களுக்குக் கோகுலத்திடன் மீது இருக்கும் அன்பையே காட்டுகிறது. மனதை நெகிழ வைக்கிறது. இந்தக் கருத்துகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன. செய்யக் கூடியது எல்லாம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும் என்பதை மட்டும் கூறிக் கொள்கிறேன்.

இன்னமும் பலர் தங்கள் கடிதங்கள், கதை, கட்டுரை, பாடல்களில் முகவரியைக் குறிப்பிட மறந்து விடுகிறார்கள். இதனால் நல்ல படைப்புகளை வெளியிட முடியாத நிலை ஏற்படுகிறது.

கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வாங்கத் தூண்டுங்கள்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்


மார்ச் 1993 இதழ்

இந்த இதழில்....

★ அருமைச் சிறுவர் சிறுமியரே 1

★ இந்த இதழில் 2

✱ குதிரைக்கு எத்தனை பற்கள்? - பக் 13



★ உயிரியல் பூங்காக்களும் அருங்காட்சியகங்களும் 4

★ பார்த்து விட்டேன் 6

★ விடுகதைப் போட்டி முடிவு 8

★ நான் செய்கிறேன் 10

★ இதோ வந்தேன்! 11

★ சொர்க்கம் 12

★ குதிரைக்கு எத்தனை பற்கள்? 13

★ விஷமுள்ள கடல் பிராணிகள்! (சித்திர அறிவியல்) 17

★ நடையைக் கட்டுங்கள்! 21

★ உதவுங்கள்! 24

★ பிருந்தாவனக் கவியரங்கம் 25

★ மணி பார்க்கக் கற்றுக் கொண்டேன் - போட்டி 29

★ சிரிப் 33


★ நூறு ரூபாய் இரகசியம்! (தொடர்கதை) 35


★ வாழ்வாயே என்றென்றும்! 39

★ யாரிடமும் சொல்லாதே! 42

★ தண்டனை கொடு! 43

✱ ஒளி உமிழும் உயிரினங்கள்! - பக் 74





✱ விஷமுள்ள கடற்
பிராணிகள்! - பக் 17

★ காந்திக்கு வாழ்த்துக் கூறியவர்! 46

★ போகாதே நில்! 47

★ பறக்கும் கன்னி மாடம்!
வண்ணப்படக்கதை 53

★ எங்கள் ஊரில் நடந்தது! 65

★ சித்திரச் சிரிப்பு! 69

★ ரெண்டு சாப்பாடா உனக்கு! 70

★ அன்றே சொன்னார்! 72

★ ஒளி உமிழும் உயிரினங்கள்! 74


★ எதனுடைய கால்? - போட்டி 76

★ கோபிக்காக! 77



✱ வாழ்வாயே
என்றென்றும்! - பக் 39

✱ பறக்கும் கன்னிமாடம்!
- பக் 53



★ சார்தபால் 81

★ கேளுங்கள் சொல்லப்படும் 82

★ மரம் நடுவோம்
மழை பெறுவோம்! 85


★ உண்ணாவிரதங்கள்! 89

★ அசட்டுப் புலி! 90

★ குட்டி நாய்! 93

★ கேட்கட்டுமா டாக்டர்? 94

★ உங்கள் நூலகம் 96



உயிரியல் பூங்காக்களும் அருங்காட்சியகங்களும்

உயிர்க்காட்சிசாலை, அருங்காட்சியகம் என்றால் விரும்பிச் சென்று பார்க்காதவர்களும் உண்டா?

இன்று உலகில் கிட்டத்தட்ட 757 மிருகக்காட்சி சாலைகள் உள்ளன. இவற்றை ஒவ்வொரு ஆண்டும் சுமார் 35 கோடி மக்கள் பார்த்து ரசிக்கிறார்கள்.

உலகிலேயே மிருகக்காட்சி சாலை முதன் முதலில் எப்போது தொடங்கப்பட்டது தெரியுமா? கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக 1150 - ஆம் வருடம் சீன தேசத்து ராஜா ஒருவர் தனது மாளிகையில் பல்வேறு வகையான விலங்குகளையும் பறவை இனங்களையும் வைத்திருந்தார். இவையாவும் அரச குடும்பத்தினரும், அரண்மனைப் பணியாளர்களும் மட்டும் கண்டு ரசிப்பதற்குத்தான். பொது மக்கள் கண்டு களிப்பதற்காக அல்ல.




கி.பி. 1752 - ம் ஆண்டு ஆஸ்திரேலிய சக்கரவர்த்தி செயின்ட் ஜோசப் என்பவர் தன் மனைவியை மகிழ்விக்க ஒரு மிருகக் காட்சி சாலையை அமைத்தார். கலையழகு நிறைந்த அந்த அற்புதமான மிருகக்காட்சி சாலை இன்னமும் கவனத்துடன் பாதுகாக்கப் பட்டு வருகிறது. உலகிலேயே மிகப் பெரிய உயிர்க்காட்சி சாலை எனும் பெருமையைத் தட்டிச் செல்வது நமீபியா (ஆப்பிரிக்கா)வில் உள்ள இந்தேஷா நேஷனல் பார்க் ஆகும். 1907 - ம் ஆண்டு துவங்கப்பட்ட இது, 99,525 சதுர கி.மீ. பரப்பளவில் பிரம்மாண்டமாக அமைந்து நன்கு பராமரிக்கப் பட்டு வருகிறது.

மேற்கு பெர்லின் பகுதியிலும் பெரியதோர் மிருகக்காட்சி சாலை உள்ளது. இங்கு 2500 வகைக்கும் மேற்பட்ட ஆயிரக்கணக்கான விலங்குகள் மற்றும் பறவையினங்கள் இருக்கின்றன.

நம் இந்தியாவில் சென்னை திருவனந்தபுரம், மைசூர், ஹைதராபாத், புதுடெல்லி, இந்தூர், பம்பாய், கல்கத்தா மற்றும் ஜெய்ப்பூர் நகரங்களில் உயிரியல் பூங்காக்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மிகப் பெரியது எனும் பெருமையைத் தட்டிச் செல்வது கல்கத்தா 'ஜூ'வாகும்.

இதுவரை கூறியவை உயிருடன் உள்ளவை பற்றியது. அருங்காட்சியகம்



எனப்படும் உயிரற்ற மிருகங்கள் பற வைகள், 'பாடம்' செய்து வைக்கப்பட் டிருக்கும் மியூஸியம் பற்றியும் இதோ சில தகவல்கள்....

உலகிலேயே மிகவும் பழமையான அருங்காட்சியகம் இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம். ஆஸ்மோ லின் மியூஸியம் என்ற இது 1683 - ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அமெரிக்கா வில் உள்ள 'ஸ்மித் சோனியன் இன்ஸ்டி டியூஷன்' எனும் அருங்காட்சியகமானது 15 இலட்சம் சதுர அடி பரப்பைக் கொண்ட பிரம்மாண்டமான 22 அரங்குகளை உள் ளடக்கியது. இங்கு 3 கோடியே 60 இலட்சத்திற்கும் மேலான அரிய பொருட்கள் சேகரித்து வைக்கப்பட் டுள்ளன. இதைக் காண வருடம் ஒன் றிற்கு சுமார் 26 இலட்சம் பேர் வரு கிறார்கள்.

இனி கொஞ்சம் தண்ணீரில் இறங்கு வோமா?.... புளோரிடா (அமெரிக்கா) வில் உள்ள ''தி லிவிங் சீஸ் அக் வேரியம்'' தான் உலகத்திலேயே மிகப் பெரிய நீர்வாழ் உயிரினங்களின் சங்க மமாகும். 90 வகையான 3000 க்கும் மேற் பட்ட மீன் வகைகள் இங்கு 2 கோடியே 36 இலட்சத்து 60 ஆயிரம் லிட்டர் தண் ணீரில் துள்ளி விளையாடிக் கொண் டிருக்கின்றன!

மீன்களைத் தவிர்த்து மற்ற கடல் வாழ் விலங்கினங்களைக் கொண்ட காட்சியகம் ஒன்று கலிபோர்னியாவில் உள்ளது. 1984 - ம் ஆண்டு அக்டோபர் 20 - ஆம் தேதி துவங்கப்பட்ட இதில் நம்மை மகிழ்விப்பதற்காக 525 வகை நீர் வாழ்வன 7,50,000 காலன் தண்ணீரில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

- ஜப்பார்.


மகான் ஒருவரிடம் நெசவாளி ஒருவர் வந்து, ''சுவாமி, தினமும் கோவிலுக்குச் சென்று கடவுளைக் கும்பிட வேண்டும் என்று எனக்குக் கொள்ளை ஆசை. ஆனால் என்னுடைய வயிற்றுப் பிழைப்பு என்னை இப்படி அப்படி அசைய விடுவதில்லை. கோவிலுக்குப் போக முடியவில்லையே என்று நான் மனதார வருந்துகிறேன்'' என்றார்.

''அப்படியென்றால் ஒன்று செய். விபூதி இட்டுள்ள எவரையாவது நாள்தோறும் ஒருமுறையாவது பார்த்த பிறகுதான் சாப்பிட வேண்டும் என்று வைத்துக் கொள். அதுவே போதும். உனக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும்'' என்றார் மகான்.

நெசவாளியின் பக்கத்து வீட்டில் குயவர் ஒருவர் இருந்தார். அவர் தினமும்



பார்த்துவிட்டேன்!



தவறாமல் நெற்றியில் விபூதி அணிவார். அதனால் நெசவாளிக்கு சுலபமாகப் போய் விட்டது. அதோடு அந்தக் குயவரே தினந்தோறும் மதிய வேளையில் மூக்குப் பொடி ஓசி கேட்டு நெசவாளியிடம் வருவார். அதனால் நெசவாளிக்கு மிகவும் எளிதாகி விட்டது. அவரது நெற்றியிலுள்ள விபூதியைப் பார்த்து விட்டுச் சாப்பிடுவதை நெசவாளி வழக்கமாக்கிக் கொண்டார்.

ஒருநாள் வெகு நேரமாகியும் குயவரைக் காணவில்லை. நெசவாளிக்கோ



பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. உடனே அவர் குயவர் வீட்டுக்குச் சென்று விசாரித்தார். 'மண் எடுக்க ஆற்றங்கரைக்குப் போனவர் இன்னமும் வரவில்லை' என்றார்கள். உடனே ஆற்றங்கரைக்கு ஓடினார் நெசவாளி.

இதற்குள் மண்வெட்டிக் கொண்டிருந்த குயவருக்கு, ''ணங்'' என்ற சப்தம் கேட்க, அவர் ஆவலாய் கவனமோடு தோண்ட, புதையல் ஒன்று கிடைத்தது. தவலை நிறையப் பொற் காசுகள்! அதை அவசரம் அவசரமாக மறைக்க முயன்றார்.

அதே சமயம் ஆற்றங்கரை மேட்டிற்கு வந்த நெசவாளி குயவரை அழைக்க, குயவர் நிமிர்ந்து பார்த்த போது அவரது நெற்றியிலிருந்த விபூதியைப் பார்த்து விட்டு, ''ஆகா! பார்த்து விட்டேன்! பார்த்து விட்டேன்!'' என்று மகிழ்ச்சியுடன் கத்தினார்.

குயவர் திடுக்கிட்டார். தான் கண்டு பிடித்து மறைக்க முயலும் புதையலைத் தான் நெசவாளி பார்த்து விட்டதாக எண்ணி, ''வா! வா! இங்கே வா! அங்கே இருந்து கொண்டு கத்தாதே'' என்று அழைத்து, ''யாரிடமும் சொல்லாதே. புதையலில் பாதியை உனக்கு இப்பொழுதே கொடுத்து விடுகிறேன்'' என்று சொல்லி, மறைத்த புதையலை எடுத்து சரிபாதியாகப் பிரித்துக் கொடுத்து விட்டார்.

நெசவாளிக்கு மிகுந்த ஆச்சரியம். ''விபூதி அணிந்து கொண்டவனை தினம் பார்த்து வந்ததற்கே கடவுள் இந்தப் பலனைக் கொடுத்தார் என்றால், நாள் தோறும் நாமே விபூதி அணிந்து, கோவிலுக்குச் சென்று சாமியை வேண்டிக் கொண்டு வந்தால் எவ்வளவு பலன் கிடைக்கும்!'' என்று எண்ணினார் நெசவாளி.

அன்று முதல் அவர் பெரும் சிவபக்தராகவே மாறினார் என்பதைக் கூற வேண்டுமா என்ன?

– கனகா கெங்கை முத்து.


விடுகதைப் போட்டி முடிவு



அப்பா! எத்தனை விடுகதைகள்! எவ்வளவு கற்பனை வளம்! ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பாக இருந்தது. தொலைபேசி விடுகதைகள் என்று ஒரு தனிப் புத்தகமே போடலாம் போல் அவ்வளவு சிறப்பாக இருந்தன. ரூபாய் பத்து பரிசு பெறும் விடுகதைகள் இங்கு வெளியாகி உள்ளன. பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



வாட்டம் குரலில் எனக்கில்லை.
வாட்டும் பசியும் எனக்கில்லை.
எட்டி நின்று உரைத்தாலும்
எளிதில் கேட்க வைத்திடுவேன்!
- ஆர். கோபிநாத், ஆரணி.



டொக்கு டொக்கு மாமா
சத்தம் போட்டு அழைப்பார்
எட்டு திக்கு உறவை
எனக்குச் சொல்ல அழைப்பார்!
- எஸ். கே. சரவணன், மாயூரம்.

காதில்லை கேட்கும்
வாயில்லை பேசும்!
- ப. ராகவன், சென்னை - 19.



குரல் வரும் பின்னே!
குரல் வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே!
- அ. மகேஸ்வரன், கிழக்கு தாம்பரம்.



இருந்த இடத்தில் இருப்பான்
உலக மெல்லாம் ஒலிப்பான்!
- பா. கிருஷ்ணகுமார், திருநெல்வேலி.

இருந்த இடத்தில் அழைப்பான்
எடுத்தால் எல்லாம் சொல்வான்!
- ஐ. முகமது ஹாருன் பாஷா, வத்தலகுண்டு.



கூவி அழைத்திடுவேன் சேவல் அல்ல
சேதி சொல்லிடுவேன் செய்தித்தாள் அல்ல
பேசப்பயன்படுவேன் ஒலிபெருக்கி அல்ல
எம்மொழியும் பேசிடுவேன்
கடவுள் அல்ல!
- பி. அசோக்குமார், திருச்சி - 21.



குரல் கேட்கும் வாயில்லை
மணி அடிக்கும் நாக்கில்லை!
- ப. கணேஷ், சென்னை - 38.




குரலைக் காட்டும்! உருவை மறைக்கும்
அறுநூறு காதமும் அருகில் கேட்கும்!
- ஆர். ராஜாராம், சென்னை - 77.



எண்ணைச் சுற்றினால் எதுவும் பேசுவேன்
தலையில் தட்டினால்
அடங்கிப் போவேன்!
- வி. சித்ரா, சேலம் - 30.



படுத்துக் கிடப்பான்
கணகணப்பான்
கையில் தூக்கினால்
சேதி சொல்லுவான்!
- ஆர். புனிதா, கோனேரிராஜபுரம்.



கூவிக் கூவி அழைப்பான் குயிலல்ல
கையில் எடுத்தால்
அடங்குவான் சிசுவல்ல!
- பா. கிரிஜா, ஈரோடு - 1.



பத்துப் பல் முத்தழகி
பேச அழைக்கும் வடிவழகி
எத்தனை தொலைவு இருந்தாலும்
எளிதில் பேசும் பேச்சழகி!
- சி. மேரி மஜெல்லா, விக்ரம சிங்கபுரம்.



காதும் வாயும் உண்டாம்
கண்ணும் மூக்கும் கிடையாதாம்
பெல் உறவு உண்டாம்
பேசிக் கேட்பது உண்டாம்!
- கே. சிவா, போரூர்.



அழைத்த போது வரமாட்டான்
அழைத்து அழைத்து வருத்துவான்
கேட்கக் கேட்கக் கூறுவான்
உலகம் முழுக்கப் பேசுவான்!
- பி. தீபா, மன்னார்குடி.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Monthly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040.
4. Name of Publisher : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040.
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1993

V. Murali
Publisher



அலறித் துடிப்பான்
காதில் வைத்தால்
ஆயிரம் சொல்லுவான்!
- ஜெ. அனிதா, குடியாத்தம்.



டிரிங் டிரிங் பெட்டி
டில்லி பேசும் பெட்டி
நம்பர் உள்ள பெட்டி
நண்பர் அழைக்கும் பெட்டி!
- பா. புவன், வடக்கன்குளம்.


INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND COMICS
CARTOONIST PRAN'S
CHACHA CHAUDHARY and SABU'S
50th GOLDEN JUBILEE ISSUE
CHACHA CHAUDHARY AND
TRIPLE NINE
CHACHA CHAUDHARY AND TRIPLE NINE
FREE
Chacha Chaudhary's Magnetical Sticker (Worth Rs. 5/-)
OTHER NEW DIAMOND COMICS
Pran's
RAMAN & Video Cassette
Sticker Free
TAUJI & King of Hell Hounds
MAHABALI SHAKA & Chinese Looters
Car Poster Free
JAMES BOND-12
DIAMOND COMICS DIGEST
PHANTOM-23

சொர்க்கம்!



ஹக்குயின் என்ற புத்த ஞானியிடம், புகழ்பெற்ற ஜப்பானிய வீரன் ஒருவன் சந்தேகம் ஒன்றைக் கேட்க வந்தான்.

''குருவே! சொர்க்கம் என்பது எது? நரகம் என்பது எது?'' என்று கேட்டான் வீரன்.

ஞானி உடனே அவனுடைய கேள்விகளுக்குப் பதில் அளிக்கவில்லை. ஏற இறங்க அவனை ஒருமுறை பார்த்து விட்டுப் பேசாமலேயே இருந்தார்.

வீரன் மறுபடி ஞானியை வணங்கி, தன் கேள்விகளைக் கேட்டான்.

''குருவே, நான் எவ்வளவோ பேரிடம் கேட்டு விட்டேன். யாரும் தக்க பதில் அளிக்கவில்லை. நீங்களாவது கூறுங்கள். சொர்க்கம் என்பது எது? நரகம் என்பது எது?''

இப்பொழுது அந்த வீரனைப் பார்த்து, ''நீ யாரப்பா?'' என்று கேட்டார் ஞானி.

''நான் நமது மாண்புமிகு சக்கரவர்த்தி அவர்களின் சிறப்புப் பாதுகாவலன்!'' என்று பெருமையோடு சொன்னான் வீரன்.

''அட முட்டாளே! உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரன் போல அல்லவா தெரிகிறது! எந்த ராஜா உன்னை வீரன் என்று நினைத்துப் பாதுகாவலனாக வைத்துக் கொண்டான்?'' என்று கிண்டலாகக் கேட்டார் ஞானி.

வீரனுக்குக் கோபம் பொங்கியது! உடைவாளை உருவினான்.

ஹக்குயினின் முகத்தில் எகத்தாளம் பொங்கியது. ''அட! நீ கத்தி வேறு வைத்திருக்கிறாயா? பரவாயில்லையே! ஆனால், நான் பந்தயம் கட்டுகிறேன். என் தலையைக் கூட வெட்ட முடியாத அளவுக்கு அந்தக் கத்தி கூர் மழுங்கி வெண்ணெய் வெட்டியாக இருக்கும்!''

வீரனுக்கு ஆத்திரமான ஆத்திரம் பொங்கியது. அவனுடைய தன்மானத்தை அல்லவா அவர் கேவலப்படுத்தி விட்டார்! உருவிய வாளுடன் ஞானியின் முன்பு வந்தான்.


புத்தஞானி கையமர்த்தி புன்சிரிப்புடன் கூறினார்: ''தம்பி! இப்போது உனக்குப் பாதி பதில் கிடைத்து விட்டது. இப்போது நரகத்தின் கதவுகளை நீ திறந்திருக்கிறாய்!''

வீரன், முனிவரின் பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப் போனான். உருவிய வாளை உறையில் போட்டு, மகானை உள்ளுணர்வோடு பணிவுடன் வணங்கி நின்றான்!

ஹக்குயின் சிரித்தபடி சொன்னார்: ''இப்போது உன் கேள்வியின் மறு பாதிக்கும் பதில் கிடைத்து விட்டது! இப்போது நீ சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து விட்டாய்!''

''நரகம் என்பது நம்முடைய மனதில் எழும் கோபமும், ஆத்திரமுமே. இவற்றை அடக்கி பணிவோடு இருக்கக் கற்பதுதான் சொர்க்கம்'' என்று மேலும் விளக்கினார் ஞானி.

– புத்தனாம்பட்டி சி. மணி.



குதிரைக்கு எத்தனை பற்கள்?

ரேவதி

பெருமாள் கோவிலில் திரு விழா. மூன்றாம் நாள் குதிரை வாகனம். சென்னையில் இருந்த பெரிய ஓட்டல் காரர் ஒருவருடைய உபயம். பாண்டு, மத்தாப்பு, வாண வேடிக்கையோடு பெருமாள் எல்லா அலங்காரத்துடன் கோலாகலமாகக் கோவிலை விட்டுக் கிளம்பினார். எல்லாவற்றிற்கும் முன் னால் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு மட்டக்குதிரை சென்று கொண்டிருந்தது. அதன் முதுகில் அலங்கரிக்கப்பட்ட ஒரு டமாரத்தைக் கட்டியிருந்தார்கள். தரை யில் நின்றபடி ஒரு சிறுவன் அதை அடித்து 'டம்டம்' ஓசையைக் கிளப்பிக் கொண்டிருந்தான்.

சாமி ஊர்வலம் தெருவின் மூலை யில் திரும்பிக் கொண்டிருக்க, டமாரக் குதிரை தெருவின் கோடியில் இருந்தது. குதிரை அடிக்கடி திமிறிக் கொண்டு முன் னேறத் துடித்துக் கொண்டிருந்தது. சிறுவன், அது திமிறும் போதெல்லாம் டமாரம் அடிக்கும் குச்சியாலேயே குதிரையை அடித்துப் பணிய வைத்துக் கொண்டிருந்தான். குதிரை மறுபடி திமிறியது.

''சாம்பல் தாத்தா! என்னாச்சு உனக்கு? சீக்கிரமா கொடிமண்டபத்துக் குப் போனா, கொள்ளு கொடுப்பாங் கன்னு துடிக்கிறியா? நாம்ப எத்தனை சீக்கிரம் போனாலும் சரி, சாமி வந்து, குடையை இறக்கி, மண்டபத்துக் குள்ளே போயி, கட்டளைக்காரங்க நை வேத்தியம் ஆனதுக்கப்புறம்தான் உங்க ளுக்கு வேகவைச்ச கொள்ளு தருவாங்க. அது வரை காத்திருக்க வேண்டியது தான்'' என்றான் சிறுவன் குதிரையிடம்.

அந்தக் குதிரை வயதான கிழட்டுக் குதிரை. நல்ல சாம்பல் நிறம். அதுதான் சிறுவன் செல்லமாக ''சாம்பல் தாத்தா'' என்று அழைத்தான்.

சிறுவன் கூறியதை அந்த கிழட்டுக் குதிரை புரிந்து கொண்டதோ என்னவோ, திமிறுவதை நிறுத்திவிட்டு அவனையே பார்த்தது.

''தாத்தா, பெருமாளுக்குத் திரு விழா வருஷத்துக்கு ஒரு தடவைதான். பத்து நாள்தான். இந்தப் பத்து நாளும் தான் கட்டளைக்காரங்க புண்ணியத்துல உங்களுக்கு வேகவைத்த கொள்ளும், எனக்கு சர்க்கரைப் பொங்கலும் கிடைக் கும். மத்த நாளெல்லாம் உங்களுக்கு வெறும் புல்லும் எனக்கு மிளகு சாதமும் தான்.''

சிறுவனைப் பார்த்துப் புரிந்து கொண்டதைப் போல் தலையாட்டியது டமாரக் குதிரை.

''நீ ஒரு யானையாகவும் நான் ஒரு யானைப் பாகனாகவும் பிறந்திருக்கக் கூடாது? உனக்கும் கூட்டம் வரும். விதம் விதமா பழம், தேங்காய் எல்லாம் கிடைக்கும். உன்னைச் சாக்கிட்டு எனக் கும் காசு கிடைக்கும். என்ன பண்றது? கிழட்டுக் குதிரையான உன்னை ஊர்ப் பசங்க கூட சீண்டறது கிடையாது'' என்று குதி ரைக்கும் சேர்த்துப் புலம்

பிய சிறுவன், ஆதங்கத்துடன் குதிரையின் கழுத்தைத் தடவிக் கொடுத்தான்.

சாமி ஊர்வலம் கொஞ்சம் முன்னேறியது. சிறுவன் குதிரையை சற்று முன்னால் போக அனுமதித்தான். இப்பொழுது டமாரக் குதிரை நின்ற இடம் ஒரு வீட்டின் காம்பவுண்டு, உள்ளே நல்ல புல்தரை. குதிரை ஏக்கத்துடன் அதையும் பார்த்து விட்டு சிறுவனையும் பார்த்தது.

''வாசல் கேட்டை நல்லா மூடு. குதிரை வந்துடப் போகுது. குதிரை புல் மேய்ந்தால் தரையோடு ஒட்டக் கடிச்சு புல்லை எடுத்துடும்,'' என்று தன் வீட்டில் இருந்தவர்களை எச்சரித்தார் வீட்டுக்காரர்.

சாமி முன்னேற டமாரக் குதிரையும் முன்னேறி தெரு முனை திரும்பி நின்று கொண்டது. அந்தத் திருப்பத்தில் ஒரு டீக் கடை. அதன் வாசலில் மிகவும் உயரமான ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. சாமான் ஏற்றும் பின் பக்கத்தில் இரண்டு குதிரைகள் இருந்தன.

தங்கள் இனத்தைச் சேர்ந்த டமாரக் குதிரையைக் கண்டதும், லாரிக் குதிரைகள் இரண்டும் கம்பீரமாகக் கனைத்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன! டமாரக் குதிரை பாவம், அரண்டுபோய் ஓடத் திமிறியது. ''சாம்பல் தாத்தா, உங்க இனத்தார்தானே? ஏன் பயப்படறே?'' என்று சிறுவன் மிகவும் கஷ்டப்பட்டு அதை நிறுத்தினான்.


டீயைக் குடித்து முடித்த இரண்டு காக்கிச் சட்டைக்காரர்கள், லாரிக்கு வந்தனர். ஒருவர் டிரைவர், இன்னொருவர் பணியாளர் (கிளீனர்).


''அண்ணே, உங்க குதிரைங்க ரெண்டும் எங்கே போகுது? நான் பாக்கலாமா?'' என்று ஆவல் பொங்கக் கேட்டான் சிறுவன்.

''தம்பி, இது ரெண்டும் பட்டாளக் குதிரைங்க. கிண்டியில் கவர்னர் மாளிகைக்குப் போகுது. கீழ இறக்க முடியாது. அதோட இது ரெண்டையும் பார்த்தா, உன் கிழட்டுக் குதிரை, பயத்துலேயே செத்திடும்'' என்றான் ஒருவன்.

''உனக்கு ஆசையா இருந்தால், மேல ஏறிப்பாரு'' என்று அனுமதித்தான் இன்னொருவன்.

ஆவலை அடக்க முடியாது சிறுவன் லாரியில் ஏறிப் பார்த்தான்.





கெட்டி பழுப்பு நிறம். கழுத்தின் மேல் பகுதியில், அழகு செய்யப்பட்ட பிடரி மயிர். பெரிய கண்கள். வலிமை மிக்க உறுதியான கால்கள். வால், முடி நிறைந்து புஸ்ஸென்று தொங்கியது. உயரமும், உறுதியும், கம்பீரப் பார்வையும் பிரமிக்க வைத்தன.

''அண்ணே, இந்தக் குதிரைங்க எத்தனை உயரம்?''

''உன் குதிரை எத்தனை உயரம்? அதை முதல்ல சொல்லு?''

''யாரண்ணே அளந்து பார்த்திருக்காங்க? யாரோ ரெண்டு வருஷத்துக்கு முன்னே அதை கோவிலுக்கு தருமம் பண்ணினாங்க. அதன் மூலமா, எனக்கு அரை வயிற்றுக்குக் கஞ்சி கிடைச்சிருக்கு,'' என்று கூறிய சிறுவன், ''அண்ணே, என்னோட டமாரம் அடிக்கிற குச்சி ஒரு அடிதான். இருங்க, இப்பவே அளந்து என்னோட குதிரையின் உயரத்தைச் சொல்லிடறேன்'' என்று செயலில் இறங்கினான். காலிலிருந்து, உயர்ந்து நின்ற காது வரை அளந்து ''ஆறடி அண்ணே'' என்றான்.

''தம்பி, குதிரையின் உயரத்தை இப்படி அளக்கக்கூடாது. குதிரைக்கு மட்டும் தரையிலிருந்து, தோள் எலும்பின் முனை வரை அளக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் உன் குதிரை ஐந்தே கால் அடிதான்'' என்றான் ஒருவன்.

''இதுக்கு என்ன தீனி தருவீங்க?''

''வேக வைச்ச கோதுமை, பச்சைப் புல், கொள்ளு, பிண்ணாக்கு எல்லாம்!''

''உடம்பு இப்படிப் பளபளன்னு இருக்கே! என்ன பண்ணுவீங்க?''

கிராமத்துச் சிறுவனின் கேள்விகளுக்கு மாறிமாறி இருவரும் சிரித்துக் கொண்டே பதில் கூறினார்கள்.

''ரெண்டு நாளைக்கு ஒரு முறை இதற்கு மிஷினை வைச்ச முடி வெட்டி, பாலீஷ் போடுவாங்க. வால் முடியையும் சீவி, ஷாம்பூ போட்டு சுத்தப் படுத்தி, சுத்தரித்து விடுவாங்க.''

இரண்டு குதிரைகளுள் ஒன்று வாயை அகலத் திறந்து கனைத்தது. பல் வரிசைகள் பளிச்சென்று தெளிவாகத் தெரிந்தன!

''என்னண்ணே... உங்க குதிரைக்கு முப்பத்தாறு பல்தான் இருக்கு போல் இருக்கே! எங்க குதிரைக்கும் சரி, பெருமாள் வலம் வரும் வாகனக் குதிரைக்கும் நாற்பது பல் இருக்கே!''

''தம்பி எங்க குதிரைங்க ரெண்டும் பெண் குதிரைங்க. அதனால அதுகளுக்கு முப்பத்தாறு பல்தான். உன் குதிரையும் வாகனக் குதிரையும் ஆண் குதிரைகள். அதனால் நாற்பது பல்.''

சாமி ஊர்வலம் நெருங்கிக் கொண்டிருந்தது. இருவரும் சிறுவனிடம் விடை பெற்றுக் கொண்டு, லாரியைக் கிளப்பினார்கள்.

சிறுவன் டமாரம் அடிக்கத் தொடங்கினான்.

அறிவியல் உண்மைகள்


- குதிரைகளில் பல இனங்கள் உண்டு. பயன்படும் வகையைக் கொண்டு, சவாரி குதிரைகள், சுமை குதிரைகள் என்று பிரிக்கிறார்கள்.
- பிறந்த உடனேயே குதிரைக் குட்டி ஓட ஆரம்பிக்கும். புல்லைத் தின்னும்.
- ஐந்து வயதில் முழு வளர்ச்சி. தீனியை பற்களால் நன்கு மென்று தின்னும். அசை போடாது.
- முன்னிரண்டு கால்களும் அதிகமான சுமையைத் தாங்கவும், அதிர்ச்சியைத் தாங்கும் படியும் உறுதியாக இருக்கும்.
- குதிரையின் உயரம் தரையில் இருந்து தோள் எலும்பு முனை(WITHER) வரையே கணக்கிடப்படுகிறது.
- ஆணுக்கு (Stallion or Gelding) 40 பற்கள், பெண்ணுக்கு (Mare) 36 பற்களே!
- பற்களைக் கொண்டு வயதைக் கணக்கிடுவார்கள்.
- புதிய பொருள்களைக் கண்டால் மிரளும். அதனால் பட்டைகட்டுகிறார்கள்.
- பழக்க ஏற்ற விலங்கு. பதிலுக்கு அன்பு காட்டும்.

விஷமுள்ள கடல் பிராணிகள்


ஆழி

கடலில் வாழும் பல உயிரினங்கள், எதிரிகளை எதிர்த்துத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், இரைகளைத் தாக்கி உணவாக்கிக் கொள்ளவும் தங்களிடமுள்ள விஷங்களைப் பயன்படுத்துகின்றன.

இந்த விஷத்தின் பெரும் பகுதி புரோட்டீனும் கார்போ ஹைடிரேட்டும் தான்! விஞ்ஞானிகள் இந்த விஷங்களைச் சேகரித்து மருந்தாக்கி, புற்று நோய், நீரிழிவு, இருதய நோய், இரத்த அழுத்தம், ஆஸ்துமா முதலிய நோய்களுக்குப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்!




கடலில் மூழ்குகிறவர்கள் அல்லது நீந்துகிறவர்கள், போதுமான அளவுக்குப் பாதுகாப்பு உடைகள் அணிந்திராவிட்டால், இந்த விஷப் பிராணிகளால் பாதிக்கப் படுவார்கள்!





ஜெல்லி மீன்கள், குடை வடிவில், அல்லது கிண்ண வடிவில் இருக்கின்றன. சிறிய அளவிலும் பெரிய அளவிலும் இவை இருக்கின்றன. மேல் பகுதி குடை போன்று 3 மீட்டர்கள் குறுக்களவும், கீழ்ப் பகுதி கயிறு போன்று 30 மீட்டர்கள் நீளம் கூட இருப்பதுண்டு. சிறு அளவில் உள்ள ஜெல்லி மீனின் விஷம், தாக்கப்படுகிறவர்களின் உடலில் கடுமையான அரிப்பையும், எரிச்சலையும், ஜுரத்தையும் உண்டாக்கும். ஆனால், பெரிய அளவு ஜெல்லிமீனின் விஷம் 30 விநாடிகளில் உயிரைப் போக்கிவிடக் கூடியது!

'போர்த்துக்கீசிய போர்வீரன் அல்லது 'நீலப்புட்டி' என்னும் பிராணி, எல்லா கடல்களிலும் இருக்கிறது. 10 முதல் 30 செ.மீ குறுக்களவு இருக்கும். இதன் கயிறு போன்ற உறுப்புகள் 2 மீட்டர் முதல் 30 மீட்டர்கள் நீளம் கூட இருப்பதுண்டு. கயிற்று முனையிலுள்ள கொடுக்கு ஊசி போன்று கூர்மையானது. இந்தக் கொடுக்கினால் இரையைக் குத்தியவுடன் அது மயங்கி விழுந்துவிடும். மயங்கிய இரையை இது உட்கொள்ளும். மனிதர்களுக்கு இது கடுமையான தோல் அரிப்பை உண்டாக்குகிறது!




எட்டுக் கைகளை உடையது ஆக்டோபஸ். இதன் வாயில் சக்தி வாய்ந்த விஷ உறுப்பு இருக்கிறது. ஆக்டோபஸ்ஸின் விஷம் செலுத்தப் பட்டால் 2 மணி நேரத்திற்குள் மரணம் ஏற்பட்டுவிடும்.







18 மீட்டர் நீளத்திற்கு மேல் வளரும் 'ஸ்குய்டு' என்னும் கணவாய் மீனுக்கு 8 கைகளும், முன்னே இரண்டு கொடுக்குகளும் உள்ளன. இந்தக் கொடுக்குகளில் உள்ள விஷத்தால் எதிரிகளைத் தாக்கிச் செயலிழக்க வைக்கிறது!




திருக்கைகளில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றில் ஊசிமுனைத் திருக்கை மிகவும் விஷம் உள்ளது. இதன் வாலில் ஊசி போன்ற இரண்டு உறுப்புகள் இருக்கின்றன. இவற்றின் மூலம் விஷத்தைச் செலுத்துகிறது. இதன் தாக்குதலால் ஆண்டு தோறும் 1500 பேர்கள் கொல்லப் படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.
இந்த விஷ உறுப்புகள் உடைந்துவிட்டாலும் மறுபடியும் வளர்ந்து விடும்!

பாறைமீன், பார்ப்பதற்குக் கற்பாறை மாதிரி கரடுமுரடாக இருக்கும். பாறைகளின் இடுக்கில் அசைவற்றுத் தங்கியிருக்கும். இதன் உடலில் 12 அல்லது 13 முட்கள் இருக்கின்றன. இதன் விஷம் பாய்ந்தால், மனிதனும் மூர்ச்சையாகி விடுவான்!






தேள் மீனின் உருவமே பயங்கரமாக இருக்கும். இதன் உடலிலுள்ள முட்கள் எப்போதும் சிலிர்த்துக் கொண்டேயிருக்கும்.
இது தாக்கும் போது விஷமுட்களால் ஏற்படும் பாதிப்பு பயங்கரமானது!



தேரை மாதிரியான தோற்றத்தில் இருப்பது, தேரைமீன். இதன் விஷம் மிகவும் கடுமையானது. ஆனால் இதன் விஷம் நீரிழிவுக்கு மருந்தாகப் பயன்படுகிறது!

கடலில் உள்ள மீன்களில் 200 வகையான மீன்கள் விஷம் உள்ளவை.




எல் மீன்



நாய்மீன்





ட்ரிக்கர் மீன்



சர்ஜன் மீன்

எதிரியைக் கண்டுவிட்டு, நீரை உட்கொண்டு உடலை உப்பிக் கொள்ளும் முள்ளம் பன்றி மீனின் உடலில் உள்ள ஏராளமான முட்கள் விஷம் உள்ளவை. அவசரப்பட்டு இந்த மீனை விழுங்கும் பெரிய மீன், நிச்சயம் உயிரை இழந்துவிடும்! இது மனிதனைத் தாக்கினாலும் ஆபத்து தான்! இதன் விஷத்திற்கு இன்னும் மாற்று மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை!






ஏராளமான முட்களைக் கொண்டது கடல் 'முள்ளெலி.' இதன் ஒவ்வொரு முள்ளும் விஷம்தான். மற்ற கடல் பிராணிகளால் இதைக் கொல்ல முடிவதேயில்லை!



மேலே குடை போலவும், கீழே கயிறு போன்ற உறுப்புகளுடனும் உள்ளது கடல் குளவி. விஷம் உள்ள இந்த உறுப்புகளின் விஷத்தினால் ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கில் மரணமடைகிறார்கள்.

'கடல் சாமந்தி', பூப்போன்ற வடிவில் இருக்கும். வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, ஆரஞ்சு நிறங்களிலும் கடல் சாமந்திகள் இருக்கின்றன. கடலில் 5400 மீட்டர் ஆழத்திலும் இவை உயிர் வாழ்கின்றன. இதன் உடல் மூன்று பகுதிகளாகப் பிரிந்திருக்கும். அடிப்பகுதி, பாறைகளின் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும். இடைப்பகுதி சிறு உருளை போல் இருக்கும். மேலே உள்ளதுதான் வாய்ப் பகுதி. இதன் உட்புறத்தில் தடித்த பற்றுக்கொம்புகள் இருக்கின்றன. இந்தப் பகுதியில்தான் கடுமையான விஷம் உள்ளது. இந்த விஷத்தின் மூலம் மீன்களைத் தாக்கிக் கொன்று இரையாக்கிக் கொள்ளுகிறது!






'கடல் குஞ்சப் புழு' விஷம் உள்ளது. கடலில் 5000 மீட்டர் ஆழத்திலும் வாழ்கிறது. 5 செ.மீ. முதல் 10 செ.மீ. நீளம் வரை இருக்கும். இதன் உடல் முழுவதிலும் உள்ள கொத்துக் கொத்தான முட்கள் மூலம் விஷம் வெளிப்படுகிறது!


கடல் பாம்பின் விஷப்பல்லில் கடுமையான விஷம் உண்டு. கடல் பாம்பின் விஷம், உடல் வலி, தொண்டை அடிப்பு, பேசமுடியாமை, வாந்தி, மூச்சு அடைப்பு முதலியவற்றை உண்டாக்கும். மரணம் தான்.



கடலில் உள்ள 'கூம்பி' என்னும் பிராணியும் விஷம் உள்ளதுதான். இது, மண் அல்லது பாறைகளின் கீழ் மறைந்து வாழும். இரை அருகில் வந்ததும், கூர்மையான, முள் போன்ற பல் ஒன்றை நீட்டிக் குத்தும். அதோடு இணைந்த குழாய் மூலம், விஷப் பையிலிருந்து விஷம் வெளியேறி, இரைக்குள் போய் அதைச் சாகடிக்கும். இரையை இது தின்று விடும். கடலில் நீந்துகிறவர்கள், இந்த விஷத்தினால் மரணமடைவதும் உண்டு.



இவை தவிர, கடலில் கண்ணுக்குத் தெரியாத சிறு உயிரினங்களும் விஷத்தை வெளிப்படுத்துகின்றன!



நடையைக் கட்டுங்க!

வான் உயர்ந்த மரங்கள் நாலாபுறமும் கிளை பரப்பியிருந்த இளங்கோவின் வீட்டுத் தோட்டம். மரங்கள், சூரிய வெப்பம் சிறிதும் தெரியா வண்ணம், இலைகளைக் கொண்டு இயற்கைப் பந்தல் அமைத்திருந்தன. அந்த குளு குளு நிழலில், நண்பன் மதியுடன் பூப்பந்து ஆடிக் கொண்டிருந்தான் இளங்கோ.

அப்போது, அங்கே வந்து சேர்ந்தனர் மணியனும் வசந்த குமாரும்.

''நாங்களும் உங்களோடு விளையாடலாமா? இரட்டையராகக் கட்சி பிரிந்து ஆடலாமே?'' - மணியன் கேட்டான் அவர்களைப் பார்த்து.

''அதெல்லாம் சரிப்பட்டு வராது, மணியா! நாங்கள் வருடாந்திர ஸ்போர்ட்சுக்காகப் பிராக்டீஸ் எடுத்துக் கொண்டிருக்கிறோம்'' - இளங்கோவன் மறுத்து விட்டான்.

''எங்களையும் ஆட்டத்தில் சேர்த்துக்கிட்டால், குறைஞ்சா போய் விடுவீங்க?'' - வசந்தகுமார் கேட்டான்.

''இளங்கோ சொல்றதுதான் சட்டம்! எங்களோடு ஈடு கொடுத்து விளையாட உங்க ரெண்டு பேராலயும் முடியாது வசந்தா! வந்த வழியைப் பார்த்து நடை யைக் கட்டுங்க!'' - குத்தலாகக் கூறினான் மதி.

''ஏன் மதி, எங்களை அவமானப் படுத்திப் பேசறே?'' - மணியனின் குரலில் வருத்தம் தொனித்தது.

''நாங்க எத்தனை நாளாய்ப் பயிற்சி எடுத்துக்கிட்டு வர்றோம்? கந்துக் குட்டிகளாய் இருந்துகிட்டு, இடையிலே வந்து நுழைஞ்சிக்கப் பார்க்கிறீங்களே! நடையைக் கட்டுங்க!'' - இளங்கோ இகழ்ச்சியுடன் பேசினான்.

''வேணுமானா, நீங்க சொந்தமா உங்க வீட்டுத் தோட்டத்திலே போஸ்ட் நட்டு, நெட் கட்டி விளையாடிப் பழகுங்களேன்! எங்களுக்கு எதிராய்ப் போட்டியில் கலந்து கொள்ளவும் தடையில்லை!'' - எகத்தாளமாய்ப் பதில் வந்தது மதியிடமிருந்து.

ஆண்டின் இறுதி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கான தேதிகள் குறிக்கப்பட்டன. பந்தயங்களில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தம் பெயர்களை உடற்கல்வி ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும் என்று, வகுப்பு தோறும் சுற்றறிக்கை வந்தது.

''வழக்கம் போல் பூப்பந்து போட்டி யில் இவ்வாண்டும் ஜெயிப்பு நமக்குத் தானே?'' - எக்களிப்புடன் இளங் கோவை வினவினான் மதி.

''நம்மை எதிர்த்து யார் விளையாடினாலும், தோல்வி அவர்களுக்குத் தான்! இதிலே சந்தேகம் வேறயா?'' - மதியின் உற்சாகத்தை மேலும் பெருக்கியது, இளங்கோவின் இறுமாப்பான பதில்.

புவனை கலைச்செழியன்



இரண்டு பேரும், அவசரம் அவசர மாக உடற்கல்வி ஆசிரியரின் அறைக்கு ஓடினர், அவரிடம் முதன் முதலாகப் பெயர் கொடுக்கும் மாணவர்கள் தாங்க ளாகத்தான் இருக்க வேண்டுமென்ற துடி துடிப்புடன். ஆனால், அவர்களுக்கு முன்னதாகவே மணியனும், வசந்த குமாரும் அங்கே வந்து நின்றிருப்பதைக் கண்டனர். இது அவர்களுக்கு முதல் அதிர்ச்சி!

''என்ன, நீங்களும் பூப்பந்து ஆட்டமா விளையாடப் போறீங்க? சபாஷ்! 'நம்மால் முடியுமோ, முடி யாதோ'ங்கிற சந்தேகத்தோட போட்டி யில் கலந்து கொள்ளாம ஒதுங்கிக்கிற பிள்ளைகளுக்கு நடுவே, உங்களை மாதிரி சவால் எடுத்துக்கிட்டு முன் வரு கிறவர்களைத்தான் எனக்குப் பிடிக் கும்'' என்று உடற்கல்வி ஆசிரியர் மனம் கனிந்து பாராட்டுரை வழங்கியது வேறு. மதிக்கும் இளங்கோவுக்கும் வேம் பாய்க் கசந்தது.

அடுத்து, இவர்கள் பக்கம் திரும்பிய அவர், ''என்ன, வழக்கமான, பூப்பந்து அயிட்டந்தானே? பேரை எழுதிக் கொள் கிறேன், போங்க!'' என்றார் சர்வ சாதார ணமாக. இந்தப் புறக்கணிப்பு, அவர் களுக்கு அடுத்த அதிர்ச்சி!

'சுண்டெலிக்கு முன்னால் சிங்கத் திற்கு இளக்காரமா?' என்கிற பாவனை யில் வசந்த குமாரை ஏறிட்டான் இளங்கோ.

'எங்களை நீங்கள் வெல்லப் போவது கனவில் மட்டும்தான்!' - மணி யனைப் பார்த்து, தனக்குள் கூறிக் கொண்டான் மதி.

எனினும், அவர்களின் ஆர்வம் 'சப்'பென்று அடங்கிப் போயிற்று. அவர்கள் அதை ஜெயித்துவிட்டது போலவும், மேடையேறி விழாத் தலை வரின் கையிலிருந்து பரிசுப் பொரு ளைப் பெற்றுக் கொள்வது போல வும் கற்பனை செய்தபடியே, நாட் களைக் கடத்தினர் இருவரும். கற் பனை தந்த சுகத்தில், அவர்கள் பயிற்சியையும் முறையாகத் தொடரவில்லை.

விளையாட்டுப் போட்டிகள் தொடங்கின. ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு பந்தயம்.


பூப்பந்துப் போட்டிக்கான நாளும் வந்தது.

அன்று -

பாட்மிண்டன் கோர்ட்டின் ஒரு புறம் -

வழக்கமாகக் கலந்து கொள்ளும் கிளைப் பள்ளியைச் சேர்ந்த கமலக் கண்ணன் - வீரமுத்து குழுவினர் நிற்க வில்லை. காரணம், இம்முறை அவர் கள் போட்டியில் கலந்து கொள்ள

வில்லையாம். அவர்களுக்குப் பதிலாக அங்கு அடக்கமே உருவாய் நின்றிருந்தனர், மணியனும் வசந்த குமாரும். அவர்களுக்கு எதிர் அணியில், 'கமலக்கண்ணன் குழுவையே மண் கௌவ வைத்தவர்கள்



நாங்கள். நீங்கள் எம்மாத்திரம்?' என்று வினவுகிற மாதிரி, கர்வமுடன் நின்றிருந்தனர், இளங் கோவும் மதியும்.

ஆட்டம் தொடங்கியது.

யாரும் எதிர்பாராத வண்ணம், வேகமும் விறுவிறுப்பாக ஆடியது வசந்த குமாரின் அணி. இறுமாப்புக் கொண்ட இளங்கோவின் அணியோ, ஒவ்வொரு தடவையும் தம் பக்கம் வந்த பந்தை, உடனுக்குடன் திருப்பியடிக்க முடியாமல்



உதவுங்கள்

தம்பி! இங்கே வந்திடுவாய்
'திரு' என் பெயர். நீ 'மரம்' என்பாய்!
கொம்பு கிளைகள் இலைகளுடன்
கொத்தாய்ப் பூகாய் கனிதருவேன்.

மலையின் மேலும் வளர்ந்திடுவேன்
பள்ளத் தாக்கில் பலிச்சிடுவேன்
வலை போல் சுழலும் மேகங்கள்
மழையாய் மண்ணில் விழச்செய்வேன்.

உதிரும் சருகால் உரமாவேன்
ஊன்றிய வேரால் வளமாவேன்
உதிரும் கனியால் உணவாவேன்
உச்சி வெய்யிலில் நிழலாவேன்.

மூச்சுக் காற்றின் தூய்மைதான்
முற்றிலும் எனது செயலாகும்
பேச்சுகள் போதும் எம்மினம்தான்
பெருகிட மேலும் உதவுங்கள்

கோடரி கத்தி பாரை வாள்
குடும்பம் நடத்தத் தேவைதாம்
பாடரி தன்றோ எமைவளர்த்தல்
பகையெனச் சாய்த்தல் பழியாமே!

- பரிதி வேங்கடேசன்

திணறியது. 'இவர்களின் மட்டையில் படாதபடி, அபாரத்திறமை யுடன் பந்தைப் பறக்க வைத்தது எதிர் அணி!

முன்னணியில் இருந்த மணியன்-வசந்த குமார் ஜோடியைக் கரவொலி மூலம் ஊக்கி, உற்சாகப்படுத்தியது, சூழ்ந்திருந்த மாணவர் கூட்டம்.

ஆட்டம் முடிந்தது. வெற்றிக்கனி, எதிர் பார்த்திருந்த இளங்கோ அணிக்குக் கிட்டவில்லை!


விளையாட்டு நெறிப்படி, வென்ற இருவரையும், கை குலுக்கி வாழ்த்தினர் தோற்றுப் போன இருவரும்.

புன்னகையோடு வசந்த குமாரை நோக்கினான் இளங்கோ. அந்தப் புன்னகை, 'நீயும் மணியனும் நெட், பேட், பால் எதுவுமே வாங்க இயலாத ஏழைகளாயிற்றே! எப்படி போட்டியில் ஜெயிக்கிற அளவுக்கு உங்களால் திறமை பெற முடிந்தது?' என்று கேட்கிற மாதிரி இருந்தது.

வசந்தனும் அதைப் புரிந்து கொண்டவன் போல, 'எங்களால் அதிக விலை போட்டுப் புதுசா பூப்பந்து வாங்க முடியலே. கிளப்புல கேட்டு பழைய பந்துகளை குறைந்த விலையில் மலிவாக வாங்கி அவங்க கிட்டயே பழைய பாட்களையும் வாங்கிக் கிட்டோம். நம்ம ஊருக்கு மேற்கே இருக்கிற தென்னந் தோப்பில் இரண்டு மரங்களுக்கு இடையே கயிறு வலை பின்னிக் கட்டி தினமும் காலை, மாலை தவறாமல் தொடர்ந்து கடுமையாக பயிற்சி செய்தோம். பிராஞ்ச் ஸ்கூல் கமலக்கண்ணன் குழுவும் எங்களுக்காக விட்டுக் கொடுக்கச் சம்மதித்தது. தன்னம்பிக்கையைக் கடைசி வரையில் நாங்கள் கைவிடவில்லை. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற பழ மொழி அடிக்கடி நினைவில் வந்து, எங்களுக்குத் தெம்பு தந்தது. ஆண்டவனும் எங்கள் பக்கம் இருந்து, அதிர்ஷ்டம் கிடைக்கச் செய்து விட்டார்'' என்றான் பெருமிதத்துடன்.

வசந்தனின் வார்த்தைகளைக் கேட்ட மதியும், இளங்கோவும் நாணத்தால் தலை கவிழ்ந்தனர்.

பிருந்தாவனக் கவியரங்கம்



எங்கள் பூங்கா!

எங்கள் ஊரின் பூங்கா
எழில் நிறைந்த பூங்கா
மஞ்சள் சிவப்பு வண்ண
மலர்கள் நிறைந்த பூங்கா!

வகை வகையாய் செடிகள்
வளைந்து நெளியும் கொடிகள்
முகிலை எட்டும் மரங்கள்
முத்துச் சிதறல் மலர்கள்!

மாலைப் பொழுதில் சிறுவர்
மழலைக் கூட்டம் கூடும்
சோலை எங்கும் திரியும்
சிரித்து ஆடி மகிழும்


- கே. சிவா, ஆலப்பாக்கம்.

வானொலி!

எந்தன் பெயர்தான் வானொலி
எவர்க்கும் வழங்கும் தேனொலி!
என்னை எவரும் விரும்புவார்!
எளிதாய் மக்கள் வாங்குவார்!

எல்லாச் செய்தியும் கூறிடுவேன்!
எவர்க்கும் கனிவாய் நட்பாவேன்!
கல்லார் கூட என்னையே
காசு கொடுத்து வாங்குவார்!

- எம். சி. பாலு, செம்பேடு.




பூனையார்!

குட்டிக் குட்டிப் பூனையார்
குண்டு கண்ணு பூனையார்
எட்டி ஏனோ பார்க்கிறார்
எலியைப் பிடிக்கும் எண்ணமோ!

பயந்து பயந்து நடிக்கிறார்
பாலைக் குடிக்கும் எண்ணமோ!
நாயைக் கண்டால் நடுங்குறார்!
நாலு காலில் தாவுறார்!

- ஆ. மாரியப்பன், பவளத்தூர்.



முயல் குட்டி!

தத்திக் குதிக்கும் முயல் குட்டி
தூய வெள்ளை முயல் குட்டி
காதை ஆட்டும் முயல் குட்டி
கண்கள் ஜொலிக்கும் முயல் குட்டி

கோசைத் தின்னும் முயல் குட்டி
கோலிக் கண்கள் முயல் குட்டி
பாசம் மிக்க முயல் குட்டி
பள்ளி செல்லா முயல் குட்டி!

கேரட் கண்டால் வந்திடுமாம்
காதுகள் நீண்ட முயல் குட்டி
யாரும் விரும்பி அணைத்திடவே
அழகாய் மயக்கும் முயல் குட்டி!

- ரெ. பிரசன்னா, சென்னை - 2.


மிதிவண்டி

மிதித்து ஓடும் வண்டியாம்
மதித்தால் உழைக்கும் வண்டியாம்
அதிகச் செலவு இல்லாத
அதிசய ஏழை வண்டியாம்!

எரிபொருள் எதுவும் கேட்காது
எங்கும் செல்லும் வண்டியாம்
இருவர் என்ன மூவரை
ஏற்றத் தயங்கா வண்டியாம்!

- பி. சரவண பாபு, சென்னை - 2.

பிருந்தாவனக் கவியரங்கம்



வேப்பமரம்

வீட்டுக்கு அழகைத் தந்திடுமாம்
வெப்பம் குறைய உதவிடுமாம்
நாட்டுக்கு மழையை அளித்திடுமாம்
நல்ல மருந்தாய் உதவிடுமாம்

பறவைகள் வாழ்ந்திட இடந்தருமாம்
பார்த்தால் பரவசம் தந்திடுமாம்
விறகாய் எரிக்க உதவிடுமாம்
வானை முட்டும் வேப்பமரம்

- இரா. பிரபாகரன்,
பட்டுக்கோட்டை.





அழகு!

நாட்டின் அழகு வளமையில்
நட்பின் அழகு துன்பத்தில்
பாட்டின் அழகு பாக்களில்
பூவின் அழகு மணப்பதில்!

மீனின் அழ்கு துள்ளலில்
மானின் அழகு கண்களில்
மனிதர் அழகு பண்பினில்
மாணவர் அழகு படிப்பினில்!

- பா. கிரிஜா, ஈரோடு.



செருப்பு

புத்தம் புது செருப்பு
புதிய மாடல் செருப்பு
மெத்தை போல மென்மை
மாட்டி நடக்கப் பெருமை.

வெயிலில் போட்டு நடந்தால்
வெப்பம் தடுக்க உதவும்
தயவாய் கேட்டால் கூட
தரவே மாட்டேன் நானே!

- வி. கமலநாதன்,
சென்னை - 2.





தள்ளு வண்டி

தள்ளுச் சக்கர வண்டி - அது
தம்பி ஓட்டும் வண்டி!
மெள்ள நகரும் வண்டி - அது
மணியடிக்கும் வண்டி!
ஒற்றைச் சக்கர வண்டி - அது
உறுதியான வண்டி!
முற்றம் முழுதும் ஓடும் - அது
மாற்று ராகம் பாடும்!
கள்ளக் குறிச்சி வண்டி - அது
கண்ணைக் கவரும் வண்டி!
தள்ளு மாடல் வண்டி - அதால்
தரையெல்லாம் தோண்டி!


- அச்சுதமங்கலம் பாப்பா.

மழையே வா!


மழையே மழையே வா வா
மனது குளிர வா வா
வறட்சி போக்க வா வா
வாட்டம் நீக்க வா வா
நலங்கள் சேர்க்க வா வா
நன்மை ஆக்க வா வா
பகமை தோன்ற வா வா
பஞ்சம் அகல வா வா
வளங்கள் செழிக்க வா வா
வாழ்வு சிறக்க வா வா
பயிர்கள் தழைக்க வா வா
உயிர்கள் பிழைக்க வா வா!

- வடகரைச்செல்வன்

முயலுவீர்



பிருந்தாவனக் கவியரங்கம்



யுத்தம் ஒன்று வந்தது
உலகம் கண்டு பயந்தது!
எத்தனை உயிர்கள் மாண்டது
எண்ணும் போதே நடுங்குது!

அறிவு இயலின் சாதனை
அமைதி மறைந்து வேதனை!
இறந்த உயிர்கள் எத்தனை!
இழப்பு சேதம் எத்தனை!

ஏவு கணைகள் குண்டுகள்
எல்லாம் அங்கே விழுந்தன.
ஈவு இரக்கம் இன்றியே
எல்லாம் எரிந்து போயின!

அமைதி சாந்தி ஓங்கவே
அறிவு இயல் உதவுமோ?
போரை ஒழித்து உயிர்களைப்
பாது காக்க முடியுமோ?

இயற்கைச் சீற்றம் நோய்நொடி
இதனைத் தீர்க்க வழிமுறை
தயக்கம் இன்றிக் கண்டிட
தயவு செய்து முயலுவீர்!

- எம். விஜய பாஸ்கர் சேலம் - 1.





பிருந்தாவனக் கவியரங்கம்

குடும்ப விளக்கு!


கட்டித் தங்க ராசா!
கன்னம் ரெண்டும் ரோசா!
முத்துச் சுடரே வாடா!
முத்தம் ஒண்ணு தாடா!


அன்னை தந்தை தெய்வம்
ஆசான் கல்வித் தெய்வம்
உண்மை இதனை உணர்ந்தால்
உலகில் நிகர் இல்லை!

உன் சிரிப்பைக் கண்டால்
உள்ளம் மகிழ்வு கொள்ளும்!
உந்தன் பேச்சைக் கேட்டால்
உடனே ஓடும் துயரம்!

தம்பி உன்னைப் போல
தங்கத் தம்பி இல்லை!
எம்மை வாழ வைக்கும்
எங்கள் குடும்ப விளக்கு!

- பாசு. தமிழடியான்,
சேலம்.






எங்கள் கிளி!

பச்சை நிறமாம் எங்கள் கிளி
பழத்தைக் கொத்துமாம் எங்கள் கிளி
தத்தி நடக்குமாம் எங்கள் கிளி
தொட்டால் பறக்குமாம் எங்கள் கிளி!

அழைத்தால் வருமாம் எங்கள் கிளி
அமர்ந்து பேசுமாம் எங்கள் கிளி
கிளையில் ஆடுமாம் எங்கள் கிளி
கொண்டை அழகியாம் எங்கள் கிளி!

கழுத்தைச் சாய்க்குமாம் எங்கள் கிளி
கண்ணை உருட்டுமாம் எங்கள் கிளி
எழுதத் தெரியாத அழகுக் கிளி
எப்படித்தான் பேசுதோ எங்கள் கிளி!

- சி. சித்திக் ஆயிசா,
சென்னை - 76.



வெண்ணிலா


விண்ணில் வந்தது வெண்ணிலா
வெளிச்சம் தந்தது பொன்னிலா
கண்ணில் நின்றது அந்நிலா
குளிர்ச்சி தந்தது தண்ணிலா!


நிலவை மேகம் மூடுது
மௌன ராகம் பாடுது
விலகி நிலவும் ஓடுது
வேறிடத்தைத் தேடுது!

வட்டமான வெண்ணிலா
வையமெங்கும் ஓர் நிலா
இட்ட மாக யாவரும்
இனிதே நாடும் வெண்ணிலா!

தங்கம் போல மின்னுது
தவழ்ந்து எங்கோ செல்லுது
எங்கு சென்ற போதிலும்
எம்மை விட்டுச் செல்லுமோ?

- அ. பேரின்பராஜன்,
தெற்கு கள்ளிகுளம்.





மணி பார்க்க அறிவது என்பது ஒவ்வொரு சிறுவரின் வாழ்க்கையிலும் மிகவும் நெருடலான கட்டம். ஒவ்வொருவருக்கும் கடிகாரம் பார்த்து மணியறியக் கற்றுக் கொண்டது சுவைமிக்க தனி அனுபவமாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை! இந்த முயற்சியில் தங்களுக்கு ஏற்பட்ட தடுமாற்றங்கள் அனுபவங்களை மதுரை கள்ளிக்குடி, மேலப்பட்டி, விருதுநகரைச் சேர்ந்த சில சிறுவர் சிறுமியர் உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆர். எஸ். கீதாராணி :

தெலுங்கு கத்துக்க விரும்பின ஒருத்தர் அம்மொழி தெரிஞ்ச ஒருத்தர் கிட்டே போய் தனது ஆசையை வெளியிட்டாராம். அவரும் அதற்கு ஒத்துக்கிட்டு எதிலிருந்து ஆரம்பிக்கிறதுன்னு யோசிச்சாராம். அப்போ அந்த வழியா ஒரு குதிரை போனதாம். தெலுங்கு தெரிஞ்சவர் அந்தக் குதிரையைக் காட்டி, தெலுங்கில் குதிரையைக் 'குர்ரம்'பாங்க என்று பாடத்தை ஆரம்பிச்சாராம். கத்துக்க வந்தவர் உடனே, 'ஹையா! தெலுங்கைக் கத்துக்கிட்டேன்' என்று குஷியாகக் கூவினாராம். கற்பிச்சவருக்கோ ஒன்னுமே விளங்கலே; ''குதிரைக்குக் குர்ரம் என்றால், யானைக்கு அர்ரம்; மாட்டுக்கு மர்ரம்; நாய்க்கு நர்ரம்...!'' என்று அடுக்கிக் கொண்டே போனாராம் தெலுங்கு கத்துக்க வந்தவர்! தெலுங்கு படிக்க வந்த அவசரக்காரர் கதை மாதிரித்தான் மணி பார்க்கக் கத்துக்கிட்ட என்னோட கதையும். அதை இப்போ நெனைச்சாலும் எனக்குச் சிரிப்பா இருக்கு.

ரெண்டாம் வகுப்பிலே படிக்கிறப்போ என் தாத்தாதான் எனக்கு மணி பார்க்கச் சொல்லிக் கொடுத்தார். ''பெரிய முள்ளும் சின்ன முள்ளும்



* மணியடிக்க எனக்குக் கொள்ளை ஆசை!
- எஸ். ஜெயலட்சுமி



* குதிரைக்கு குர்ரம் மாதிரித்தான்!
- ஆர். எஸ். கீதாராணி

பன்னிரண்டில் சேர்ந்திருந்தா மணி பன்னிரண்டு''ன்னு தாத்தா ஆரம்பிச்சதுமே, நான் ''போதும் தாத்தா, இனிமே நானா மணி பாத்துக்குவேன்''ன்னு குதிச்சேன். தாத்தா ஆச்சரியத்தோடு 'எப்படிம்மா'ன்னு கேட்டார். நானோ, ''இதென்ன பிரமாதம்? பெரிய முள்ளும் சின்ன முள்ளும் ஒண்ணுலே சேர்ந்திருக்கப்போ மணி ஒண்ணு; ரெண்டும் ரெண்டிலே இருந்தா மணி ரெண்டு; மூணுலே இருந்தா மூணு மணி...'' இப்படி அடுக்கிக்கிட்டே போனேன். என் அறியாமையை எண்ணிச் சிரிச்ச தாத்தா 'அப்படி இல்லே'ன்னு சொல்லி, மணி, நிமிடம், நொடி சுத்தமா மணி பாக்கிற முறையைச் சொல்லித் தந்தார்!

எஸ். ஜெயகாந்தன் :

எங்க ஊர்ப் பேரூராட்சி ஆபீஸிலே ஒரு மின்சாரச் சங்கு இன்னும் இருக்கு. அதிகாலை அஞ்சு மணி, மதியம் ஒரு மணி, இரவு ஒன்பது மணி - இப்படி ஒரு நாளைக்கு மூணு நடவை அது ஊத ஆரம்பிச்சா, ஒரு நிமிஷ நேரம் காதை இறுக்கமாப் பொத்திக்கணும். அவ்வளவு பயங்கரமான அலறல்! ஒரு மணிச் சங்கு, ஒம்பது மணிச் சங்குன்னு பெரியவங்க பேசிக் கொண்டது ஆரம்பத்துல எனக்குப் புரியவே இல்லே. ஒண்ணு... ரெண்டு... மூணு... நூறு வரைக்கும் எண்ணுறதுக்குத் தெரிஞ்சிக்கிட்டே பின்னாடிதான் சங்கொலிக்கும், அஞ்சு மணி, ஒரு மணி, ஒம்பது மணிங்கிற எண்ணிக்கைக்கும் என்ன சம்பந்தம்னு என் அப்பாவிடம் விசாரிக்க ஆரம்பிச்சேன். அவரும் எனக்கு உடனே விளக்கலே. பதிலா ஏதோ புதிர் போடற மாதிரி எங்கிட்டே புதுப் பொறுப்பு ஒன்னை ஒப்படைச்சார். எங்க வீட்டுச் சுவர்க் கடிகாரத்திலே பெரிய முள், சின்ன முள் ரெண்டையும் சுட்டிக் காண்பிச்சு, மத்தியானம், இரவு, அதிகாலையில் சங்கு ஊதுறப்போவெல்லாம் கடிகாரத்தைப் பார்த்து பெரிய முள் எந்த நம்பரிலே இருக்கு சின்ன முள் எந்த நம்பரிலே இருக்குன்னு பேப்பரிலே குறிச்சி வைக்கச் சொன்னார். எனக்கோ அளவுக்கதிகமா ஆர்வம்! ரொம்பக் கண்ணும் கருத்துமா காத்திருந்து அந்தக் கடமையே சுச்சிதமாக செஞ்சேன். மதியச் சங்கு ஊதுறப்போ சின்ன முள் ஒண்ணுலே; பெரிய முள் பன்னிரண்டிலே! இரவு ஒம்பது மணிச் சங்கு அடிக்கிறப்போ சின்ன முள் ஒம்பதிலே; பெரிய முள் பன்னிரண்டிலே! அதிகாலைச் சங்குக்கு சின்ன முள் அஞ்சிலே; பெரிய முள் பன்னிரண்டிலே. நான் குறிச்சி வச்சதை மறுநாள் அப்பாகிட்டே காண்பிச்சேன். 'பெரிய முள் சரியா பன்னிரண்டிலே இருக்கிறப்போ சின்ன முள் எந்த நம்பரைக் காட்டுதோ, அத்தனை மணின்னு அர்த்தம்' என்று விவரிச்சார். அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமா நிமிஷக் கணக்கு, விநாடியளவு எல்லாத்தையும் படிப்படியா அவரே சொல்லிக் கொடுத்தார். ஆனாலும் என்னைப் பொறுத்த வரைக்கும் மணி பார்க்கக் கற்றுக் கொள்ளும்

ஆர்வத்தைத் தூண்டி விட்ட முதல் ஆசான் எங்க ஊர்ப் பேரூராட்சி மின் சாரச் சங்கொலிதான்!

எஸ். ஜெயலட்சுமி :

எனக்கு இப்பவும் நல்லாவே ஞாப கம் இருக்கு. அப்போ நான் ரெண்டாம் வகுப்பு படிச்சிட்டிருந்தேன். அஞ்சாங் கிளாஸ் வரைக்கும் இருந்த எங்க பள்ளிக் கூடத்திலே அப்போதெல்லாம் பியூன் கியூன் யாரும் கிடையாது. ஒவ்வொரு பீரியடுக்கும் கடிகாரம் பார்த்து மணி யடிக்கிறது, படிக்கிற குழந்தைங்கதான். எங்களுக்கெல்லாம் எட்டும்படி ஒரு பெரிய தண்டவாள மணி மரக்கிளையிலே கட்டி ரொம்ப





* இதுல எனக்கு ஆசான் சங்கொலிதான்!
- எஸ். ஜெயகாந்தன்



* பெரிய முள் ஆறுக்கு வந்தாலும் கூட ஒரு தடவை அடிக்குதே! இது ஏன்?
- ச. முத்துலட்சுமி

* நத்தா முள்ளுதான் மணியைக் காட்டுற முள்!
- ஜோயல் கிருபாகரன்

வும் தாழ்வாத் தொங்கும். வழவழப் பான மணிக் கம்பியைப் பிடிச்சி 'கணங் கண'ன்னு மணியடிக்கிறதுக்கு அந்தச் சின்ன வயசிலே எங்களுக்குக் கொள்ளை ஆசை! ஆனா ஆசைப்பட்ட வங்க எல்லாரும் மணியடிச்சிட முடி யாது. அஞ்சாம் வகுப்புப் படிக்கிற அண் ணன் ஒருத்தர் கடிகார மந்திரின்னு இருப் பார். என்ன, அதிசயமா இருக்கா? பள்ளிச் சுத்தம் பாக்கிறதுக்குச் சுகாதார மந்திரி, குடி தண்ணீர் வசதியைக் கவ னிக்கத் தண்ணி மந்திரி; அது போலக் கடி காரம் பார்த்து மணியடிக்க வைக்க கடி கார மந்திரின்னு இருப்பாங்க. அவர் சொல்றவங்கதான் மணியடிக்கணும். ஆனா அவர் கூட நெனைச்சவங்களை வச்சி மணியடிச்சிட முடியாது. யாருக் கெல்லாம் கடிகாரம் பார்த்து மணி சொல்லத் தெரியுமோ, அவங்களைத் தான் மணியடிக்க ஏவணும். இதுல ரொம்பவும் கண்டிப்பு. எனக்கோ ஒன் ணாங் கிளாஸிலிருந்தே மணியடிக்க ஏகப்பட்ட ஆசை. அந்த ஆசை நிறை வேற மணி பார்க்கத் தெரியணுமே? என் அப்பாகிட்டே போயி என் ஆசையைச் சொன்னேன். என் ஆர்வத்தைப் பார்த்து அவருக்கு ரொம்பச் சந்தோ ஷம். டைம் பீஸை வச்சி, இந்த முள்ளும் இந்த முள்ளும் இன்ன இன்ன நம்பர்களில் இருந்தா இத்தனை மணி, இத்தனை நிமிஷம் என்று சொல் லிக் கொடுத்தார். மறுநாளே மணியடிக் கும் என் ஆசை நிறைவேறி விட்டது!

ஜோயல் கிருபாகரன் :

ரெண்டாம் வகுப்பு கணக்குப் புத்த கத்திலே மணியளவுபத்தி பாடம் வந் திருந்திச்சு. அதை நடத்தறப்போ எங்க

டீச்சர்தான் வீட்டிலிருந்து அலாரம் டைம் பீஸை கொண்டாந்தாங்க. அதிலே மணியைக் காட்டுற குட்டை முள், நிமிஷம் காட்டுற நீள முள், நொடியைக் காட்டுற ஒல்லி முள்... இப்படி மூணு முள்ளுகள் இருந்தன. அந்த மூணு முள்ளுங்களை வச்சி எங்க டீச்சர் கதை மாதிரி சொன்னாங்க. ''ஒரு இடத்திலே நிலையா நிக்காமே எப்பவும் ஓடிக்கிட்டே இருக்க இந்த ஒல்லியான முள்ளு ஒரு துறுதுறுப்பான குட்டிப் பையன் மாதிரி. இந்தக் குட்டிப் பையன் ஒரு நம்பரிலிருந்து அதுக்கடுத்த நம்பருக்கு வந்தா அந்த வினாடி நேர முன்னு கணக்கு வைக்கணும். பெரிய முள் இருக்கே அது இந்தக் குட்டிப் பையனோட அப்பா; அவர் தன் பையனைப் போல வேகமாக ஓட மாட்டாரு. நிதானமா நடக்கிற மாதிரி இந்த முள் மெல்லத்தான் சுத்தி வரும். இந்த அப்பா முள் ஒரு நம்பர்லேருந்து அடுத்த நம்பரைப் போய்ச் சேரும் நேரத்தை அந்த நிமிஷமுன்னு கணக்கு வைக்கணும். சின்ன முள் கூனிக்குறுகிக் குட்டையாப் போன தாத்தா மாதிரி. கம்பை ஊனி நடக்குற தாத்தாவைப் போல இந்த முள் நம்ப கண்ணுக்குக் கூடத் தெரியாத அளவுக்கு எவ்வளவு மெதுவா நகர்ந்து போகுது பாத்தீங்களா? இந்தத் தாத்தா முள்ளுதான் மணியைக் காட்டுற முள்ளு. அது ஒரு நம்பர்லேருந்து அடுத்த நம்பருக்குப் போனா ஒரு மணின்னு அர்த்தம்.''


இப்படி ஒரு உவமானக் கதையைச் சொல்லி கத்துக் கொடுத்ததாலோ என்னவோ, ஒரே பீரியடுக்குள்ளேயே மணி, நிமிஷம், செகண்ட் எல்லா விஷயங்களும் எனக்கு நல்லாவே புரிஞ்சிட்டது!

ச. முத்துலட்சுமி :


எங்க வீட்டிலே எனக்கு விவரம் தெரிய சுவர்க் கடிகாரம், டைம்பீஸ் இரண்டும் இருந்தன. என் சின்ன வயசிலே அந்த ரெண்டுமே எனக்கு ஏதோ அலங்காரப் பொருள் போலத்தான் தெரிஞ்சது. நான் பாலர் பள்ளியிலேயே சேர்ந்து ஒண்ணு, ரெண்டு எழுதக் கத்துக்கிட்டவுடன் கடிகாரத்திலுள்ள எண்களைப் புரிஞ்சிக்கிட்டேன். ஆனா, அப்பா ரயிலுக்கும் பஸ்ஸுக்கும் கிளம்புற போது அதைப் பார்த்துட்டு அவசரமாப் போறதன் அர்த்தம்தான் எனக்கு விளங்காமே இருந்தது. அப்புறமா அம்மாகிட்டே கேட்டப்போ, மணிக் கணக்கு பத்தி ஓரளவு தெரிஞ்சிக்கிட்டேன். முதல்லே நான் கத்துக்கிட்டது சுவர்க்கடிகாரம் ஒரு தரம் அடிச்சா ஒரு மணி, ரெண்டு தரம் அடிச்சா ரெண்டு மணி என்கிறதுதான். ஆனா அப்பவும் எனக்கு ஒரு பெரிய குழப்பம். பெரிய முள் ஆறுக்கு வரும்போதெல்லாம் ஒரு தரம் அடிக்குதே! இது எதுலே சேர்த்தி? அம்மாகிட்டே என் சந்தேகத்தைக் கேட்டேன். அவங்க சொன்னாங்க. ''பன்னிரண்டிலே பாதி ஆறு; பெரிய முள்ளு ஆறுக்கு வரும்போதெல்லாம் அது அரை மணி அளவைக் குறிக்கும். அதுக்கு அடையாளமாகத்தான் ஒருதரம் மணியடிக்குது. ஆறிலே பாதி மூணு; அரையிலே பாதி காலு; பெரிய முள் மூணுக்கு வரும் போது கால் மணி நேரமுன்னு கணக்கிடணும். ஆறும் மூணும் ஒன்பது; அரையும் காலும் முக்கால்; பெரிய முள் ஒன்பதுக்கு வந்தா முக்கால் மணி.''

நான் மொதல்லே அரை, கால், முக்கால் இப்படி பெரிய அளவிலேதான் மணி பார்க்கப் பழகினேன். அஞ்சாம் வாய்ப்பாடு தெரிஞ்ச பின்னாடிதான் நிமிஷம், வினாடி பற்றித் துல்லியமாப் புரிஞ்சது.


பேட்டி, படங்கள் :
குரு. சீனிவாசன்



''ஒண்ணுலேந்து அம்பது வரை எழுதச் சொன்னா என்னடா முப்பது வரைக்கும்தான் எழுதியிருக்கே?''
''அதோ மாட்டியிருக்கிற காலண்டர்லே முப்பது வரைக்கும்தானே சார் இருக்கு?''
– சீர்காழி வி. ரேவதி



சிரிப்....
ஒட்ட, 'கம்' வாங்கியாறச் சொன்னா ஒட்டகத்தை வாங்கி வந்திருக்கியே!
உங்க கிளாஸ்ல எப்பவும் வகுப்பறைக்கு வெளியிலயே நிற்கிறது யாரு...
எங்க கிளாஸ்லயே அவன் தான்டா OUTSTANDING மாணவன்!
அந்த நோட்டீஸை முறைச்சி பார்க்கியே, அதுல என்ன இருக்கு?
நோட்டீஸ் தின்னாதேன்னு எழுதி இருக்கு
மு. பூபாலன்
எல்லா சிங்கங்களும் ஊர்வலம் போறாங்களே என்னவாம்?
போஸ்ட்-கார்டில் 'புலி' உருவத்தை எடுத்துட்டு சிங்கத்தைப் போடணுமாம்
நம்ம பையன் படம் எடுக்கத் தானே ஆசைப் பட்டான்? விட்டுட வேண்டியது தானே?
நீங்க வேற! அவன் 'சினிமா படம்' எடுக்கணுமாம்!
கே. சோமசேகர்



நூறு ரூபாய் இரகசியம்!

10. இரகசியம்

ஆட்டோகாரனிடம் பேசிக் கொண்டிருந்த புருவமில்லாத உருவத் தான் தனக்கருகே யாரோ தடதட வென்று வேகமாக ஓடி வரும் சத்தமும், திடீரென எழுந்த ஓங்கார ஒலியும் கேட்டு, தெற்கு நோக்கித் திரும்பினான். காற்றிலே மிதந்து, தன்னை நோக்கிப் பறந்து வரும் பரதனின் குள்ள உருவத்தை முழுவதுமாகப் பார்க்கும் முன்பே, பரதன் அவன் மீது மோதி னான்.

தன்னைத் தாக்கியது எது?

இடியேறா?

பீரங்கியிலிருந்து புறப்பட்ட இரும்புக் குண்டா?

அமெரிக்காவின் ஸ்கட் ஏவு கணையா?

அவன் எது என்று உணரும் முன்பே பரதனின் மோதல் ஏற்படுத்திய பெரு வலியோடு 'ஐயோ' என்று அலறியபடி தள்ளாடித் தரையில் சாய்ந்தான்.

வீழ்த்திய பரதனும் வீழ்ந்தவன் மீதே விழுந்தான். ஆனால், வினாடியில் அவன் மார்பில் இரு முழங்கால்களையும் ஊன்றி, உட்கார்ந்துவிட்டான்! அந்த நிலையில், கம்சனை அழிக்க அவன் மார்பில் உட் கார்ந்த சின்னக் கண்ணன் போலத் தோன்றினான் பரதன்.

''என்ன நடந்தது?

என் மீது உட்கார்ந்திருப்பவன் யார்?

இவன் என் மீது ஏன் மோதினான்?

தற்செயலாக மோதினானா? அல்லது திட்டமிட்டுச் செயல்பட் டானா?''

புருவ மற்றவனை மேலே யோசிக்க விடாமல் தடுத்தது பரதனின் குரல்.

''திருடன்! திருடன்! திருடன்!''

டாக்டர் பூவண்ணன்

பரதனின் கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான் புருவமற்றவன்.

''திருடனா? யார்? நானா?''

''ஆமாம்! நீதான் திருடன்! இந்த நாட்டின் பொருளாதாரத்தைத் திருடும் கள்ள நோட்டுத் திருடன்! ஆமாம் நீ கள்ள நோட்டுக் கள்ளன்!''

''கள்ள நோட்டு' என்னும் தொடர் அவனை அதிர்ச்சியடையச் செய்தது.


''கள்ள நோட்டுக் கள்ளனா? என்னப்பா சொல்றே?''

''நீ கள்ள நோட்டுக் கள்ளன்னு சொல்றேன். ஜி.சி.டி. வளாகத்தில் நீ விட்டுட்டுப் போன, ஒரு பக்கம் மட்டும் அச்சான நூறு ரூபாய் நோட்டு கள்ள நோட்டு எங்கிட்டே இருக்கு.''

புருவமற்றவன் முகம் பரதன் சொன்னதைக் கேட்டு வெளுத்தது.

''அந்த நோட்டு உங்கிட்டேயா இருக்கு?''

''ஆமாம்! கள்ள நோட்டுக் கள்ளா, உன்னை விடமாட்டேன். போலீஸ்! போலீஸ்!''




பரதன் உரக்கக் கத்தினான். அதே சமயம் சிறிது தூரத்தில் ஒரு போலீஸ் காரன் வந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்துவிட்ட புருவமற்றவன், எழுந்து மாடாரென்று பரதனைக் கீழே தள்ளி விட்டு, நொடியில் அசோகா பிளாசா வின் பிரதான வாயிலில் நுழைந்து ஓடி னான்.

பரதனும் உடனே அவனைப் பின் தொடர்ந்து ஓடினான்.

பரதனை ஏற்றிக் கொண்டு வந்த அந்தோணி சாமியும், ஞானமும் விக்டரும் இதுவரை நடந்ததை விவரிக்க முடியாத வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றனர். புருவமற்றவனும் பரதனும் பிளாசாவுக்குள் ஓடியதைப் பார்த்ததும், ''அந்தோணி, நீ சைகிளில் அப்சரா தியேட்டர் பக்கம் போ... நான் பரதன் பின்னால் போறேன். விக்டர், நீ இங்கேயே இருந்து அவன் இப்படி வரானான்னு பாரு. எப்படியும் அந்தப் புருவமில்லாதவனைத் தப்பவிடக் கூடாது'' என்று சொல்லிவிட்டு, பரதன் ஓடிய வழியிலே ஓடினான் ஞானம்.

பரதன் இப்படி வெளிப்படையாக புருவமற்றவனைத் ''திருடன்'' என்று சாடுவான் என்பதை அந்தோணியும் சரி மற்ற நண்பர்களும் சரி, சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதனால் அவர்கள் பரபரப்படைந்தனர். முதலில் தெளிந்தவன் ஞானம்தான். அவன் உத்தரவிட்டதும் நண்பர்கள் உடனே கீழ்ப் படிந்தனர்.



அந்தோணி சைகிளில் ஏறி, பிளாசாவின் பின்புறமுள்ள அப்சரா தியேட்டரை நோக்கிச் சென்றான்.

விக்டர் ஞானத்தின் சைகிளுக்கு அருகே, அதைப் பிடித்தபடி, மீண்டும் அந்தப் புருவமில்லாதவன் கண்ணில் படுகிறானா என்று பார்த்தபடி நின்றான்.

பரதன் வேகமாக ஓடினான். பிளாசாவின் பிரதான வாயிலில் நுழைந்ததும், வலப்புறமும் இடப் புறமும் கடைகள். வலப்புறமாக, பிளாசாவைவிட்டு வெளியேற முடியாது. இடப்புறமாக வெளியேறும் வழி இருந்தது அவனுக்குத் தெரியும். அதனால், இடப்பக்கமாக ஓடினான். கண்கள் புருவமற்றவனைத் தேட, கால்கள் வேகமாக ஓடின. வெளியே செல்லும் வழியில் அவன் ஓடினான். அது பிளாசாவின் தென்புறம், அப்சரா தியேட்டருக்குள் செல்லும் பாதை. அந்தப் பாதையில் வலப்பக்கம் போவதா? இடப் பக்கம் போவதா? அவன் யோசிக்க நேரம் எடுத்துக் கொள்ள விடாமல் அந்தோணி சைகிளில் அங்கே வந்தான். பரதனின் பார்வையைப் புரிந்து கொண்டு, ''அவன் இந்தப் பக்கம் வரலை, தியேட்டர் பக்கம் போயிருப்பான்'' என்றபடி சைகிளை மிதித்தான். பரதன் பின்னே ஓடினான்.

அப்சரா தியேட்டரின் வெளி கேட்டு மூடியிருந்தது. உள்ளே ஏராளமான கூட்டம்.

அது பகல் காட்சியின் இடைவேளை. அதனால் கேட்டுவழியே எவனும் உள்ளே போக முடியாது.


அந்தோணியின் சைகிள் அந்தக் கேட்டருகே நின்றது.

பரதன் சில விநாடியில் அங்கே வந்தான்.

அடுத்த சில விநாடியில் ஞானமும் அங்கு வந்து சேர்ந்தான்.

மூவரின் ஆறு கண்களும் கேட்டின் மறுபுறம் பப்ஸும் பிஸ்கட்டும் கடித்தபடியும், ஐஸ் கிரீமைச் சுவைத்தபடியும் நின்றும் அசைந்தும் நடந்த கூட்டத்தினரை வெறித்து நோக்கின.

''அவன் இந்தக் கூட்டத்தில் கலந்து விட்டிருப்பானோ?''



''உனக்குப் பிடிச்ச இசைக்கருவி எதுண்ணே?
''புல்'' லாங் குழல்தான்!''

- மொரப்பூர் ஆ. நவ்சாத்.

பரதன் கேட்டான்.

''கேட்டு மூடியிருக்கே?''

இது ஞானம்.

''மூடியிருந்தால் என்ன? பரதனுக்கும் போலீசுக்கும் பயந்து ஓடறவன் இந்தக் கேட்டைத் தாண்டத் தயங்கமாட்டான்,'' அந்தோணி சொன்னான்.

''நான் கேட்டைத் தாண்டி உள்ளே கூட்டத்தில் போய்ப் பார்க்கட்டுமா?''

ஞானம் கேட்டான். பரதன் 'உம்' என்று அனுமதி வழங்கினான்.

உடனே ஞானம் அந்தக் கேட்டின் மீது தாவினான். அந்தோணி அவனைத் தூக்கி விட்டான். மறு விநாடி ஞானம் அந்தக் கூட்டத்தில் சங்கமமானான்.

''பரதா, அவன் கேட்டைத் தாண்டி போயிருந்தா, மறு கேட்டின் வழியே வெயேறவும் முடியும். நான் அந்தக் கேட்டுக்குப் போறேன்'' என்ற அந்தோணி சைகிளை வந்த வழியில் திரும்பி, அப்சராவின் மேற்கு வாயிலுக்குப் போக பெடலை மிதித்தான்.

சுமார் ஐந்து நிமிடமானது.

இடைவேளை முடிந்ததற்கான மணி ஒலித்தது.

அரங்கின் வெளியே இருந்த கூட்டம் மெல்ல மெல்லக் கரைந்தது. அனைவரும் மீண்டும் திரைப்படம் பார்க்கச் சென்று விட்டனர்.

ஞானம் மட்டும் எதிர் நீச்சல் போடுபவனைப் போல தியேட்டருக்குள் செல்லும் மக்களிடையே நுழைந்து வெளியே வந்து கொண்டிருந்தான்.

அதற்குள் மேற்கு வாயிலுக்கு அந்தோணியும் வந்து விட்டான். அவனைப் பார்த்த ஞானம், ''அந்த ஆள், உள்ளே இல்லை'' என்பதைக் குறிப்பிட கையை விரித்து உயர்த்தி உடுக்கை அடிப்பது போல அசைத்தான்.

பரதன் நிற்கும் கேட்டை நோக்கி ஞானம் நடக்க, தியேட்டரின் வாட்ச்மேன் காப்பி குடித்த உற்சாகத்தோடு அவனை முந்திக் கொண்டு கேட்டருகே வந்து நின்றான்.

ஞானம் கேட்டை நெருங்கியதும், வாட்ச்மேன் ''படம் பிடிக்கலையா? வீட்டுக்குப் போறையா?'' என்று கேட்டான்.

ஞானம் தலையாட்ட, வாட்ச்மேன் பூட்டைத் திறந்து, கதவைத் தள்ளினான்.

ஞானம் வெளியே வந்து விட்டான்.

ஞானம், பரதன் இருக்கும் இடத்தை அடைந்தான்.

''அந்த ஆசாமி உள்ளே இல்லையா?''

பரதன் கேட்டான்.

''இல்லைன்னுதான் நினைக்கிறேன். தியேட்டருக்குள்ளேயும் போய்ப் பார்த்தேன். அவனைக் காணோம். இன்னைக்கு அவுஸ்ஃபுல். அதனால் அவன் தியேட்டரில் உட்கார காலி இடம் இருக்காது. ஒரு வேளை இந்தக் கேட்டைத் தாண்டி உள்ளே வந்தவன், மறு கேட்டைத் தாண்டி வெளியே போயிருக்கலாம். இப்போ என்ன செய்யலாம்?''

''முதலில் நம்முடைய ஸ்கூலுக்குப் போவோம். புத்தகங்களை எடுத்துகிட்டு எங்க வீட்டுக்குப் போகலாம். அம்மா வீட்டிலே இருக்கமாட்டாங்க. அதனால் நாம் அங்கே ஃபிரியா விவாதிக்கலாம்'' என்றான், பரதன்.

அதற்குள் அந்தோணி அங்கே வந்தான். மூவரும் விக்டர் நிற்கும் இடத்துக்கு வந்தனர்.

விக்டருக்கு நன்றி தெரிவித்து அவனை அனுப்பிய பரதன், ஞானத்தின் சைகிளில் ஏறிக் கொண்டான். ஞானத்

தின் சைகிளும், அந்தோணியின் சைகிளும் பள்ளியை நோக்கி மெல்லச் சென்றன. புருவமில்லாதவனைக் கண்டு பிடித்து அவனைத் தப்ப விட்ட சோகம் அவர்களைச் சூழ்ந்திருந்தது நன்றாகத் தெரிந்தது.

இவர்கள் செயல்களையெல்லாம், அசோகா பிளாசாவின் மாடியிலிருந்து இருவர் கவனித்துக் கொண்டிருந்ததை, பரதனோ மற்றவர்களோ பார்க்கவில்லை.

புத்திசாலியான பரதன் கூட அவசரத்தில் அசோகா பிளாசாவுக்கு மாடி உண்டு என்பதை மறந்து விட்டான். பரதனைத் தள்ளிவிட்டு அசோகா பிளாசாவினுள் ஓடிய புருவமில்லாதவன், அதன் மாடிப்படியில் ஏறிவிட்டான். அதை உணராத பரதனும் ஞானமும் கீழ்த்தளத்தில் பார்த்துவிட்டு வெளியேறி விட்டனர்.

மாடியில் ஒரு கடையில் 'போன்' செய்து கொண்டிருந்தான், அதிசயப் புரு வத்தினருள் மற்றொருவனான டூத்பிரஷ் புருவத்தான். அவன், புருவமில்லாதவன் ஓடிவருவதைப் பார்த்து, போனை வைத்து விட்டு அவனிடம் ஓடிவந்தான்.

புருவமில்லாதவன் அவனிடம் கீழே நடந்ததைக் கூறினான். இருவருமாக மாடியின் தென்பகுதியிலிருந்து கீழே பார்த்தார்கள். அப்சரா தியேட்டர் அருகே பரதன் முதலியோர் நிற்பதைக் கவனித்தார்கள். மிக எச்சரிக்கையாக, பரதன் முதலியோர் பார்வை பிளாசா பக்கம் திரும்பினாலும் அவர்கள் கண்ணில் படாமல் நின்று கவனித்தார்கள். இதையும் பரதனும் அவன் நண்பர்களும் கவனிக்கத் தவறிவிட்டார்கள்.

விக்டர் விடை பெற்றுப் போனதும், இரண்டு சைகிளில் பரதன் முதலிய மூவரும் செல்வதை அதிசயப் புருவத் தினர் பார்த்தனர். மோனலிசா புருவத் தான் அடுத்தவனிடம், ''இதோ சைகிளின் பின்னே உட்கார்ந்து போகிறானே குள்ளன், இவன் வீடு எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம். தெரிந்து கொண்டு நம் இடத்துக்கு வா'' என்றான்.



வாழ்வாயே என்றென்றும்!

பிள்ளை களுக்காய் பிறவியினை
பெரிதும் கழித்த பெரியோனே!
கள்ள மில்லாக் குழந்தைகளை
கதையால், பாட்டால் கவர்ந்தோனே!

குழலும் யாழும் பொய்யன்றோ?
குழந்தை முன்னே மெய்யன்றோ?
குழந்தையும் நீயும் ஒன்றன்றோ?
கும்பிடும் தெய்வமும் நீயன்றோ?

குழந்தைக் கவிஞர் என்றாலே
குதித்து ஆடா குழந்தையுண்டோ?
அழ.வள்ளியப்பா என்றாலே
ஆடிப் பாடா மனமுண்டோ?

சின்னஞ் சிறுவர் நெஞ்சினிலே
சிரஞ்சீ வியாக வாழ்பவனே!
என்றும் உனக்கு இறப்பில்லை;
என்றென் றும் நீ வாழ்வாயே!

- அ. கப்பையன்

டுத்பிரஷ்காரன் அதன்படி ஒரு ஆட்டோவில் ஏறி இரண்டு சைகிள்களையும் பின் தொடர்ந்தான். அந்த ஆட்டோ பள்ளிக்கு வந்து, பின்பு பரதன் வீட்டுக்கும் வந்ததை, பரதனோ மற்றவரோ அறியவில்லை. குள்ளன் வீட்டைத் தெரிந்து கொண்ட டூத் பிரஷ் புருவத்தான், தன் வேலை முடிந்தது என்று போய்விட்டான்.

பரதன், ஞானம், அந்தோணிசாமி மூவரும் பரதன் வீட்டில் ஆலோசனை செய்தனர்.

''நான் ஜி.சி.டி. யில் கண்டெடுத்த நோட்டு, இந்த அதிசயப் புருவத்தினர் போட்டுவிட்டுச் சென்றதுதான் என்பது சரியாகத் தெரிந்துவிட்டது. இப்போது போலீசிடம் விஷயத்தைச் சொல்லி விடலாமா?''

பரதன் கேட்டான்.

''சொல்லலாம்'' என்றனர் ஞானமும் அந்தோணிசாமியும்.

''சரி, எதற்கும் நாகனிடமும் இதைப் பற்றிக் கூறுகிறேன். அவன் கருத்தையும் கேட்டுக் கொண்டு ஒரு முடிவுக்கு வருகிறேன்'' என்றான் பரதன்.

மறுநாள் காலை பரதன் நாகன் வீட்டுக்குச் சென்றான். நாகனுடைய தந்தையை ஜாமினில் விடுதலை செய்வதில் கொஞ்சம் சிக்கல். அதனால் சொந்தக்காரரான ஒரு அரசியல் பிரமுகரைப் பார்த்து அவர் உதவியைக் கேட்க நாகன் சென்றிருப்பதாகக் கூறினர். அதனால் மாலையில் நாகனைப் பார்க்கலாம் என்று முடிவு செய்த பரதன் பள்ளிக்குச் சென்று விட்டான்.

மாலை, ஞானமும் பரதனும் ஒரு சைகிளிலும், அந்தோணிசாமியும் விக்டரும் இன்னொரு சைகிளிலும் பரதன் வீட்டுக்கு வந்தனர்.

பரதன் சாவியை எடுத்துப் பூட்டைத் திறக்க முயன்றான்.

கதவில் பூட்டு இல்லை!

''அம்மா பூட்டாமல் வெளியே புறப்படமாட்டாங்களே!'' என்று கூறியபடி பரதன் கதவைத் தள்ளித் திறந்தான்.

உள்ளே.....

பொருள்கள் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன! வீட்டில் இருந்த ஒரே ஒரு டிரங்கு பெட்டி திறந்து கிடந்தது. அதிலிருந்த பொருள்கள் அருகே கிடந்தன. பரதனின் புத்தக அலமாரியிலிருந்த புத்தகங்களும் தாறுமாறாகத் தரையில் கிடந்தன!


பரதனுடன் உள்ளே நுழைந்த மூவரும் இதைக் கண்டு திகைத்தனர்.

''பரதா, யாரோ உன் வீட்டைத் தலைகீழாகப் புரட்டி எதையோ தேடியிருக்கிறார்கள்'' என்றான் அந்தோணி.

''ஆமாம், என் வீட்டில் புதையலா இருக்கிறது? ஒரு குண்டுமணி அளவு பொன்னும் இல்லை விலை மிக்க பொருளும் இல்லை. குடிசையில் இருக்கும் எவர்சில்வர் சாமான்கள் கூட என் வீட்டில் இல்லை. எல்லாம் அலுமினியப் பொருள்கள்.''

''அப்படியிருக்க யார் உன் வீட்டில் நுழைந்தார்கள்? எதற்காக சாமான்களை இப்படி இரைத்திருக்கிறார்கள்?'' - விக்டர் கேட்டான்.

''அதை என்னால் யூகிக்க முடியும். நேற்று நான் மோதித் தள்ளினேனே, அந்த மோனலிசா திருடன் தான் இந்த வேலையைச் செய்திருப்பான். ஒரு பக்கம் அச்சான கள்ள நோட்டைப் பற்றி நான் சொன்னதும் அவன் மிகவும் கலவரமடைந்தான். அவன்தான் எப்படியோ என் வீட்டைக் கண்டு பிடித்து உள்ளே நுழைந்திருக்கிறான். வீட்டிலே அந்த நோட்டைத் தேடியிருக்கிறான்.''



''அப்பா விளையாட்டிலும் சரி மத்ததிலயும் சரி..... வெற்றி தோல்வியெல்லாம் பார்க்க கூடாது. கலந்துக்கிறதுதான் முக்கியம்னு நீங்கதானே சொல்லுவீங்க...''

''ஆமா.... அதுக்கென்ன....''

''என்னோட 'ரிசல்ட்' வந்திருக்கு!''

- கே. சோமசேகர்.

''அது அவன் கையில் கிடைத்து விட்டதா பரதா?''

அந்தோணியின் கேள்விக்கு பரதன் பதில் அளிக்கும் முன், ஞானம் பேசினான்.

''கிடைக்கவில்லை. கிடைக்காது. ஏன் தெரியுமா? பரதன் அந்த நோட்டை என்னிடம் கொடுத்து வைத்திருக்கிறான்.'' என்றபடி, ஞானம் தனது பர்ஸிலிருந்து ஒரு பக்கம் அச்சான நோட்டை எடுத்துக் காட்டினான்.

''நண்பர்களே, இந்த நோட்டைத் தேடி பூட்டை உடைத்து வீட்டுக்குள் நுழைந்திருக்கிறார்கள் என்றால், இதில் அவர்களுக்கு வேண்டிய, அல்லது அவர்களுக்கு எதிராக சாட்சியாகக் கூடிய இரகசியம் எதுவோ இருக்கிறது என்று பொருள். ஒவ்வொருவராக இதைப் பாருங்கள். இந்த நோட்டு வேறு ஏதாவது முக்கிய தகவல் தருகிறதா? கவனித்துப் பாருங்கள்.''

பரதன் கூறிவிட்டு ஞானத்திடமிருந்த நோட்டை வாங்கி விக்டரிடம் கொடுத்தான். அவன் அதை முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்துவிட்டு அந்தோணியிடம் தந்தான். அந்தோணி சில நொடிகளில் அதில் விசேஷமாக ஒன்றும் இல்லை என்று ஞானத்திடம் கொடுத்துவிட்டான்.

ஞானம் முன்னரே அதைப் பல முறை பார்த்திருந்தான், என்றாலும் அவனும் அதை வாங்கி உற்றுப் பார்த்தான். ''ஒன்றும் தெரியவில்லை'' என்று அதை பரதனிடம் கொடுத்தான்.

''எனக்கும் இதில் ஏதோ இரகசியம் இருப்பதாகத் தெரியவில்லை'' என்றான் பரதன். அப்படிச் சொல்லிவிட்டு நோட்டை ஞானத்திடம் கொடுக்க நீட்டினான். அப்போது அவன் பார்வை, நோட்டைப் பற்றியிருந்த பெரு விரலில் படிந்தது. பெரு விரல் பிடித்த நோட்டுப் பகுதியில் படிந்தது. உடனே அந்த நோட்டைக் கண்ணருகே கொண்டு வந்து பார்த்தான். மறு நிமிடம், ''கண்டு பிடிச்சுட்டேன். இந்த நோட்டில் என்ன இரகசியம் இருக்கு என்பதைக் கண்டு பிடிச்சுட்டேன்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியபடி, துள்ளிக் குதித்தான் பரதன்!

(தொடரும்)



''பாம்பு படம் எடுத்தவுடன் பிறகு என்ன செய்யும்?''

''நல்லா ஓடினா இன்னொரு படம் எடுக்கும்.''

- எஸ். சபினா பேகம்.



''பல் இல்லாமயே கடிப்பது எது?''

''செருப்பு.''

- சோமசேகர்.



''கல்யாணத்துல வாழைமரத்தை ஏன் கட்டி வைக்கிறாங்கன்னு சொல்லு.''

''தெரியவில்லையே ஏன்?''

''அதைக் கட்டலைன்னா விழுந்துடுமே! அதான்!''

- ஜெ. சலீம்.

யாரிடமும் சொல்லாதே!



மன்னர் 'ஷா' அவர்களிடம் விசுவாசமான வேலைக்காரன் ஒருவன் இருந்தான். ஒரு சமயம் பரம இரகசியமான விஷயம் ஒன்று மன்னருக்குத் தெரியவர, அவர் வேலைக்காரனை அழைத்து "உன்னிடம், ஒரு பரம இரகசியத்தைக் கூறுவேன். அது உனக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியும். அதை வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாது. மீறி வெளியிட்டு விட்டால் எனக்குத் தெரிந்துவிடும். உனது தலையையே வாங்கி விடுவேன்!" என்று எச்சரிக்கை செய்து அந்தப் பரம இரகசியத்தைக் கூறினார் அரசர்.

மூன்று மாத காலம் வரை பொறுமையாக இருந்த அவ்வேலைக்காரனால், அதற்கு மேல் பொறுக்க முடியாமல் தனது நண்பனிடம் அந்தப் பரம இரகசியத்தைக் கூறிவிட்டான். அது அப்படி அப்படியே வெளியில் பரவி விட அரசரின் காது வரை எட்டி விட்டது.


உடனே பயங்கரமான கோபமடைந்த அரசர், இரகசியத்தைக் காப்பாற்ற மறந்த தனது வேலைக்காரனை 'சிரச்சேதம்' செய்யும்படி ஆணையிட்டார். தண்டனையை நிறைவேற்றும் நாளன்று அங்கு வந்த மதப் பெரியவர் ஒருவர் பணிவுடன் மன்னனை அணுகி, "அரசே! இந்த இரகசியத்தை நீங்களே மனதினுள் வைத்துக் கொள்ளாமல் வேலைக்காரனிடம் கூறியதன் காரணம் என்ன என்பதை அறியலாமா?" என்று வினவினார்.

அரசர், "என்னால் அதை மனதிற்குள் பூட்டி வைக்க முடியவில்லை. யாரிடமாவது சொல்ல வேண்டும் என்ற துடிப்பை அடக்க முடியவில்லை. அதனால்தான் விசுவாசமான ஊழியன் ஆயிற்றே என்று அவனிடம் வெளிப்படுத்தி நான் நிம்மதியடைந்தேன்" என பதிலளித்தார்.

பொறுப்புமிக்க மன்னரான உங்களாலேயே ஒரு இரகசியத்தைக் காப்பாற்ற முடியவில்லை என்றால், சாதாரணமான வேலையாள் ஒருவனால் அதை எப்படிப் பாதுகாக்க முடியும்? எனவே அவன் குற்றவாளி ஆக மாட்டான்" என்றார் பெரியவர்.

அரசர் வேறு வழியின்றி வேலைக்காரனை விடுதலை செய்தார்.

– ஏ. ஜே. ஜ.





தண்டனை கொடு!

பாரத நாட்டின் பெருமை மிக்க ரிஷிகளில் சங்கு, லிகிதர் என்ற இருமுனிவர்கள் மிகவும் சிறப்பானவர்கள். இவர்கள் இருவரும் சகோதரர்கள். மூத்தவர் சங்கு, இளையவர் தான் லிகிதர்.

இருவரும் இணைபிரியாதவர்கள். எனினும், கங்கைக் கரையில் ஆசிரமம் அமைத்துத் தனித் தனியே வாழ்ந்து வந்தனர்.

நாள் தவறினாலும் தவறலாம். இரு சகோதரர்களும் சந்தித்துக் கொள்வது மட்டும் என்றும் தவறாது. காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு லிகிதர் அண்ணனின் ஆசிரமத்துக்குச் சென்று வணங்கி வருவார். மாலைக் கடமைகளை முடித்துக் கொண்டு சங்கு முனிவர், தம்பியின் ஆசிரமத்துக்குச் சென்று வாழ்த்திவிட்டு வருவார்.


ஒரு நாள், லிகிதர் காலையில் வழக்கப்படி தம் அண்ணனைக் காணச் சென்றார். அப்போது நல்ல கோடைக் காலம். இவர் போவதற்கு முன்பே அண்ணனார் ஏதோ அவசர வேலையாக வெளியே சென்றுவிட்டார். எப்போது திரும்பி வருவார் என்று ஆசிரமவாசிகளால் தீர்மானமாகக் கூற முடியவில்லை. எனவே, வேறு வழியின்றி லிகிதர் அண்ணனாரைக் காணாமலேயே தம் ஆசிரமத்துக்குத் திரும்பினார்.

சங்குவின் ஆசிரமத்து மாமரங்கள் காய்த்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. கைக்கு எட்டும் உயரத்திலேயே கனிகள் எப்பொழுது கீழே விழலாம் என்று பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன.

லிகிதருக்கு நாவில் நீர் ஊறியது. ஆசையை அடக்க முடியாமல் ஒரு பழத்தைப் பறித்துச் சாப்பிட்டார். அப்புறம் தான் அவருக்கு ஞானோதயம் பிறந்தாற் போல் பொறி தட்டியது. 'இப்படி யாருக்கும் தெரியாமல் நாம் பழத்தைப் பறித்துத் தின்றது திருட்டு அல்லவா?' என்று எண்ணினார். உடனே தமது தவ வலிமை

மழலைக் குறும்பன்

யால் உண்ட கனியை மீண்டும் வெளியே எடுத்துப் போட்டார். ஆனால், அப்புறமும் அவருக்கு மனம் கேட்கவில்லை. செய்த செயல் 'தவறு தவறு' என்று அவர்



மனம் இடித்துரைத்தது. இரவு முழுவதும் உறக்கம் பிடிக்காமல் புரண்டு புரண்டு படுத்தார். பொழுது விடிந்ததும் முதற்காரியமாக அண்ணனார் சங்கு முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்று தமையனை வணங்கி நின்றார். கண்களில் நீர் தாரை-தாரையாகச் சொட்டியது. கால் கட்டை விரல் மண்ணைக் கிற மௌனமாக நின்றார்.

''என்ன, தம்பி! உடம்புக்கு ஒன்றும் இல்லையே! கண்களில் ஏன் இப்படிக் கண்ணீர்?'' என்று பரிவோடு கேட்டார் அண்ணனார் சங்கு முனிவர்.

''அண்ணா! என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் ஆசிரமத்தில் நான் திருடிவிட்டேன்!'' என்றார் லிகிதர் நடுங்கியபடி!

''என் ஆசிரமத்தில் யாரும் திருடும்படியாக அப்படி ஒன்றும் இல்லையே! நீ எதைத் திருடியிருக்க முடியும்?'' என்று வியப்புடன் கேட்டார் சங்கு முனிவர்.

''அண்ணா! ஆசையை அடக்க முடியாமல், உங்கள் ஆசிரமத்து மாங்கனி ஒன்றைப் பறித்துத் தின்று விட்டேன்!''

''பூ! இவ்வளவு தானா? மாமரம் கனி தருவதே மக்கள் புசிப்பதற்காகத் தானே! அதுவும் அண்ணனின் ஆசிரமத்துக் கனியைத் தம்பி புசிப்பதற்கு என்ன தடை?'' என்று கேட்டார் சங்கு.

''தங்களுக்குத் தெரியாமல்; தங்கள் அனுமதியைக் கேட்காமல் சாப்பிட்டது திருட்டுச் செயல்தானே? அண்ணா! உலகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்ட வேண்டிய நான், இப்படிச் செய்தது கொள்ளைதானே? இது குற்றம் தானே?'' என்றார் லிகிதர்.

''இல்லை, இல்லை!''

''நீங்கள் தம்பி என்ற பாச உணர்வில் இப்படிச் சொல்கிறீர்கள். உண்மையில் நான் திருடன்தான். என் திருட்டுக்குத் தகுந்த தண்டனை கிடைத்தே ஆக வேண்டும்!''

''தண்டனை கொடுப்பது யார்?''


''நீங்கள் தான்!''

''தம்பிக்கு அண்ணன் தண்டனை கொடுப்பதா? சரி, தண்டனை தருகிறேன். செய்த செயலை எண்ணி மனதார வருந்தி நீ திருந்தி விட்டதால், நான் தரும் தண்டனை மன்னிப்பு. போதுமா?''

''போதாது. பாசம் உங்கள் கண்களை மூடி விட்டது. நான் மன்னரிடம் போகிறேன்!''

மனம் கேளாமல் விதுர் மன்ன ரிடம் சென்றார்.

மன்னர் ஞானிகளுக்குரிய வர வேற்பை அளித்து, விதுரிடம் வந்த விஷயத்தைக் கேட்டார்.



''நான் என் அண்ணனாரின் ஆசிரமத்து மரம் ஒன்றிலிருந்து, அவர் இல்லாதபோது; அவருக்குத் தெரியாது மாங்கனி ஒன்றைத் திருடித் தின்றுவிட்டேன். அதற்குரிய தண்ட னையைப் பெற மன்னரிடம் வந்திருக்கி றேன்!'' என்றார் விதுர்.

''பழத்திருட்டு ஒரு திருட்டு ஆகாது. அதோடு அது தங்கள் அண்ணனாரின் ஆசிர மத்துப் பழம் தானே? அதைப் பறித்துச் சாப் பிடத் தங்களுக்கும் உரிமை உண்டு'' என்றார் மன்னர்.

''என் மனம் ஒப்பவில்லையே!''

''அப்படியானால் தங்கள் தமையனா ரிடமே கூறித் தண் டனை பெறுங்கள்?'' என்று ஆலோசனை கூறினார் மன்னர்.

''தம்பி என்ற பாசம் அவர் கண்களை மறைக்கிறது. அதனால் அவர் தண்டனை தர மறுக்கிறாரே!''

''அவரே மறுத்த பின், மன்னர் என்ன செய்ய முடியும்?''

''மன்னர் அப்படிச் சொல்லக் கூடாது. நான் நீதி-நெறி தவறாது ஒழுக்கமாக வாழ வேண்டிய ஒரு முனிவன். மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டியவன். நானே தவறு இழைத்தால் என்னைப் பின்பற்றும் உலகமும் தவறு இழைக்கத் தொடங்கி விடுமே? எனவே, இனியாவது இம்மாதிரியான தவறுகள் நேராமல் இருக்கத் தண்டனை தரும் உரிமை, மன்னருக்கே உண்டு. அது அவர் கடமையும் கூட!'' - என்றார் லிகிதர்.

''முனிவரே! தங்களைப் போன்ற சான்றோர்களின் அறம் கேட்டு அரசு நடத்தும் என்னை இப்படி ஒரு தர்ம சங்கடத்துக்கு ஆளாக்காதீர்கள். என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று முடிவாகக் கூறிப் பணிந்தார் மன்னர்.

முனிவர்களுக்கே இயல்பான கோபம் வரவே, லிகிதர், ''மன்னவா! உமது பதில் நீர் நடத்தும் நல்லாட்சிக்கு உகந்ததல்ல. நீர் என் குற்றத்துக்குரிய தண்டனையைத் தராவிட்டால், என்னுடைய தவறுக்குத் துணை வந்த நெறி தவறியவன் ஆவாய். உன் ஆட்சிக்குக் கறை ஏற்படும்!'' என்று இடித்து நடந்தார் 'பிடிசாபம்' கொடுப்பவர் போல்.

மன்னர் மலைத்தார். ''மாசில்லாத முனிவரே! தங்களுக்கு என்ன தண்டனையைக் கொடுப்பது?'' என்று குழறிக் கேட்டார்.

''உங்கள் ஆட்சியில் திருடனுக்கு என்ன தண்டனை?''

''திருடிய கையை வாங்கி விடுவது!''

''அதையே எனக்கும் கொடுங்கள்'' - வலிய வேண்டித் தண்டனையைப் பெற்றார் முனிவர் லிகிதர்.

வேறு வழியின்றி கனமான மனத்துடன் மன்னர், தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டார். தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதற்காக லிகிதர் நுனிக் கூட மனம் கனிக்கவில்லை. தாமதமாகவாவது தமது திருட்டுக்குரிய தண்டனை கிடைத்துவிட்டதில் மகிழ்ந்து போனார்.

மறுநாள் காலை வழக்கப்படி வழிபாடு நடத்த மலர் கொய்யப் போன லிகிதருக்குத் தமக்குக் கை இல்லையே என்ற நினைவே எழவில்லை. பூப் பறிக்க வழக்கப்படி கையை நீட்டினார். வெட்டிய இடத்தில் வாழைக் குருத்தைப் போலக் கை தானாக வளர்ந்து பூப் பறித்தது!

வள்ளுவர் போல அறநூல்கள் எழுதிய முனிவர் வரிசையில் சங்கு முனிவருக்கும் லிகிதருக்கும் சிறப்பான இடம் உண்டு. அந்த தர்ம சாஸ்திரங்கள் இன்றும் 'ஸ்மிருதி' என்ற பெயரில் வழங்கி வருகின்றன.



காந்திக்கு வாழ்த்துக் கூறியவர்!

1919 ஆம் ஆண்டில் காந்திஜி சென்னை வந்திருந்த நேரம். பாரதி காந்தியின் சுதந்திர இயக்கத்தைப் பெரிதும் பாராட்டினார். அந்தப் புதிய வழிமுறைகள் - அடிப்படைத் திட்டங்கள் ஆகியவைகளை வரவேற்றார். பாரதி அடிக்கடி திருவல்லிக்கேணி கடற்கரையில் சொற்பொழிவு நிகழ்த்துவார். பாடல்களும் பாடுவார். மக்கள் திரண்டு வருவார்கள்.

காந்திஜி சென்னைக்கு வந்த சமயம், பாரதியாருக்குக் கடற்கரையில் பிரசங்கம் இருந்தது. அதற்குத் தலைமை தாங்க காந்திஜியை அழைக்க எண்ணினார். உடனே, காந்திஜி இருந்த இடத்திற்கு விரைந்தார். யாராலும் அவரைத் தடுக்க முடியவில்லை. பாரதி நேராக காந்திஜியின் அருகே கட்டிலில் அமர்ந்தார். ''மிஸ்டர் காந்தி. இன்று கடற்கரையில் கூட்டம். நீங்கள் அதற்குத் தலைமை தாங்க முடியுமா?'' என்று கேட்டார். அன்று தமக்கு வேறு அலுவல் இருந்ததால் கூட்டத்தை மறுநாள் வைத்துக் கொள்ள இயலுமா என்று காந்திஜி கேட்டார். ''தள்ளி வைக்க இயலாது'' என்று உறுதியாகக் கூறிய பாரதி, ''தங்களது ஒத்துழையாமை இயக்கத்திற்கு என் வாழ்த்துகள்!'' என்று கூறி வேகமாக வெளியேறினார். 'இவரை நன்கு பாதுகாக்க வேண்டும்' என்று காந்திஜி சுற்றியிருந்தவர்களிடம் கூறினார். பார்த்த உடனேயே 'நாட்டின் நலனுக்காகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்' என்பதை காந்திஜி அன்று கூறியது எவ்வளவு உண்மை!

- எம். திலீப் குமார்



மத்திய ஆப்பிரிக்கக் கதை

போகாதே நில்!

மத்திய ஆப்பிரிக்காவில் லூஹூர பழம் குடிகளிடையே ஒரு கிராமத்தில் லோண்டி என்று ஒரு விவசாயி. அவனுக்கும் அவன் மனைவி நோபாம்பாவுக்கும் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை. ஆனால் பாவம் அவர்களுக்குக் குழந்தையே இல்லை. பல ஆண்டுகள் ஏங்கியபின் மனைவி நோபாம்பாவுக்குக் குழந்தை பிறந்தது. இல்லை, குழந்தைகள் பிறந்தன! ஆமாம் இரட்டைக் குழந்தைகள்! திடுக்கிட்டுப் போனார்கள் கணவனும் மனைவியும். அதற்குக் காரணம் இருந்தது. அவர்கள் ஊரில், யாருமே இரட்டைக் குழந்தையை மகிழ்ச்சியுடன் ஏற்கமாட்டார்கள். பிறந்த உடனேயே புதைத்து விடுவார்கள். இரட்டைக் குழந்தை பிறந்தால் அந்தக் குடும்பத்துக்கும் அந்த ஊருக்கும் கெடுதல் நேரும் என்று நம்பினார்கள் அந்த ஊர் மக்கள்.

''ஐயோ! இந்தக் குழந்தைகளை எப்படிப் பிரிவேன்?'' - என்று கலங்கினாள் தாய்.

''தவமிருந்து பெற்ற குழந்தைகளாயிற்றே! இவைகளை எப்படிப் பிரிவது?'' என்று விம்மினார் தந்தை.

''லோண்டிக்கு ஒரு யோசனை தோன்றியது.''

''சரி. புலம்பாம கம்மா இரு. பிறந்தது இரட்டை என்பது ஊருக்கும் தெரிய

தமிழில் : தம்பி சீனிவாசன்

வேண்டாம். யாருக்கும் தெரிய வேண்டாம். இரண்டு குழந்தைகளையும் ஒரே சமயத்தில் வெளியே காட்ட வேண்டாம். நமக்கு ஒரு குழந்தைதான் பிறந்தது என்று எல்லாரும் நினைத்துக் கொள்ளட்டும். ஒரு குழந்தையை எப்போதும் உள்ளே ஒளித்துவைப்போம்'' என்று மனைவியிடம் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செ ய் தா ன் ஷோண்டி.

ஒரு குழந்தை ஆண். மற்றது பெண். டிமானா என்று பையனுக்கும் டிமாஸானா என்று பெண்ணுக்கும் பெயரிட்டுக் கொஞ்சினார்கள்.

கஷ்டமாகத்தான் இருந்தது. ஒரு குழந்தையை உள்ளே ஒளித்து வைத்து அழாமல் பார்த்துக் கொண்டு, மற்றொரு குழந்தையை வெளியே எடுத்துச் செல்வது என்பது சுலபமாக இல்லை. எப்படியோ படாத பாடுபட்டு நான்கைந்து ஆண்டுகள் வளர்த்துவிட்டார்கள்.

ஐந்து ஆண்டுகள் ஆனதும் அவர்களுக்கு ஒரு சோதனை. ஊரிலே கடுமை



யான பஞ்சம் வந்தது. ''யாரோ ஏதோ தப்பு செய்திருக்கிறார்கள். அதனால் தான் மழைபெய்யவில்லை. நிலம் வறண்டுவிட்டது. பஞ்சம் வந்து விட்டது. தப்பு செய்தது யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றார் கிராமத் தலைவர்.

ஸோண்டி பயந்து விட்டான்.

''நம் குழந்தைகளை யாராவது பார்த்துவிட்டால் தொலைந்தோம். நமக்குத் தண்டனை கிடைக்கும். அதோடு போனால் பரவாயில்லை. குழந்தைகளையும் இரக்கமில்லாது கொன்றுவிடுவார்கள்! குழந்தைகள் உயிர் பிழைக்க உடனே எதாவது செய்ய வேண்டும்'' என்று விரைந்த ஸோண்டி, இரண்டு குழந்தைகளையும் இரவோடு இரவாக ஊரைவிட்டு வெளியே அழைத்துச் சென்றான். இரவெல்லாம் நடந்தான். அடுத்தநாள் முழுவதும் நடந்தான். மாலையில் வேறு ஒரு நாட்டுக்கு வந்து சேர்ந்தான். அங்கே ஒரு மலைச் சரிவிலே பழமரங்களும் செடிகளும் அடர்ந்திருந்தன. அருகிலே ஒரு மலையருவி. அந்த இடத்தில் குழந்தைகளை விட்டு விட்டு கனத்த மனத்துடன் திரும்பினான்.

குழந்தைகள் கீழே கிடந்த பழங்களைத் தின்றார்கள். படுத்துத் தூங்கினார்கள். காலையில் எழுந்து மலைச் சரிவில் உலவினார்கள். மலையருவியின் அருகே ஒரு பெரிய பாறை. ஓரிடத்தில் அது வாய் பிளந்து பெரிய பழக்களை போல எந்த நிமிஷமும் பிரிந்து கொள்ளப் போவது போல இருந்தது. அதன் அருகே இரட்டையர் போய் நின்றார்கள். கலகலவென்று பலர் சிரிப்பது போலவும், குடுகுடு என்று அவர்கள் ஓடுவது போலவும் நிறைய வினோதமான ஒலிகள் கேட்டன. ஏதோ ஒரு அறைக்கு வெளியே இருப்பது போலத் தோன்றியது.

உண்மையும் அதுதான். திடீரென்று, பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்தப் பிளவுப் பாறை இரண்டாக விரிந்தது. உள்ளேயிருந்து பத்து, இருபது என்று விசித்திரக் குள்ளவடிவத்தில் பாறைக்குழந்தைகள் வெளியே வந்தார்கள். எல்லாரும் இருபது அங்குல உயரமே இருந்தார்கள். இரட்டையரைப்



பார்த்து மகிழ்ச்சியுடன் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

குழந்தைகள் முதலில் ஆச்சரியப் பட்டார்கள். பிறகு பயத்தால் அழுதார்கள். அப்புறம் பயம் தெளிந்து பாறைக் குழந்தைகளின் கைகளைப் பிடித்துக் கொண்டு குதித்தார்கள். அவர்களும் இவர்களும் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடினார்கள்.

பாறைக் குழந்தைகள் குடுகுடு என்று மரம் ஏறிப் பழம் பறித்தார்கள். மலைத்தேன் எடுத்து வந்தார்கள். இரட்டையருக்கும் கொடுத்துத் தாங்களும் சாப்பிட்டார்கள்.

'எங்கள் பாறை அமைதிப் பாறை!
அன்பும் பாசமும் நிறைந்த பாறை!
மங்கா மகிழ்ச்சி தவழும் பாறை!
மழலையர் வாழும் செல்லப் பாறை!
என்று எல்லாரும் பாடினார்கள்.

சிறிது நேரமானது பாறை விரிசலுக்கு அருகே போய் நின்று குழந்தைகள், ''பிளந்த பாறையே கேட்டிடுவாய்! பிரியமாய் வாயிலைத் திறந்திடுவாய்'' என்று ராகத்துடன் சொன்னார்கள். உடனே அந்தப் பாறை வாயை அகலமாகத் திறந்து எல்லாரும் உள்ளே போக வழிவிட்டது. அவர்களோடு இரட்டையரும் உள்ளே போய்விட்டார்கள். உள்ளே போன பிறகு ''பிளந்த பாறையே கேட்டிடுவாய்! பிரியமாய் வாயிலை மூடிடுவாய்!'' என்று எல்லாரும் மறுபடி பாட, பாறையின் வாயில் மூடிக்கொண்டு விட்டது.

இங்கே ஊரிலே, சில நாள் ஆயிற்று. பஞ்ச நிலை மாறியது. மழை பொழிந்து, நிலம் விளைந்தது. ஆனாலும் லோண்டி துயரமே வடிவாய், இருந்தான். தனது குழந்தைகளை நினைத்து வருந்தியபடி



அடிக்கடி மலையருவி வரை வருவான். அனாதையாக விடப்பட்ட குழந்தைகள் எங்கேயாவது தென்படுகிறார்களா என்று தேடித் தேடிப் பார்த்து ஏமாறுவான். ஒரு முறை அப்படி வந்தபோது பிளவுப் பாறையருகே குழந்தைகளின் கும்மாள ஓசையைக் கேட்டான். ஏதோ பிரமை என்று நினைத்துத் திரும்பிட்டான். குழந்தைகள் உயிருடன் இருப்பார்கள் என்ற சந்தேகமே அவனுக்கு எழவில்லை. காட்டு மிருகங்களுக்குப் பலியாகியிருப்பார்கள் என்றே உறுதியாக எண்ணியிருந்தான்.

இன்னொரு நாள் ஷோண்டி அந்தப் பக்கம் வந்தபோது, பிளவுப் பாறையிலிருந்து பாறைக் குழந்தைகளும் இரட்டையரும் வெளியே வந்து விளையாடும் நேரமாக இருந்தது. வெகு தூரத்திலிருந்தே தன் குழந்தைகளைப் பார்த்து விட்ட ஷோண்டி, அடக்க முடியாத பாசத்துடன் உரக்கக் கூவிக் கொண்டே, ஓடி வந்தான்.

ஷோண்டியைப் பார்த்ததும் பயந்து போன பாறைச் சிறுவர்கள் பாட்டுப் பாடி, பாறையைப் பிளக்க வைத்து உள்ளே ஓடி ஒளிந்து கொண்டு விட்டார்கள். இரட்டையர்கள் மட்டும் வெளியே தங்கிவிட்டனர்.

மலைச்சரிவிலே ஓடி ஏறிவந்த ஷோண்டி தனது பெண்ணையும் பிள்ளையையும் பாசத்துடன் அணைத்துக் கொண்டான். ஆனால், குழந்தைகள் அவனை அடையாளம் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. தங்களை நிர்க்கதியாக நடுக்காட்டில் விட்டு விட்டுப் போனவருடன் என்ன உறவு என்று எண்ணிக் கொண்டார்களோ என்னவோ? மௌனமாக இருந்தார்கள்.

''என் கண்மணிகளா, அம்மாவைப் பார்க்கலாம் வாருங்கள்'' என்று ஆசையுடன் சொல்லி அவர்களை யாரும் பார்க்காதபடி வீட்டுக்கு அழைத்துப் போனான் ஷோண்டி.

வீட்டுக்குள்ளே நுழைந்தவுடன் கதவைத் தாழிட்டு, மனைவியை அழைத்தான். இருவரும் குழந்தைகளை ஆசை தீரக் கொஞ்சினார்கள். கண்ணீர்



''காப்பியில் சர்க்கரையை இடது கையால் கலக்குவியா, வலது கையாலா?''

''ரெண்டும் இல்லே... ஸ்பூனால்!''



''பிஸ்கெட் சாப்பிட்டு முடிச்சுட்டியா?''

''இல்லே...''

''சீக்கிரமா தின்னு...''

''சீக்கிரமா தின்னா, சீக்கிரமா ஆயிடுமே!''



''நீ உங்க அப்பாவிடம் பேசும்போது எப்பவும் அவர் பின்னாடி போய் நின்னுதான் பேசவேன்னு சொல்றியே! ஏன் அப்படி?''

''அவருக்கு முன்கோபம் அதிகம்!''

விட்டார்கள். ''இனிமேல் பிரியவே மாட்டோம்'' என்று சொல்லி அணைத்துக் கொண்டார்கள்.

அவர்கள் என்ன செய்தும் குழந்தைகளுக்கு அவர்களிடம் ஒட்டவில்லை. தங்களிடம் அன்பு காட்டிய சித்திரக் குள்ளர்களையே அவர்கள் எண்ணி ஏங்கினர். அதோடு இவர்கள் தங்களை வீட்டுக்குள்ளேயே ஒளித்து வைத்து பிறர் அறியாது வளர்க்கப் போகிறார்கள் என்பதையும் அவர்கள் அறிந்து கொண்டார்கள். அந்த பயந்த வாழ்க்கைக்கு அவர்கள் தயாராக இல்லை. பழையபடி காட்டுப்பக்கம் போய்விட முடிவு செய்தனர்.

இரவு எல்லாரும் தூங்கப் போனார்கள். உதயமாகும் வேளையில் இரட்டையருக்கு விழிப்பு வந்தது.

இரண்டு பேரும் மெதுவாக வீட்டுக் கதவைத் திறந்தார்கள். மெல்ல வெளியே வந்து கதவைச் சாத்தினார்கள். யார் கண்ணிலும் படாமல் கவனமாக; வேகமாக நடந்தார்கள். வெயில் ஏறுவதற்கு முன்பே வெகுதூரம் வந்து விட்டார்கள். இருவரும் பிளவுப்பாறை இருக்கும் மலைச்சரிவை அடைந்தனர். மெல்ல ஏறி மலையருவிப் பக்கம் வந்து பிளவுப்பாறையருகே வந்து சேர்ந்தனர் அதற்கு நேரே நின்று கொண்டு, ''பிளந்த பாறையே கேட்டிடுவாய்!! பிரியமாய் வாயிலைத் திறந்திடுவாய்!'' என்று தமது மழலைமொழியில் மெல்லப் பாடினார்கள்.

என்ன விந்தை! பிளந்த பாறை விரிந்தது. அவர்கள் உள்ளே போக வழிவிட்டது. பாறைச் சிறுவர்கள் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். பாறைப் பிளவும் உடனே மூடிக் கொண்டது!

அதிகாலையில் துயில் எழுந்த ஸோண்டி, குழந்தைகளைக் காணாமல் அதிர்ச்சியடைந்தான். வாயிற்கதவு திறந்திருப்பதைப் பார்த்து, விரைந்து வெளியே வந்தான். ஒரு சந்தேகத்தின் பேரில் கிடுகிடு வென்று மலைச்சரிவுப் பகுதியை நோக்கி நடந்தான். அவன் நினைத்தது சரி. இரட்டையர் மிகவேகமாக, ஓட்டமும் நடையுமாக மலையருவிப் பக்கம் பிளவுப் பாறையை நோக்கிச் செல்வதைப் பார்த்தான். ''போகாதீர்கள்! நில்லுங்கள்'' என்று கத்திக் கொண்டே ஓடினான். இன்னும் கொஞ்சம் விரைந்து போனால் பிடித்து விடலாம் என்று நினைத்த போது தூரத்தில் பாறை பிளந்து, குழந்தைகள் உள்ளே இறங்குவதையும், சித்திரக் குள்ளர்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பதையும் பார்த்தான். அவன் அங்கே வருவதற்குள் பாறை மூடிக் கொண்டுவிட்டது. சுற்றிச் சுற்றி வந்தான். உள்ளே குழந்தைகளின் கும்மாளம் கேட்டது.


''மூட நம்பிக்கை இல்லாத இந்த அன்பு உலகம்தான் உங்களுக்கு ஏற்றது. இங்கேதான் நீங்கள் மகிழ்ச்சியாக பயமின்றி இருக்கலாம்'' என்று மன அமைதியுடன் திரும்பினான் ஸோண்டி.

''ஏண்டா படிக்கும் போது கண்ணீர் விடறே?''

''இது 'வெங்காயம்' பற்றின பாடம்மா!''

- கு. அருணாசலம், தென்காசி.






''இத்தனை அவசரமாக ஏன் பெயிண்ட் அடிக்கிறே?''


''தீர்ந்து விடுவதற்குள் அடிச்சுட லாமே என்பதற்காகத்தான்.''

- ஏ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.




பறக்கும் கன்னிமாடம்
கதை: ஆனந்தி
படம்: கோபலி
சௌராஷ்டிர தேசத்தில் தாணாஜி என்ற மன்னர்...
எத்தனையோ பெருமைகள் இருந்தும் எனக்குப் பின் நாட்டை ஆள வாரிசு இல்லையே!
சில காலம் தவமிருங்கள்.
மன்னர் கடுமையான தவ விரதங்களை மேற்கொள்ள, ஓர் இரவு...
உனக்கு மூன்று பெண்கள் அருளினேன்! ஆனால் அவர்கள் பதினைந்தாவது வயதில் உன்னைப் பிரிவார்கள்!
மறுநாள் மன்னன் அரசியிடம்
ஆம் எனக்கு மகிழ்ச்சி தானில்லை!
இறைவன் திருவருளை ஏற்போம்!
நாளாவட்டத்தில் மூன்று பெண்கள் பிறந்தனர்...
பதினைந்து வயதில் நம்மைப் பிரிந்து விடுவார்கள் கண்ணே!...
பெண் பிறந்தால் கல்யாணமாகிப் பிரியத்தானே செய்வாள்? ஏன் இப்படி கவலைப் படுகிறீர்கள்?



காலக்கிரமத்தில்...
கல்வி கலைகளில் விமலா சரஸ்வதி தேவி போல் இருக்கிறாள்!
விமலாவுக்கே பட்டம் சூட்டலாம். ஆனால்...
கமலா மகாலக்ஷ்மி போல் அழகாகவும் திறமைசாலியாகவும் இருக்கிறாள். அதிர்ஷ்ட லக்ஷ்மிதான்!
என்ன பிரயோஜனம்? மூவருமே போய் விடுவார்களே!
நீலா மட்டுமென்ன! நாட்டியமாடுவதில் பார்வதி தேவி போல் ஜொலிக்கிறாளே!
ஹூம்...
மனைவியும் இளவரசிகளும் அகன்றவுடன் தானாதிபதியின் திட்டத்தை அறிவித்தார்
அரசே! கன்னிமாடம் கட்டி அதில் எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்து விடுவோம்! கோட்டைக் கதவுகளைப் பூட்டி பாதுகாப்பாக இளவரசிகளை வைத்திருக்கலாம்!
கன்னிமாடம் உருவாகிறது...
சிற்பியாரே! திட்டம் என்ன?
முதல் அடுக்கில் காவலர் தங்குவார்கள்! இரண்டாவதில் காரியக்காரர்கள் மூன்றாவதில் சமையலறை வசதிகள், நான்கு ஐந்து ஆறாவது அடுக்குகள் மூன்று ராஜகுமாரிகளுக்கு...


ஏழாவது ?
திறந்த வெளி அருகில் காய்கறி தோட்டம்!
பேஷ்!
கன்னி மாடம் கட்டி முடிந்தது...
என் கண்மணிகளா! உங்களைக் கவனிக்கும் பணிப் பெண்கள், விளையாட தோழிகள் எல்லாரையும் அமர்த்தியிருக்கேன். என் உத்தரவு இன்றி யாரும் கோட்டைக்குள் நுழைய முடியாது! கவலையே இல்லை!
ஆனால்...
என்ன வாழ்க்கை இது? சிறை வாழ்க்கை!
ஏழாவது மாடத்திலிருந்து பார்த்தால் சுதந்திர உலகம் தெரிகிறது!
வரலக்ஷ்மியைப் பூஜிப்போம்!
ஒரு வருடம் விரதமிருந்து வரலக்ஷ்மியைப் பூஜித்தனர்...
எங்களுக்கு நல்வாழ்க்கையை அருள்வாய்!
ஒரு நாள் இரவு...
நல்ல பதியை அடைந்து நலமோடு வாழ்வீர்கள்!


காலையில்...
அந்த தேவி என் கனவில் தோன்றினார்!
என் கனவிலும்தான்!
மூவர் கனவிலும் தோன்றியதால் நம் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாள் என்றுதான் அர்த்தம்!
இளவரசிகளே! உங்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அரசர் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்!
ஐயா! எங்கள் தந்தை எங்கே?
திடீரென்று நேர்ந்த ஒரு படையெடுப்பைச் சந்திக்கப் போயிருக்கிறார்!
எங்களுக்கு இப்படி சிறைப்பட்டிருப்பது பிடிக்கவில்லை.
அதற்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது. நீங்கள் மூவருமே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்தால்...
உளறாதீங்க!
போதும் நிறுத்துங்கள்!
தானே அரசனாகி விடலாம் என்ற ஆசையில் மந்திரி வற்புறுத்தினான்.
உங்களைப் பிரிய மனமில்லாத உங்க அப்பா உங்களுக்கு வரன் தேடவும் மாட்டார். உங்களுக்கு ஒரு துணையும் கிடைக்காது. என் யோசனைதான் சரியானது!





மறுநாள் ஒரு தாதி ஓடி வந்து...
அந்தக் கயவன் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறான். நாளைக்கு இங்கேயே கட்டாயக் கல்யாணம்!
மூவரும்...
தேவி! நீயே துணை!
முகூர்த்த நேரத்துக்கு முன்னதாக...
இதென்ன அதிசயம்?
அரசர் நாகராஜ் யுத்தகளத்திலிருந்து திரும்பி வர, மந்திரி தன் குற்றத்தை மறைத்து...
அதிசயம் கோட்டை பறந்து விட்டது!
நாகராஜ் சோகத்தில் ஆழ்ந்து...
இறைவன் தந்த வரம் அப்படியே பறந்துவிட்டது. என் கண்மணிகளை மறுபடி எப்போது பார்க்கப் போகிறேன்!



இதற்கிடையில்... அடர்ந்த காட்டின் மத்தியில் கன்னிமாடம் இறங்க...
என்ன பசுமை!
இனி சுதந்திரம் தான்!
பகலில் காட்டில் சுற்றி அலைந்தும் இரவில் ஆடிப் பாடியும் காலம் கழித்தார்கள்...
சிவபுரி இளவரசன் மோகன் சிங், வேட்டைக்குத் தோழர்களுடன் காட்டுக்கு வந்தான்...
இளவரசே! உங்களுக்கு விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடக்கிறதாமே?
அதை ஏன் கேட்கிறாய்? அத்தை மகள் காமினியை என் தலையில் கட்டப் பார்க்கிறார்கள். மகா கர்வக்காரி!
ஒரு காட்டுப் பன்றி தென்பட...
விடாதே! துரத்து!


நண்பர்களைப் பிரிந்துவிட்ட இளவரசன்...
பன்றி தப்பி விட்டது... அட! இதென்ன! நாட்டின் மத்தியில் மாளிகை! கீதம் வேறு கேட்கிறது!
சற்று நேரத்தில்...
நான் சிவபுரி இளவரசன் அமோதன் சிங்! வேட்டைக்கு வந்தேன். திசை தவறிவிட்டது. ஒரே பசி!
இளவரசிகளின் உபசாரத்தை ஏற்றான்...
இதுதான் நடந்தது...
விமலா! உங்க கதை ரொம்ப உருக்கமானது! அதிசயமானது! உம்... என்னை மணந்து கொள்வாயா?
சிவபுரி திரும்பி உங்க தாய் தந்தையரிடம் அனுமதி பெற்று வாங்க!


தந்தை ஈசுவர்ஜியிடம் இளவரசன்...
காட்டில் நான் பார்த்தவர்கள் சௌராஷ்டிர தேச இளவரசிகள் அதிலும் விமலா ரொம்ப அறிவாளி...
ஒட்டுக்கேட்ட அத்தை...
இதோ பார் யமுனா! என் மகள் காமினி ராணியாகணும். எப்படியாவது அந்த விமலாவைத் தீர்த்துக் கட்டிவிடு! சீக்கிரம்!
யமுனா தன் கணவனுடன் கன்னிமாடம் தேடி வந்தாள்...
யார் நீ?
இளவரசி! என்னை மறந்துட்டியா? உன் அம்மா இறந்தபிறகு உன்னைச் சீராட்டி பாராட்டி வளர்த்தேனே!
யமுனாவும் கணவனும் மாளிகையில் ஒட்டிக் கொண்டனர்...
காட்டில் பூத்த மலர்கள்
பேஷ்!
அருமையா சமைச்சிருக்கேன் சாப்பிட வாங்க!
ஒரு நாள் இரவு...
எல்லா பணிப் பெண்களும் தூங்கறாங்க...
இளவரசிகளும்தான்! மயக்க மருந்து வேலை செய்திருக்கும்


சீக்கிரம், விமலாவை மட்டும் தூக்கிட்டுப் போனாப் போதும்!
இதைச் செய்யாட்டா நம் கழுத்தில் கத்தி விழும்!
இது தப்பில்லையா?
விடியும் நேரத்தில் விமலா ஆற்றில் எறியப் பட்டாள்...
ஐயோ பாவம்!
வா! வா! போய்ப் பணத்தை வாங்கிக்கிட்டு வேற ஊருக்குப் போயிடலாம்...!
நீரில் மிதந்த விமலாவை ஒரு தோட்டக்காரன் பார்த்து...
யாரோ தெரியலையே! காப்பாத்துவோம்!
கரை சேர்ந்தான்...
இந்த மூலிகைச் சாறு உதவும், விழுங்கு!
குடிலுக்கு அழைத்து வர...
இது என் மக, லக்ஷ்மி!
நான் எப்படி நன்றி சொல்வேன்!
எதுக்கு நன்றி? உயிரைக் காப்பாத்தறது கடமைதானே!




இதற்கிடையில் சிவபுரியில்...
இத்தனை நாள் ஆகியும் மோகன் பிடிவாதமாயிருந்தான். அந்த விமலாவைத் தான் கல்யாணம் செய்துப்பானாம்!
அரசர் ஈச்வர்ஜி மனம் மாறி...
மோகன்! நீ இரு சகோதரிகளையும் அழைத்து வந்துவிடு. பிறகு அரசர் தானாஜிக்கும் தூது அனுப்புவோம்!
கன்னிமாடத்துக்கு விரைந்து வந்த மோகனுக்கு அதிர்ச்சி...
இதான் நடந்தது.
யமுனாவின் பேச்சில் மயங்கி விட்டோம்!
இது என் அத்தையின் சூழ்ச்சிதான்! நான் போய்த் தேடறேன்...!
காடு மலைகளில் எங்கு தேடியும்...
விமலாவை மறுபடி எப்போ காண்பேன்? அவளுக்கு என்ன ஆகியிருக்கும்?
மனம் சோர்ந்து சிவபுரி திரும்பினான்... நண்பர்கள் ஆறுதலாக...
விமலாவுக்கு இந்த கதியா?
கமலா, நீலாவை உங்கள் இருவருக்கும் மண முடிக்க நினைத்தேன்! ஹூம்!



சில தினங்கள் சென்று...
இளவரசே! ஊருக்கு ஒரு புதிய ஓவியர் வந்திருக்கிறார்! வாங்க போய்ப் பார்க்கலாம். உங்கள் ஆயருக்கும் ஒரு மாறுதலாக இருக்கும்!
ஓவியக் கூடத்தில்...
அட, ஓவியங்களின் வரிசையில் கன்னிமாடத்தின் கதை!
என்ன ஆச்சர்யம்!
இந்த ஓவியரை உடனே பார்க்க வேண்டும். எங்கே இருக்கிறார் அவர்?
அழைத்து வருகிறேன் இளவரசே!
லக்ஷ்மியும் அவள் தந்தையும் விமலாவை அழைத்து வர...
விமலா! உன்னை எங்கெல்லாம் தேடினேன்...!
இந்தப் பெரியவரும் அவர் மகளும்தான் என்னைக் காப்பாற்றினார்கள்!
சிவபுரிக்கு வந்தோம். நேரே அரண்மனைக்கு வர அனுமதி கிடைக்குமா? அதனால்தான் ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்தேன். எப்படியும் உங்கள் கவனத்தைக் கவரும் என்று எண்ணினேன்.


விஷயமறிந்த சிவபுரி மன்னர் ஈசுவர்ஜி மகிழ்ந்து...
மோகன்! உடனே போய் கமலாவையும் நீலாவையும் அழைத்து வா. இவர்கள் தந்தை தாணாஜிக்குத் தூதர்களை அனுப்புகிறேன்!
தன் சதி அம்பலமானதில் பயந்து போன அத்தை...
ஜாமீன்! சீக்கிரம்! அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு கிளம்பு. அரசர் தண்டனை கொடுப்பதற்கு முன் நாட்டை விட்டே ஓடிடலாம்!
தாணாஜி வந்து சேர மூன்று இளவரசிகளுக்கும் 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம் நடந்தது...
உங்களைப் பூட்டி வைக்க முயன்றேனே, என்ன முட்டாள்தனம்!
அதற்கும் உங்கள் அன்புதான் காரணம் அப்பா! வருந்தாதீர்கள்!
தாணாஜி சிரிக்கவைத்தார்...
மோகன்! இனி என் நாட்டையும் சேர்த்து அரசாண்டு மக்களை அன்போடு பாதுகாத்து வா! ஆனால் அன்பு காரணமாக அசட்டுத் தனம் பண்ணாதே!



பூஸ்ட் பெரியப்பா!

எங்க பெரியப்பா கிராமத்திலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். எங்கள் வீட்டில் உள்ள தையல் மெஷினை பார்த்து, ''இது என்ன பூஸ்ட் மிஷினா? புதுசாயிருக்கே! நான் பார்த்ததில்லையே!'' என்று கேட்டார்.



எங்களுக்கு ஒரே குழப்பம்.

அப்புறம்தான் புரிந்தது.

எங்கள் புது தையல் மெஷினின் மேற்பாகத்தை அழுக்குப் படுமே என்று பழைய பூஸ்ட் (பெரிய) அட்டை டப்பாவால் மூடியிருந்தோம். அதை அவர் பூஸ்ட் கம்பெனி தையல் மிஷின் என்று எண்ணி விட்டார்! புரிந்ததும் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. அன்றிலிருந்து அவர் பெயரே ''பூஸ்ட் பெரியப்பா'' ஆயிற்று!

– ராஜகுமார், தாசில்தார் நகர்.

காணாமல் போன லிஸ்ட்!

என் தங்கைக்கு துறுதுறுப்பு மிக அதிகம். கேள்வி கேட்டு அனைவரையும் நச்சரிப்பாள். எரிச்சலாக இருக்கும். ஒருமுறை மளிகை சாமான் வாங்க கடைக்குப் போயிருந்தோம். கடைக்காரரிடம் மளிகை லிஸ்டைக் கொடுத்து விட்டு, 'போட்டு வையுங்கள்' என சொல்லி விட்டு வேறு வேலையை



முடித்துக் கொண்டு வந்தோம். கடைக்காரரிடம் ''என்னங்க சாமான் போட்டீங்களா?'' என்று கேட்டேன். அவர் பேந்தப் பேந்த விழித்து விட்டு, ''ஸாரி தம்பி. நீ கொடுத்த லிஸ்ட் காணாமல் போயிடுச்சு'' என்றார். எனக்கோ எரிச்சல். என் தங்கை கடைக்காரரிடம், ''உங்க காது இடுக்கில என்னங்க?'' என்றாள். அதைப் பார்த்து விட்டு கடைக்காரர் முகம் மலர்ந்தது. காரணம் காணாமல் போன லிஸ்ட் அதுதான்! அதில் இருந்து என் தங்கை என்ன கேள்வி கேட்டாலும் எரிச்சல் இல்லாமல் பதில் சொல்கிறேன்.

- சு. பாபுராஜ், சோழன்மாளிகை.

அறிவு இருக்கா?

எங்கள் மாமா புதிதாக ஒரு வீட்டின் மாடி போர்ஷனுக்குக் குடி போயிருந்தார். வீடு மாற்றிய அன்று சாமான்களை நாங்கள் அடுக்கிக் கொண்டிருந்தோம். கீழ் வீட்டு வேலைக்காரி வந்து, ''ஏம்மா, அறிவு இருக்கான்னு கீழ் வீட்டுல கேட்கறாங்க'' என்று கேட்டாள். எங்களுக்கு திகைப்பு, ஆச்சரியம்! மாமா கோபமாகக் கீழே போய், ''ஏன் சார்? எங்களுக்கு அறிவு இருக்கான்னு வேலைக்காரியை விட்டுக் கேட்கறீங்களே? என்ன திமிரா?'' என்று திட்ட ஆரம்பித்து விட்டார். கீழ் வீட்டுக்காரர் அவரைச் சமாதானப்படுத்தி விவரத்தைக் கூறியதும் எங்களுக்குச் சிரிப்பு அடங்க வெகு நேரம் ஆயிற்று. காரணம் அந்த வீட்டுக் குழந்தையின் பெயர் அறிவழகன். எல்லோரும் 'அறிவு' என்று கூப்பிடுவார்களாம். ஒருவேளை அந்தப் பையன் மேலே வந்தானா என்று அவர்கள் வேலைக்காரியை விட்டுக் கேட்க,




நாங்கள் சுத்த ஒரே ரகளைதான் போங்கள். இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

- எஸ். கவிதா, சேலம் - 5.

கிரைண்டர் தங்கை

என் தங்கைக்கு நான்கு வயதாகிறது. ஒருநாள் அப்பா, அம்மா, அண்ணன் அனைவரும் உள் அறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது திடீரென்று தங்கையின் அலறல்



கேட்டது. என்ன என்று வெளியே ஓடி வந்து பார்த்தால் அங்கே இருந்த கிரைண்டரில் அமர்ந்து தங்கை சுத்திக் கொண்டு இருந்தாள்! பிறகுதான் புரிந்தது கிரைண்டர் அருகில் போடப்பட்டிருந்த முக்காலியில் ஏறி கிரைண்டருக்குள் அமர்ந்து கொண்டு தானே சுவிட்சைப் போட்டுக் கொண்டு விட்டாள்! கிரைண்டரும் சுத்தியிருக்கிறது. பயத்தால் தங்கை அலறியிருக்கிறாள். இப்பொழுதெல்லாம் கிரைண்டர் அருகில் முக்காலியைப் போடுவதேயில்லை!

- சு. பேபி, சோழன்மாளிகை.

பாதி புத்திசாலி!

எங்கள் கணக்கு ஆசிரியர் மிகவும் நல்லவர். சிரிக்க வைத்தே பாடம் நடத்துவார். அன்று எங்களுக்கு திடீரென முன் அறிவிப்பின்றிக் கணக்குத் தேர்வு வைத்தார். நாங்கள் சரியாகப் படிக்காமல் மோசமாகப் பரீட்சை எழுதினோம்.




அன்று மதியம் தேர்வு முடிவுகளைத் தெரிவித்த ஆசிரியர், ''உங்களில் பாதி பேர் முட்டாள்கள்'' என்றார். எங்களுக்கு வருத்தம். மறுநாள் கணக்குப் பீரியடில் நாங்கள் உம்மென அமர்ந்திருந்தோம். அதைக் கவனித்த கணக்கு ஆசிரியர், ''ஏன் கோபம்?'' என்றார். நாங்கள் ''சார் நீங்கள் நேற்று இப்படிக் கூறிவிட்டீர்களே?'' என்றோம்.

''அடே அந்தச் சொல்லை நான் வாபஸ் பெறுகிறேன். உங்களில் பாதிப் பேர் புத்திசாலிகள்'' என்றாரே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது!

- முகமதுஹாரூன் பாஷா,
திண்டுக்கல்.

தேனிரும்பு இனிக்குமா?

எங்கள் அறிவியல் ஆசிரியர் தேனிரும்பைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். 'ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்' என்று கூறினார். ஒரு மாணவன் எழுந்து, ''தேனிரும்பு என்பதால், அது இனிக்குமா சார்?'' என்று கேட்டான். எங்கள் வகுப்பே சிரிப்பலைகளால் கலகலப்பானது!



- ஆ. முருகன், சங்கராபுரம்.

எறும்பை ஏமாற்ற!

எங்கள் வீட்டில் ஒரே எறும்புத் தொல்லை. என்னென்னவோ செய்தும் தொல்லை குறையவே இல்லை.

ஒருநாள், சீனி டப்பாவில் எறும்பு



நிறைய இருந்தது.

அம்மா கவலையோடு, ''இந்த எறும்போட ஒரே தொல்லையா இருக்கே. என்ன செய்றதுன்னே தெரியலையே...?'' என்று கவலையோடு கூறினார்கள்.

உடனே, என் சிறிய தம்பி, ''அம்மா... அம்மா ஒரு வழி இருக்குதும்மா... எறும்பை ஏமாற்றி வராமல் பண்ண. சீனி டப்பாவுல சீனின்னு எழுதாதேம்மா. எறும்புப் பொடின்னு எழுதிடு. எறும்பு ஏமாந்து போயிடும். வரவே வராது...'' என்றானே பார்க்கலாம். வீடே வெடிச் சிரிப்பால் அதிர்ந்தது.

- ஜெயஸ்ரீ ராஜ்குமார்,
தாசில்தார் நகர்.

காட்டுமண்டு!

ஏழாம் வகுப்பு. மேலதிகாரி இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருந்தவர், வகுப்புக்குள் வந்தார். சுவரில் பெரிய அளவில் இந்திய வரைபடம் மாட்டப் பட்டிருந்தது. ஒவ்வொரு மாணவ னையும் கேள்வி கேட்டுக் கொண்டே வந்தவர், வரை படத்திற்கு அருகே வந்த தும், ஸ்கேலை வாங்கி, அதில் ஒரு இடத் தைச் சுட்டிக் காட்டி, ''இந்த இடத்தில் என்ன ஊர் இருக்கிறது?'' என்று ஒரு மாணவனைக் கேட்டார்.

மாணவன் விழிப்பான் போல் தோன்றவே, ஆசிரியர், ''அட மண்டு, ஐயா கேட்பதா தெரியலே! போடா பட்டிக் காட்டுமண்டு'' என்று திட்டி னார். ஆசிரியர் நல்ல அறிவாளி. மாண வனும் புத்திசாலி. திட்டுவது போல்



உதவிக்கரம் நீட்டியதை அவன் புரிந்து கொண்டு ''காட்மண்டு சார்'' என்று இன்ஸ்பெக்டருக்குப் பதிலளித்தான். ஆமாம், இன்ஸ்பெக்டர் சுட்டிக் காட் டிய இடம் நேபாளத்தின் காட்மண் டுவேதான்!

– எஸ். துர்காதேவி,
சோழன் மாளிகை P.O.


சுதந்திர அறிவொளி!

இந்த ஆண்டு சுதந்திர தினத்தை சற்றுப் புதுமையாகவும், பயனுள்ளதாக வும் கொண்டாட வேண்டும் என்று எங்கள் ஊரில் உள்ள மாணவ மாணவி யர் எண்ணினோம். ஆளுக்கு ஒரு



யோசனை கூறினார்கள். கடைசியில் ஏக மனதாக ஒரு முடிவு எடுத்தோம். அதன்படி, சாலையில் கொடியேற்றி முடிந்ததும், சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து கொண்டோம். பேருந்து ஓடும் சாலை ஓரங்களில் அணிவகுத்து, கைகோர்த்து நின்றோம். அறிவொளி இயக்க ஒலி எழுப்பினோம். பேருந்துக் காகக் காத்திருந்தவர்கள், பேருந்துகளில் பயணம் செய்த கிராம மக்கள் பலரது கவனத்தை இது கவர்ந்தது. அவர்கள் இது குறித்துப் பக்கத்தில் இருந்தவர் களிடம் கேட்டு அறிந்தார்கள். மேல் விளக்கம் கேட்டுப் பலர் எங்களையே நாடினர். நாங்களும் விளக்கினோம். சுதந்திர தினம், பயனுள்ள தினமாக முடிந்தது. இது குறித்து எல்லோரும் மகிழ்ந்தோம்.

– இரா. மஞ்சுநாதன், மாச்சம்பட்டு.



ரெண்டு சாப்பாடா உனக்கு?



''அம்மா!''

''என்ன குமரு?''

''ம்... வந்து நாளையிலேந்து எனக்கு மத்தியான சாப்பாட்டை அலுமினிய டிபன் பாக்சிலேயே போட்டுக் கொடுங்க.''

''நீதான் பள்ளிக்கூடத்திலே சத்துணவு சாப்பிடறாயே?''

''அதுவா... ம்... எனக்கு சத்துணவு வயித்துக்கு இப்ப ஒத்துக்க மாட்டேங்குது.''

''நீ சத்துணவு சாப்பிடாட்டி உனக்கு பொத்தகம், டிராயர், சட்டை எல்லாம் தர மாட்டாங்களே?''

''அதைப் பத்தி எல்லாம் கவலைப் படாதீங்க. எங்க சத்துணவு அமைப்பாளர் ரொம்ப நல்லவர். எப்படியாவது எனக்குத் தரேன்னு சொல்லியிருக்காரு.''

''இந்த ஸ்கூல்லே ஆறாவது சேர்ந்தே. ரெண்டு வருஷமா இதே மத்தியான சத்துணவுதானே திங்கறே? இப்ப எட்டாங்கிளாசு வந்ததும் திடீர்னு வயித்துக்கு சேராம போயிடுச்சா?''

''கோவிச்சுக்காதீங்க அம்மா. ரொம்ப நாளாவே இப்படித்தான். உங்கிட்ட சொன்னா கவலைப்படுவீங்களேன்னுதான் சொல்லாம இருந்தேன். எனக்கு வயிறு சரியில்லாட்டி படிக்க முடியுமா? அதுக்குத்தான் சொன்னேன். நாளையிலேர்ந்து சாப்பாடு கட்டித் தரியா?''

''எனக்கு உன் உடம்புதாண்டா முக்கியம். நாளையிலேர்ந்து சாப்பாடு கட்டிக் கொடுத்துடறேன்.''

''நல்ல அம்மா'' - குமரு மகிழ்ச்சியோடு தாயைப் பார்த்தான்.

ஒரு மாதம் ஓடி மறைந்தது. அன்று திங்கட் கிழமை. வழக்கப்படி குமருவின் டிபன் பாக்ஸிலே மோர் சோற்றைப் போட்டு, தொட்டுக் கொள்ள எலுமிச்ச ஊறுகாய்த் துண்டம் வைத்தாள் குமரனின் அம்மா சிவகாமி.

''அம்மா! ஊறுகாய் பத்தாது. இன்னும் ஒரு துண்டம் வைங்க.''

''என்னடா இது! உனக்குத்தான் எலுமிச்சங்காய் ஊறுகாய் அதிகம் பிடிக்காதே?''

''புதிசா போட்டிருக்கே இல்லே. அதனால இப்பப் பிடிக்குது அம்மா! உங்களை மாங்காய் ஊறுகாய் வை, நார்த்தங்கா ஊறுகாய் வைன்னா சொல்றேன்? ஒரு துண்டம் எலுமிச்சங்காய் ஊறுகாய்தானே கூட வைக்கச் சொன்னேன்?''

''போடா.. நல்லா வாய் பேசறே'' என்று கூறியபடி மகன் கேட்டபடியே செய்தாள் அவன் அம்மா. எப்படியாவது மகன் நல்லா சாப்பிட்டு நல்லா படிச்சா சரி என்று எண்ணியபடி டிபன் பாக்சை அவனிடம் கொடுத்தாள்.

ஆனால் குமரன் எதற்காகவோ தன்னை ஏமாற்றி சாப்பாடு வாங்கிக் கொண்டு செல்கிறான் என்ற சந்தேகம் அவளுக்குத் தோன்றியது. சிறு வயதி

தா. ஜானகி


லேயே தந்தையை இழந்த மகனை அவள்தான் நாலு வீடு கூட்டி, பாத்திரம் தேய்த்து, வேலை செய்து காப்பாற்றி வருகிறாள். எட்டாவது வந்ததிலிருந்து தன் மகன் தீனி வாங்கித் தின்னக் கூட காசு கேட்பதில்லை. சனி, ஞாயிறு என்றால் ஒரு கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் காட்டுப் பகுதிக்குச் சென்று மரங்களிலிருந்து காய்ந்து விழுந்து கிடக்கும் சுள்ளிகளைப் பொறுக்கி அடுப்பு எரிக்கக் கொண்டு வைத்து விடுகிறான். காலையிலே எழுந்து அம்மாவுக்கு உதவியாக ரோட்டுக் குழாயிலிருந்து தண்ணீர் எடுத்துத் தருகிறான். ஓ.சி.யில் யார் வீட்டிலாவது டீ.வி. பார்ப்பதோடு சரி. சினிமாவிற்கு என்று கூடக் காசு கேட்பதில்லை. அதனால் தன் மகனைப் பற்றிப் பெருமையாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள் அவள். இப்படிப் பட்ட அருமை மகன் தன்னை ஏமாற்றி சாப்பாடு வாங்கிக்கிட்டுப் போவானேன்?

மறு வாரமே திடீர் என்று சொந்தக்காரப் பெண்ணுக்குப் பக்கத்து கிராமத்திலே குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு குழந்தையைப் பார்க்கக் கிளம்பிய கோஷ்டியோடு அம்மாவும் கிளம்ப வேண்டிய சூழ்நிலை. சரியாக பகல் ஒன்றரை மணிக்கு பஸ். வீட்டைப் பூட்டிக் கொண்டு பள்ளிக்குப் போய் சாவியை மகனிடம் கொடுத்து விட்டு அப்படியே செல்லலாம் என்று எண்ணியபடி வேக வேகமாக அவள் பள்ளிக்கூடத்தை நெருங்குவதற்கும், மாணவர்கள் சத்துணவை தட்டு களில் வாங்கிக் கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது. ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்திருந்தது அந்தப் பள்ளி. பள்ளிக்கு உள்ளேயே பல மாணவர்கள் சாப்பிட அமர்ந்து கொண்டனர். பள்ளிக்கு எதிரே உள்ள தோப்பை நோக்கி சில மாணவர்கள் சாப்பாடு தட்டோடு சென்று கொண்டிருந்தனர்.

மகன் எங்கே இருப்பான்? அம்மாவின் விழிகள் பரபரப்போடு தேடிய போது, குமரன் கையில் சத்துணவு போடப்பட்ட தட்டோடு தோப்பிற்குள் நுழைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'குமரு' என்று கோபத்தோடு கூப்பிட வாயெடுத்த அம்மா, மறு வினாடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். சாப்பாட்டை என்ன செய்கிறான் என்பதை அறிய நல்ல வாய்ப்பு! கையும் மெய்யுமாகப் பிடித்து விடலாம் என்று அவளும் மெதுவாகத் தோப்பிற்குள் நுழைந்தாள்.

அங்கே! ஒரு பெரிய வேப்பமரத்துக்கு அடியில் குமரன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே





அன்றே சொன்னார்!

அறிவைப் பற்றி வள்ளுவனார்
என்ன சொல்கிறார் - இதை
ஆழ்ந்துணர்ந்து புரிந்து கொண்டால்
நமக்கு நல்லது.

அழிவிலிருந்து தடுத்துக் காக்கும்
கருவி என்று தான் - உண்மை
அறிவைப் பற்றி தெய்வப் புலவர்
அன்றே சொல்லினார்!

அழிவைத் தரும் திறம் எதுவும்
அறிவுக் கெதிர்தான் - அதன்
ஆற்றல் மிகப் பெரிதெனினும்
எவர்க்கும் கேடு தான்!
பிறிதின் நோயைத் தனது நோய் போல்
கருத மறுக்கும் - எந்தப்
பெரும் திறனும் கொடிய நச்சுக்
கிருமி, வகை தான்!

ஆன்ம நேயம் ஒன்றே உண்மை
அறிவின் லட்சியம் - இதை
அறிந்துணர மறந்தால் பெரும்
அழிவு, நிச்சயம்!
ஆற்றல் மிகப் பெற்றது வாய்
அலட்டிக் கொள்வோரே - கொஞ்சம்
அமைதியாக நமதுலகை
வாழ விடுமே!

- ரா. பொன்ராசன்.

ஒரு பெரிய மாணவன் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் குமரனின் சாப்பாட்டு டிபன் பாக்ஸ்!

இருவரும் இரண்டு சாப்பாடுகளையும் பகிர்ந்து கொண்டு பேசிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தனர்.

அவர்களுக்குத் தெரியாமல் மரத்தின் பின்னே சிவகாமி மறைந்து கொண்டு காதுகளை கூர்மையாக்கிக் கொண்டாள்.


''அண்ணே. போன வாரம் வெச்ச டெஸ்டிலே எப்படி மார்க்கு வாங்கியிருக்கே...?'' - இது குமரன்.

''உன் தயவால இந்த தேனப்பன் நல்ல மார்க்குகள் வாங்கிட்டேன்'' - இது பெரிய பையன்.

''என் தயவா? என்ன அண்ணே சொல்றே நீ?''

''என்னைப் போல நீயும் ஏழை வீட்டுப் பையன்தான். ஆனா, ஒரே ஓர் வித்தியாசம். உனக்கு அப்பா இல்லே... எனக்கு அம்மா இல்லே... எங்கப்பா எதையும் கண்டுக்கறதில்லே. எனக்கும் அம்மா இருந்தா எப்படியோ எனக்குச் சாப்பாடு கட்டித் தருவாங்க. அந்தக் குறையை நீக்கத்தான் உனக்குச் சாப்பாடு வேணும்னு பொய் சொல்லி உங்கம்மா கிட்டேயிருந்து நீ சாப்பாடு வாங்கிட்டு வரே... பள்ளிக்கூடத்திலேயும் சத்துணவு வழக்கம் போல வாங்கறே. எனக்கும் சாப்பாடு போடணும், நான் பட்டினியா இருக்கக் கூடாதுன்னு இப்படி ஒரு திட்டத்தை நீ போட்டிருக்கே... இந்த உதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போறேன்னு எனக்கே தெரியலை. இப்பவெல்லாம் குமரா, நாம இரண்டு பேரும் என்னிக்காவது வசமா உங்கம்மா கிட்டே மாட்டிக்கப் போறோம்னு அடிக்கடி எனக்கு பயம் தோணுது.''

''என்ன அண்ணே! வழக்கம் போல இன்னிக்கும் புலம்ப ஆரம்பிச்சுட்டே. பேசாம சாப்பிடு. ஏழைக்குத்தான் அண்ணே பசியோட கொடுமை தெரியும். பசி வயித்தைக் குடையும் போது



படிப்பு மண்டையிலே ஏறாதுன்னு தானே நம்ம அரசே சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கு? பத்தாம் கிளாசு வரை தான் சத்துணவு போடறாங்க. இப்ப நீ ப்ளஸ் ஒன் படிக்கற தாலே உனக்கு சாப்பாடு போடறதில்லே. எங்கம்மா அடிக்கடி சொல்வாங்க. டேய், நீ நல்லா படிச்சு பெரிய வேலைக்கு வரணும்னு சொல்வாங்க. அதே போலத்தான் அண்ணே நீயும் நல்லா படிச்சு பெரிய வேலைக்கு வரத்தான் இந்த ஏற்பாடு செஞ்சிருக்கேன். எங்கம்மாவுக்கு இதெல்லாம் தெரியாது. கேட்டா வழக்கம் போல ஏதாவது சொல்லிச் சமாளிச்சுக்குவேன். வருஷம் முடியட்டும். நீயும் நல்லபடியா பரீட்சை எழுது. நானே எங்கம்மாகிட்டே எல்லாத்தையும் சொல்லிடறேன். எங்கம்மா திட்ட மாட்டாங்க. இன்னிக்கு எங்கம்மா வெங்காய சட்னி வெச்சிருக்காங்க. ரொம்ப நல்லா இருக்கு இல்லே?''

உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா சிலையானாள். மகனின் செய்கை அவள் இதயத்தை நெகிழ வைத்தது. ''குமரா! நீ ஏழை அம்மாவோட வயித்திலே பிறந்தாலும் உன் மனசு ஏழை இல்லைடா. எனக்கு முன் கோபம் ஜாஸ்தி. கொஞ்சம் சிக்கனமா இருப்பேன். அதனால சண்டை போடுவேன்னு பயந்துக்கிட்டு என்கிட்டேயே உண்மையைச் சொல்லாம பொய் சொல்லி நடிக்க உதவி செஞ்சுக்கிட்டிருக்கே. உன் எதிரே சோறு திங்கறானே அவனும் இனிமே எனக்கு மகன் மாதிரிதான்டா. எனக்குத் தெரியாம நீ உதவி செய்யற மாதிரி இனி உனக்குத் தெரியாம நானும் நாளையிலேர்ந்து சாப்பாடு கொஞ்சம் கனமாவே வெக்கறேன். நல்லா சாப்பிடுங்க. நல்லா படிங்க. பஸ்சுக்கு நேரமாயிடுச்சு. சாயந்திரம் நீ ஸ்கூலு விட்டு வூட்டுக்கு வரத்துக்குள்ளே நானும் வர முயற்சி செய்யறேன், மகனின் தங்க மனதை வாழ்த்திக் கொண்டே நிறைந்த மனதோடு யார் கண்ணிலும் படாமல் பேருந்து நிலையத்தை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள் அம்மா.





ஒளி உமிழும் உயிரினங்கள்

இயற்கையின் படைப்புகளில் அற்புதமானவை எத்தனையோ உண்டு. அவற்றுள் மிகமிக அற்புதமானவை ஒளியை உமிழும் உயிரினங்கள்! இவை இருக்குமிடம் ஒளிமயமாகத் திகழும்!


கிராமப் புறங்களில் இரவு நேரங்களில் மின்மினிப் பூச்சி ஒளி வீசிக் கொண்டு பறந்து திரிவதைப் பார்த்திருக்கலாம்! மென்மையான உடலும், சற்றே கருநிறமும் கொண்டது மின்மினி. இதில் ஆண், பெண் இரு இனத்துக்குமே சிறகு உண்டு. இப்பூச்சி ஒளியை எவ்வாறு வெளியிடுகிறது? இதன் அடிவயிற்றில் உள்ள ஒரு உறுப்புதான் ஒளியை உற்பத்தி செய்கிறது. இது நரம்புகளால் இயங்கக் கூடியது. இந்த உறுப்பில் லூஸிஃபெரின் (Luciferin), லூஸிஃபெரேஸ் (Luciferase) என்ற இரு பொருள்கள் உள்ளன. லூஸிஃபெரின் ஆக்ஸிஜனுடன் இணையும் போது ஒளி உண்டாகிறது. லூஸிஃபெரேஸ் என்ற பொருள் இந்த இணைவியக்கத்தை ஊக்குவிக்கும் கிரியா ஊக்கியாகச் செயல்படுகிறது. இப்பூச்சியிலிருந்து வெளிவரும் ஒளி வெப்பம் தராது. இனப்பெருக்கம் செய்வதற்காகத்தான் மின்மினிப்பூச்சிகள் ஒளியை உமிழ்கின்றன என்று அமெரிக்க ஃப்ளோரிடா பல்கலைக் கழகப் பேராசிரியர் J.E. லாய்ட் குறிப்பிடுகிறார். ஒரு ஆண் பூச்சி ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட பாணியில் ஒளியை அனுப்புகிறது. இதைப் புரிந்து கொண்டு பெண் பூச்சி அதே மாதிரி ஒளியை அனுப்புகிறதாம். பின்பு இரண்டும் ஜோடியாகிறது.


மத்திய அமெரிக்க நாடுகளில் ஒரு வகை வண்டு உண்டு. இதன் விலங்கியல் பெயர் 'பைரோபோரஸ் நாக்டிலூகஸ்' (Phyrophorus Noctilucus) என்பதாகும். இது மின்மினிப் பூச்சியை விட அற்புதமானது. விமானங்களைப் போல்

கழுத்துப் பகுதியில் பச்சை விளக்குகள் இரண்டும், வால் பகுதியில் சிவப்பு விளக்கு ஒன்றும் உண்டு. இது வெளியிடும் வெளிச்சத்தில் நீங்கள் உட்கார்ந்து அழகாக 'கோகுலம்' படிக்கலாம்! இவ்வரிய பிராணியின் நீளம் 4 சென்டிமீட்டர். மத்திய அமெரிக்காவிலுள்ள சில நாடுகளில் இதைக் கம்பி வலையாலான டப்பாக்களில் அடைத்து வீட்டில் மேஜை விளக்காக உபயோகிக்கின்றனர். இரண்டாவது உலகப் போரின் போது இந்த வண்டுகள் போர் முகாம்களில் ராணுவத்தினர் தங்கள் பணியைச் செய்து முடிக்க பெரிதும் உதவியுள்ளது.

கடலில் வாழும் ஓரணு உயிரினங்களான சில பிளாங்டான் (Plankton)களும் ஒளியை உமிழக்கூடிய தன்மை வாய்ந்தவை. கடலோரமாக வாழக் கூடியவர்கள் இந்த ஓரணு உயிரினங்களைப் பார்க்க முடியும். இவை மிக மிகச் சிறியவை. இவை லட்சக்கணக்கில் ஒன்று கூடி ஒளியை உமிழ்ந்தபடி கடலின் மேல் பரப்பில் நீந்தும். பார்ப்பதற்கு பல கிலோ மீட்டர் தொலைவு வரை ஒளியாலான கம்பளத்தைக் கடலின் மேல் பரப்பில் விரித்தது போல் இருக்கும். கப்பலில், அதுவும் இரவில் பயணம் செய்வோர் இந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு வெளியிட்டுள்ள தகவல்களை கேட்கும் போதே ஒரு கனவுலகக் காட்சி நம் கண்முன் தோன்றும். ஜெல்லி எனப்படும் கடல் மீன்களும் கூட ஒளி வீசக்கூடியவையே. ஆங்கிலத்தில் இந்த ஜெல்லி ஒளி மீன்களைப் பற்றி நர்சரி பாடல்கள் நிறைய உள்ளன. சில வகை சிப்பிகள் கூட ஒளியை வீசுவதுண்டு. இது பகைவர்களைப் பயப்படுத்தி விரட்டியனுப்ப!

– கிருஷ்ண
முத்துராமலிங்கம்.





எதனுடைய கால்? - போட்டி

இங்கே ஏழு விலங்குகள், பறவைகளின் கால்கள் தரப்பட்டுள்ளன. இவை எல்லாமே உங்களுக்கு நன்கு அறிமுகமானவைதான். இவை எதனுடைய கால் என்பதை எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு உண்டு. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை 600 097.

எதனுடைய கால்? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

....

பின்கோடு :

முடிவு தேதி 15.3.93



கோபிக்காக...

காலையில் செய்தித்தாளும் கையுமாக அமர்ந்திருந்த தம்பியைப் பார்த்ததும் ராஜிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கு செய்தித்தாள் படிக்கவே பிடிக்காது. செய்தித்தாள் படிப்பதன் அவசியத்தையும் அதனால் உலக அறிவு வளர்வதையும் விளக்கி அப்பா அவனிடம் எத்தனையோ முறை தூண்டியிருக்கிறார்.

''பேப்பர்ல என்ன இருக்கு? 'அங்கே கொலை, இங்கே கொள்ளை, அங்கே கூட்டம், இங்கே கலகம், இது தானே இருக்கு? இதையெல்லாம் படிச்சால் உலக அறிவா வளரும்?'' என்று விதண்டா வாதம் பேசும் அவன், என்றுமில்லா அதிசயமாக பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தால் அது அதிசயம் தானே?

''என்னடா ராமு இது! நிஜமாவே நீதானா? உங்கையில இருப்பது பேப்பர் தானா?'' என்று கேட்டாள் ராஜி.

''இந்த வாரம் எங்க வகுப்புத்தான் பிரேயரில் செய்தி வாசிக்கணுமாம். அதுவும் நான்தான் இன்றைய செய்தியை வாசிக்கணும். அதான் வேற வழியே இல்லாம, தலைவிதியேன்று படிக்கிறேன்'' என்றான் ராமு விரக்தியுடன். தொடர்ந்து அன்றைய முக்கியமான செய்திகளை ஒருதாளில் குறித்துக் கொண்டான். முக்கியமான செய்திகளையெல்லாம் குறித்து விட்டோமா என சரிபார்க்க மீண்டும் ஒருமுறை செய்தித் தாளைப் புரட்டினான். அப்போதுதான் மூன்றாம் பக்கத்தில், வலது புறம் கட்டத்துக்குள் வெளியாகியிருந்த செய்தி ஒன்று அவன் கண்ணில் பட்டது.

''உதவி தேவை'' என்ற தலைப்பின் கீழ் ''செப். 8. தந்தையை இழந்த ஆர். கோபி என்ற 12 வயது ஏழைச் சிறுவனான எனக்கு மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக ரூபாய் 80,000 நிதி உதவி தேவைப்படுகிறது. இரக்க மனமுடையோர் தங்களால் இயன்ற தொகையை எனது கீழ்க்கண்ட முகவரிக்கு அக்டோபர் 26 - ஆம். தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆர். கோபி, C/o. ஆர் செல்வாயி, 26, சாமிகோயில் தெரு, ஆரணிப்பட்டி, மதுரை மாவட்டம்!''

''அடடா! நம்மைவிட இரண்டு வயது குறைவான சிறிய பையன்! அப்பா வேறு இல்லையாம். அறுவை சிகிச்சைக்கு 80,000 ரூபாய் வேண்டு

தேவி நாச்சியப்பன்

மாமே!'' என்று கவலைப்பட்டான் ராமு.

அவன் மனத்தில் அந்தச் செய்தி தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டது. பள்ளிக்குத் தயாராகும் போதும், சென்ற வழியிலும் ராமு அந்த கோபியைப் பற்றியே சிந்தித்தபடி சென்றான். பள்ளியில் செய்திகளைப் படித்தான். எதைச் செய்த போதும் அவன் மனத்தில் அந்த கோபியும் அவனது பணத் தேவையும் வேண்டுகோளுமே நிறைந்திருந்தன!

முதல் பாடவேளைக்கு வந்த தமிழாசிரியர் சங்கரன், ''ராமு இன்று முக்கியமான செய்திகளைத் தேர்ந்தெடுத்து, ஒழுங்காகக் கணீரென்று படித்தாய்!'' என்று பாராட்டினார். இதுதான் நல்ல சமயம் என நினைத்த ராமு ஆசிரியருக்கு நன்றி சொல்லியதுடன், அன்று காலையில் செய்தித்தாளில் படித்த கோபியைப் பற்றிய செய்தியையும் அவரிடம் சொன்னான். அதைக் கேட்ட ஆசிரியர், ''நான் கூட அந்தப் பகுதியைப் பேப்பரில் படித்தேன். மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், அந்த கோபிக்கு நாம எப்படி உதவமுடியும்?'' என்று அவனிடமே கேட்டார். ராமு, ''அதைத்தான் சார் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''சரி, பிறகு யோசிப்போம்'', என்று கூறிய ஆசிரியர், அன்றைய பாடத்தை நடத்தத் தொடங்கினார். ராமுவின் மனத்தில் முகம் தெரியாத ஏழை கோபிக்கு எப்படியும் உதவ வேண்டும் என்ற நினைப்பு மேலோங்கி இருந்ததால் பாடத்தில் கவனம் போகவில்லை.


''A, B, C, D... சொல்லுடா...!''

''A, B, C, D....''

''திருப்பிச் சொல்லு பார்க்கலாம்?''

''D, C, B, A!''

– சீர்காழி வி. ரேவதி



அடுத்த பாடவேளை நெசவு. நெசவு ஆசிரியர் சுந்தரம் தறி போடவும், நூலினால் விசிறி செய்யவும் கற்றுக் கொடுத்தார். கோபி எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. கோபியின் நினைப்பில் எங்கோ கவனமாக இருந்த ராமுவைத் தட்டி எழுப்பி, ''என்ன யோசனை?'' என்று கேட்டார் சுந்தரம். ராமு மறைக்கவில்லை. கோபியைப் பற்றி பேப்பரில் படித்த செய்தியையும், அவனுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற துடிப்பையும் அவரிடம் கூறினான்.

சிறிது நேரம் யோசித்த ஆசிரியர், ''ராமு, முன்பு நம் பள்ளிக் கலையரங்க நிதிக்காக விற்பனை நாள் விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்து நிதி திரட்டினோமே, அதைப் போல வேண்டுமானால், இந்த கோபிக்கும் நாம் செய்யலாம். எதற்கும் தமிழாசிரியருடன் கலந்து தலைமை ஆசிரியரிடம் கேட்டுப் பார்'' என்றார்.


ராமு இடைவேளை நேரத்தில் தமிழாசிரியரைப் பார்த்தான். நெசவு ஆசிரியர் சொன்ன யோசனையைக் கூறினான். அவர் ராமுவைத் தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் சென்று கோபியைப் பற்றியும், அவனுக்கு உதவத்துடிக்கும் ராமுவின் எண்ணத்தையும் சொன்னார்.

சிறிது யோசித்த தலைமை ஆசிரியர், ''சரி, விற்பனை நாளுக்கு ஏற்பாடு செய்வோம்'' என்று சம்மதித்தார்.

அன்று மாலையே மாணவர்களை ஒன்று கூட்டி விற்பனை நாள் விழாவின் நோக்கத்தை விளக்கிக் கூறிய தலைமை ஆசிரியர், அவர்களைப் போன்ற திக்கற்ற ஒரு சிறுவனுக்கு உதவ அவர்கள் தயாரா என்று கேட்டார். எல்லோரும் ஒரே குரலில் தயார் என்று ஒத்துழைக்க இசைந்தனர்.

அடுத்த நாள் முதல், பள்ளி மேலும் சுறுசுறுப்பானது. மாணவர்கள் விற்பனைக்கான பல பொருள்களை ஆசிரியர்களின் உதவியோடு, படிப்புக்கு பாதிப்பு இல்லாமல் காலை, மாலை வேளைகளிலும் மதிய இடைவேளை நேரத்திலும் தயாரித்தனர்.

தறியில் தயாரித்த வேட்டி, துண்டு, நூற்ற நூலினால் மாலை, விசிறி, மற்றும் கலைப் பொருள்கள், அழகான வண்ண



ஓவியங்கள், காகிதத்தாலும், பிளாஸ்டிக் ஒயரினாலும் செய்த விதவிதமான அலங் காரப் பொருள்கள், கூடை, பொம்மை, மாலை, கதவு நிலையில் தொங்க விட ஏற்ற அழகான தோரணங்கள் போன்ற வற்றைச் செய்யத் தொடங்கினர்.

சிலர் வீட்டிலிருந்து, ஊறுகாய், சர்பத் போன்றவற்றைத் தயாரிக்கக் கற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்குக் கற்பித்தனர். அவர்கள் அவற்றைத் தயார் செய்தனர்.

இருபது நாட்களில் மாணவர்கள் தயாரித்த பல வகைப் பொருள்கள் மூன் றாவது நான்காவது வகுப்பறைகளை அடைத்துக் கொண்டு விற்பனைக்குத் தயாராக இருந்தன.

ஆசிரியர்களின் ஆலோசனைப்படி மொத்த விலையில் பிஸ்கேட், மிட்டாய் வகைகள், முறுக்கு, மிக்ஸர், தட்டை, அல்வா, இன்னும் பல இனிப்பு வகை களும் வாங்கப்பட்டன. அவற்றை ஓரளவு லாபம் வைத்து விற்பது என்று முடிவு செய்தனர்.

அதுமட்டுமா, காப்பி, டீ இன்னும்

பலவகை பானங்கள், ஐஸ்கிரீம் இவை எல்லாம் கூட விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன.

அக்டோபர் 2 - ஆம் நாள் காந்தி ஜெயந்தியன்று காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரை பள்ளிக் கட்டடத்தில் விற்பனை நாள் விழாவை நடத்துவது என முடிவு செய்தனர். முழு நாள் கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடாகியிருந்தது. மாணவர்களே வீடு வீடாகச் சென்று விளம்பரம் செய்தனர்.

விற்பனை நாளன்று காலை பத்து மணியிலிருந்து ஊர் மக்கள் கூட்டம் கூட்டமாகப் பள்ளியை நோக்கி வந்தனர். ஏதோ அவர்கள் ஊருக்கு உலகப் பொருட் காட்சி சாலையே வந்திருப்பது போல மிகவும் மகிழ்ந்தனர். அழகான பயன்மிக்க பொருட்கள் என்பதோடு நம்ம ஊர் மாணவர்களே தயாரித்தவை என்ற பெருமையோடு வலிய வாங்கிச் சென்றனர்!

மாலை ஐந்து மணி அளவில் கூட்டம் அதிகரித்தது. அதே சமயம் விற்பனைக்கான பொருட்கள் குறைந்து கொண்டே வந்தன. மாலை ஆறு மணிக்கே விற்பனை விழாவை முடிக்க வேண்டிய நிலை! விற்பனைப் பொருள்கள் எல்லாம் காலி!

இரவே ஆசிரியர்களும் மாணவர்களும் அமர்ந்து கணக்குப் பார்த்தனர். செலவு போக இலாபம் மட்டும் 14,008 ரூபாய் வந்தது. தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள், வசதியான மாணவர்கள் சிலர் எல்லோருமாகச் சேர்ந்து தங்களால் முடிந்த தொகையைப் போட்டு எப்படியாவது பதினைந்தாயிரமாக்கி அதை கோபிக்குக் கொடுப்பது என முடிவு செய்தனர்.

தலைமை ஆசிரியரின் ஆலோசனைப்படி ஆசிரியர்கள், மாணவர்கள் சேர்ந்து 'கோபி நலம் பெற வேண்டும்' என்று கூட்டுப் பிரார்த்தனை செய்தனர். அன்று மாலையே தமிழாசிரியர் சங்கரனும், ராமுவும் நாற்பது கி.மீ. தூரத்தில் இருந்த கோபியின் வீட்டிற்குச் சென்றனர். அவனிடம் தங்கள் பள்ளி மாணவர்களின் முயற்சியையும், விற்பனை நாள் விழாவையும், கூட்டுப் பிரார்த்தனை செய்ததையும் சொல்லி பணத்தையும் கொடுத்தார் தமிழாசிரியர்.

கண்களில் நீர்வழிய தமிழாசிரியரை வணங்கி பணத்தை வாங்கிக் கொண்ட கோபி, ''என்னுடைய சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக எத்தனையோ இடங்களிலிருந்து அன்புள்ளம் கொண்ட பலர் பணம் அனுப்புகிறார்கள். இருந்த போதும், என்னைப் போன்ற சிறுவர்கள் பாடுபட்டுச் சேர்த்துத் தந்த இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்; மகிழ்ச்சி அடைகிறேன். உங்களைப் போன்ற பெரியோர்களும், சிறுவர்களும் செய்த பிரார்த்தனையாலும் நிதியுதவியாலும் நிச்சயம் நான் நலம் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என் றான்.


கோபியின் நம்பிக்கை வீண் போகவில்லை. சிறுநீரக அறுவை சிகிச்சை முடிந்து அவன் இப்பொழுது உடல் நலம் பெற்று வருகிறான்.


கோபிக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய மாவட்ட ஆட்சித் தலைவர், ராமுவின் முயற்சியையும், அந்தப் பள்ளி மாணவர்களின் ஆக்கபூர்வமான செயலையும் பாராட்டியிருந்தார். மேலும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் அனைவரும் உதவும் மனப்பான்மையுடன் செயல்வீரர்களாகத் திகழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதையெல்லாம் செய்தித்தாளில் படித்த ராமு மிகவும் மகிழ்ந்தான். ஆம்! அவன் இப்போது தினமும் தவறாது செய்தித்தாள் படிக்கிறான்!

''டி. வி. சினிமாவுக்கும், தியேட்டர் சினிமாவுக்கும் என்னடா வித்தியாசம்?''

''இதை, ஓசில பார்க்கலாம்; அது அப்படி முடியாது!''

– சீர்காழி வி. ரேவதி





★ 'ஒரு நாள் அரசன்' படக்கதை நல்ல நண்பர்களுடன் மட்டுமே பழக வேண்டும் என்பதை நன்கு உணர்த்தியது. படங்களும் வெகு பிரமாதம்! – கோக்கலை எஸ். சேஷாத்ரி, எஸ். ஜெகன், எஸ். சுந்தரம், எஸ். பத்மா, அம்மையார் குப்பம் மா. வெ. கிருஷ்ணன், திருவட்டார் தா. சிந்து குமார், திருவொற்றியூர் என். ஸ்ரீதர், மேலப்பாதி ராஜலட்சுமி நாகராஜன், திருவொற்றியூர் ப. கோகுலப்பித்தன், திருத்தங்கல் எஸ். நீரன் சக்ரவர்த்தி, மற்றும் பலர்.

★ கமலவேலனின் 'உருப்படாத வெட்டி' மாணவர் நெஞ்சில் தன்னம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. ஒரு இயக்கமே நடத்தி செய்ய வேண்டியதை ஒரு நாடகம் செய்துள்ளது! – தெல்லூர்பேட்டை ஜெ. நெடுமாறன், வடமாதிமங்கலம் வே. பாரதி, மேலப்பாதி எஸ். நாகராஜன், திருநகர் எஸ்.டி. என்., மற்றும் பலர்.

★ பாராசூட் கட்டுரை நல்ல அறிவியல் படைப்பு – தருமபுரி எம். சோமசுந்தரம், மதுக்கூர் ரமேஷ், காங்கை ஜெ. ரவிக்குமார், குடந்தை எஸ். கே. மூர்த்தி, அகரக்கடம்பனூர் ஆர். சந்தான், மற்றும் பலர்.

★ சென்னைக்குப் போகாமலேயே நேரு ஸ்டேடியத்தை எங்களுக்கு அறிமுகப்படுத்தி விட்டீர்கள். செலவு மிச்சம்! அட்டை சூப்பர்! – நங்கம்பாக்கம் ஆ. ரமேஷ், காவேரிப்பாக்கம் சோமசேகர், மற்றும் பலர்.

★ 'பரிசு கிடைக்காத போது என்ன செய்தாய்?' போட்டி மிகச் சிறந்த படைப்பு. எங்களுக்கு தன்னம்பிக்கை தரும் நல்ல டானிக். "இதுக்கெல்லாம் மனசைத் தளர விட்டால் எப்படி?" என்ற வரிகளை எழுதி பிரேம் போட்டு வைக்க வேண்டும்! – குளம்பேட்டை ஆ. ராஜு*, தக்கோலம் அ. முஸ்தபா, விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், ஊத்தங்கரை பி. கோவிந்தசாமி மற்றும் பலர்.

★ ஆனையும் தின்பான்; பூனையும் தின்பான்! நல்ல நகைச்சுவை. ஆனால் இது ஏற்கெனவே வேறு நடையில் வெளியானதுதான்! – வாரங்கல் மு. சுப்பையா, பரங்கிப்பேட்டை ஹ. அஷ்ரப் கஜ்ஜால், கோவை எஸ். ராமச்சந்திரன், சிறுபுலியூர் க. ஜெயகாந்தம் மற்றும் பலர்.

★ 'ஐஸ்கிரீம் கசந்தது' எங்களுக்கு இனித்தது! – பொன்னமராவதி க. சந்தானலட்சுமி, கொளத்தூர் பூ. ரங்கம்மாள், தொம்பக்குளம் வெ. ஜெகதீசன் மற்றும் பலர்.

★ "நட்சத்திர மீனுக்கு..." நல்ல அறிவியல் படைப்பு. கோகுலம் வந்ததும் எங்கள் வகுப்பு ஆசிரியர் ரேவதியின் கதையைத்தான் உரக்கப் படிக்கச் சொல்வார்! – புரசை. கு. குணசேகரன், தொழுப்பேடு வ. ஆரோக்கியம், கு. மலைச்சாமி, அவதானப்பட்டி எஸ். வெங்கடேசன், மேலக் கிருஷ்ணன்புதூர் பி. இராமகிருஷ்ணன், மற்றும் பலர்.

★ நல்லா வருவியே கதையில் கடைசியில் பெயரை மாற்றிக் கோட்டை விட்டீர்களே! – தென்னூர் க. சபாபதி, காமராசபுரம் டி. கே. லெட்சுமி, வேப்பேரி வி. குணசேகர், வி. கிருஷ்ணசாமி, நாகை க. கணபதிராமன், அண்ணாநகர் பா. ராமநாதன் மற்றும் பலர்.

★ கோகுலத்தில் இத்தனை ஒரு பக்கக் கதைகளா! – நாகமலை மணிமொழியான் மற்றும் பலர்.

★ பூவண்ணன் ஒவ்வொரு இதழிலும் சஸ்பென்ஸைக் காட்டுகிறார்! – அன்னவாசல் கு. முரளி, சிட்லபாக்கம் வெ. ராஜவேல், மொரப்பூர் ச. உமர்கான், குடந்தை பி. வேதமூர்த்தி, வி. பாஸ்கர், குள்ளம்பட்டி க. மணிராஜ், புளியனூர் து. ஜெயராமன், மலையான்கோவில் வெ. தங்கமணி, வேப்பம்பட்டி மு. மலையப்பன், மற்றும் பலர்.

★ பிருந்தாவனக் கவியரங்கம் கோகுலத்தின் தனிச் சிறப்பு என்பதை ஒவ்வொரு இதழும் காட்டுகிறது. பிருந்தாவனமும் புதுமைத் தொகுப்பு. சிதம்பரம் நாகராஜன், கரூர் திவான் முகமது, அண்ணாநகர் எஸ். காமராஜ், மற்றும் பலர்.

★ ஏன் சார், யாருக்க இந்த ஆழி? என்னமா அறிவியலைத் தொகுக்கிறார்! – மதுராந்தகம் வ. லட்சுமணன், தாம்பரம் கு. கிட்டப்பா, மற்றும் பலர்.

★ 'மொத்தமா கொடுங்கள்' சோம்பேறிகளுக்கு நல்ல அடி! – திருப்புறம்பியம் கே. பி. சரவணகுமார், மற்றும் பலர்.

★ 'நானும் இனிமேல்' நல்ல சமுதாயப் புரட்சிக்கு வித்திடும் கதை! – பெரம்பூர் வ. இசக்கி, பாகூர் எஸ். மாலதி, சாத்தனூர் கு. பானுமதி, மற்றும் பலர்.

★ பொய் கூறுவோர்களுக்கு 'அளப்பு மன்னன் ஜுவாசாமி' நல்ல படிப்பினை! – ஸ்ரீபெரும்புதூர் து. ஜானகி, அம்மையார் குப்பம் வெ. கிருஷ்ணன், வெ. ஜயப்பன், கற்பகநாதர்குளம் வி. கடல்வண்ணன், மற்றும் பலர்.


கேளுங்கள் சொல்லப்படும்

சேரநம்பி



★ உ. வெள்ளையம்மாள், மதுராந்தகம்.

கலைமகளுக்கு அன்னம்தானே வாகனம்? எல்லாப் படங்களிலும் மயிலைப் போட்டிருக்கிறார்களே! எப்படி?



சந்தேகமின்றி அன்னம்தான் கலைமகளின் வாகனம். கல்லில் உட்கார்ந்து சரஸ்வதி வீணை வாசிக்க, அருகே மயில் இருந்து கேட்பது போன்ற ஒரு படம் தான் உன்னைக் குழப்பமடைய வைத்துள்ளது. எங்கும் பிரபலமாகியுள்ள இந்தப் படத்தை முதலில் ஓவியமாக வரைந்தவர் புகழ்மிக்க ரவிவர்மா. இந்தப் படத்தை அவர் வரைந்தபோதே அதற்கு எதிர்ப்பு இருந்தது. வீணை இசையை மயில் ரசிப்பது போலத்தான் எழுதியிருக்கிறேனே தவிர வாகனமாக அல்ல என்று பதிலளிக்கப்பட்டது!

★ தொ. சவரிமுத்து, பொள்ளாச்சி.

எனக்கு வந்த ஒரு பொங்கல் வாழ்த்தில் ''புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்'' என்ற வரிகள் அச்சிடப்பட்டு, வாழ்த்துக் கூறப்பட்டிருந்தது. இது யாருடைய கவிதை வரிகள்?



உங்களுக்கு வந்த வாழ்த்தைத் தயாரித்தவர்கள் நல்ல தமிழறிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். இந்த வரிகள் 'சீவக சிந்தாமணி' காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

★ வ. அபயாம்பாள், இஞ்சிக்கொல்லை.

பிளாஸ்டிக்கின் உபயோகம் பெருகி வருகிறது. ஆனால் அதைக் குப்பையோடு போட்டால் மக்குவதும் இல்லையே!



இது உலகப் பிரச்சனையாக உள்ளது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் இதற்குத் தீர்வு காண முடியாது திண்டாடுகின்றன. இப்பொழுது நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கைக் குப்பையில் எறிந்தால் மண்ணோடு மண்ணாக நூறு ஆண்டுகள் ஆகுமாம்! அதோடு இதனால் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுமாம்.

அமெரிக்காவில் ஒருவர் புதிய பிளாஸ்டிக்கைக் கண்டுபிடித்திருக்கிறார். இது மண்ணோடு மண்ணாக மக்க இரண்டே ஆண்டுகள்தான் பிடிக்குமாம்! இது சுற்றுப்புறச் சூழலையும் பாதிக்காதாம். இதைக் கண்டுபிடித்துள்ளவர் அமெரிக்காவில் உள்ள இந்திய விஞ்ஞானி டாக்டர் ரமணி நாராயண் என்பவர்.

★ ஏ. மைக்கேல், கரூர்.
தலைமுடியில் மின்சாரம் பாயுமா?




ஈரமில்லாத உலர்ந்த தலைமுடி மின் கடத்தி அல்ல. அதனால் மின்சாரம் பாயாது. ஆனால் சிறிது ஈரமிருந்தால் கூட தலைகீழ் விளைவுதான்! வெள்ளை முடியைக் கறுப்பாக்கிக் கொள்ள 'டை' என்ற சாயம் போட்டுக் கொள்கிறார்கள் அல்லவா? இதில் சில வகை சாயங்கள் மின்கடத்திகள். எனவே இப்படிப்பட்ட சாயம் பூசப்பட்ட முடிகளில் மின்சாரம் பாயும். விளையாட்டுத்தனமாக எதையாவது செய்து வைக்காதீர்கள். எளிதில் தீப்பற்றிக் கொண்டோ ஷாக் அடித்தோ உயிருக்கே ஆபத்தாக முடியலாம்!

★ பொ. நமசிவாயம், சீர்காழி.
பட்டுத் துணியில், ஒளி பட்டால் பளபளக்கிறதே! இது எதனால்?



சுத்தமான பட்டுத் துணி பட்டுப் பூச்சி வெளியிடும் பட்டு இழைகளால் நெசவு செய்யப்பட்டது என்பது தெரியுமல்லவா? இந்தப் பட்டு இழை, சாதாரண நூல்களின் இழையைப் போல் உருளை வடிவானது அல்ல. முப்பட்டை வடிவானது. மைக்ரோஸ்கோப்பில் காணலாம். தன் மீது படும் ஒளியைச் சிதற அடிக்க வல்லது. இதனால் தான் பட்டுத்துணியில் ஒளிபட்டால் பளபளக்கிறது.

★ ஜ. செல்வராணி, உதகை.
மீட்டர்கேஜ், பிராட் கேஜ், நேரோ கேஜ் ரயில் பாதைகளின் அகலம் என்ன?



மீட்டர் கேஜ் - 1 மீட்டர்
பிராட் கேஜ் - 1.676 மீட்டர்
நேரோ கேஜ் - 0.762 மீட்டர்

★ வெ. தங்கக் கனி, சாத்தூர்.


குட்டி போடும் விலங்குகள் எல்லாமே ஆண், பெண் குட்டிகளைக் கலந்துதான் போடுமா?



சுவையான கேள்வி. சாதாரணமாக எல்லா விலங்குகளுமே ஆண் பெண் குட்டிகளைக் கலந்தே போடுகின்றன. ARMADILLO என்று அழைக்கப்படும் எறும்பு தின்னி மட்டும் இதற்கு விதி விலக்கு. இது குட்டி போட்டால் எல்லாம் ஆண்தான். இல்லை, எல்லாம் பெண்தான். கலந்து போடுவதில்லை!

★ க. இராம் கோபால், கல்லணை.

ஒலிம்பிக் விழா போட்டிகளில் பயன் படுத்தப்படும் ஒலிம்பிக் கொடி, ஒவ் வொரு ஒலிம்பிக் பந்தயத்தின் போதும் புதிதாகத்தான் செய்யப்படுகிறதா?



இல்லை. 1944 முதல் ஒரே கொடி தான் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப் பட்டு வந்தது. ஆனால் 1988-ல் சியோல் ஒலிம் பிக்கின் போது, 1944 முதல் பயன் படுத்தப்பட்டு வந்த கொடி மறுபடி பயன்படுத்த முடியாதபடி நைந்து போய் விட்டதால், பழைய கொடி அளவி லேயே புதுக் கொடி தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. கடந்த ஒலிம்பிக்கிலும் இந்தப் புதுக் கொடியேதான் பயன்படுத்தப்பட்டது.

★ வ. பீர்முகமது, மேட்டுப்பாளையம்.

தரை, கடல், வான்வெளிப் போக்கு வரத்தில் சிவப்பு வண்ணத்தை மட்டும் அபாய அறிவிப்பாகப் பயன்படுத்து கிறார்களே, ஏன்?



தொலைதூரத்தில் இருந்தால் கூட சிவப்பு ஒளி தெளிவாகத் தெரியும். மழை, மூடுபனியைக் கூடக் கடந்து செல்லும் தன்மை இதற்கு உண்டு. அதனால்தான் சிக்னல் விளக்குகளில் அபாய அறிவிப்பாக உலக முழுவதும் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துகிறார் கள்.

★ வெ. கருணாகரி, பரங்கிப்பேட்டை.

பலா மரம் பூக்காமலேயே காய்க்கும் என்று என் பாட்டி கூறுகிறார். இது உண்மைதானா?



தவறு. பலாவுக்கு மிகச் சிறிய பூக்கள் உண்டு. இவை கீழ் மரத்திலும், கிளைகளிலும் பூக்கும். பல பூக்கள் சேர்ந்து பழத்தைக் கொடுக்கும். பலா மட்டும் அல்ல. ஆலமரம், அத்தி, அன் னாசி ஆகியவைகளில் கூட பல பூக்கள் ஒன்றா கச் சேர்ந்து ஒரு பழத்தைக் கொடுக்கும்.



மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்!

மரத்துக்கும் மண்ணுக்கும், மரத்துக்கும் காற்றுக்கும், மரத்துக்கும் மழைக்கும், மரத்துக்கும் உயிரின வாழ்க்கைக்கும் உள்ள நெருக்கமான தொடர்பு என்ன என்பதை பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் அறிவார்கள். காற்றில் உள்ள கரியமில வாயுவை ஏற்று, ஆக்சிஜனை வெளியிட்டு காற்றை சுத்தப்படுத்தி, சுற்றுப்புறத்தையே தூய்மையாக்கும் மரங்கள், மழை பொழிய வைக்கும் ஆற்றல் மிக்க அன்னையாகவும் விளங்குகின்றன.

மனிதகுலம் தழைக்கவும், மழையை வரவழைக்கவும் மரக்கன்றுகளை நட வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற விழிப் புணர்ச்சி இன்று எங்கும் பரவி வருகிறது. நகரங்களில் பள்ளிச் சிறுவர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்த பல முயற்சிகள் நடக்கின்றன. பிறந்த நாளின் போது பள்ளிச் சிறுவர்களுக்கு ஒரு மரக் கன்று அன்பளிப்பாகத் தரப்படுகிறது. அதை நடுவதற்கு ஒரு இடமும் பள்ளிக் காம்பவுண்டுக்குள்ளேயே ஒதுக்கப்படுகிறது. பெற்றோரின் உதவியுடன் குழி தோண்டப்பட்டு, பிறந்த தினத் தன்று சிறுவன் தனது பிஞ்சுக் கரங்களால் மரக்கன்றை நட்டு நீர் வார்க்கிறான். சிறுவனின் பெயர், மரம் நடப்பட்ட நாள் இரண்டையும் குறிக் கும் ஒரு சிறிய; அழகான அறிவிப்புப் பலகை மரக் கன்றுடன் குழியில் நடப்படுகிறது. தினமும் சிறுவன் பள்ளிக்கு வருகையில் தன்னால் நடப்பட்ட மரக் கன்றின் வளர்ச்சியை ஆர்வத்துடன் கவனிக்கிறான். தானே நீர் மொண்டு வந்து ஊற்றுகிறான். மரக்கன்று நலிந்தால் பெற்றோரை அழைத்து வந்து காட்டுகிறான். அவசியமானால் விவசாய நிபுணர்களின் ஆலோசனையும் கிடைக்கிறது.

சிறுவன் வளர வளர அவனது கவனிப்பில் மரமும் வளர்கிறது. ஐந்து ஆண்டுகளில் மரம் நிழல்தரும் அளவுக்கு வளர்ந்து வருகிறது. குட்டைத் தென்னையாக இருந்தால் மூன்று நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே காய்க்க ஆரம்பித்து விடுகிறது. இந்த நிலையில் அந்த மரத்தை நட்டு கவனமாகப் பராமரித்த சிறுவன் அல்லது சிறுமிக்கு, பள்ளி நிர்வாகம் ஒரு பரிசைக் கொடுத்துப் பாராட்டி மரத்தின் பொறுப்பை ஏற்கிறது. வளர்த்தவனுக்குப் பரிசு! பள்ளிக்கு வருமானம்!

மற்ற பழவகை மரங்களையும் நடுகிறார்கள் என்றாலும் தென்னையைப்

போல் மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் அவை பலன் தருவதில்லை. ஆறாவது படிக்கும் சிறுவன் தென்னையை நட்டால் அவன் பத்தாவது படிக்கும் போது அது காய்ப்பதைக் கண்டுகளித்து பரிசையும் பெற்று விடுகிறான். மற்ற பழமரங்களை முதலாவது, இரண்டாவது படிக்கும் குழந்தைகளைக் கொண்டு நடவைக்கிறார்கள். அவர்கள் பத்தாவது படிக்கும் போது அவை பலன் தரத் தொடங்கி விடும் அல்லவா?

இருந்தபோதிலும் தென்னங்கன்றுகளுக்கு இருக்கும் வரவேற்பு மற்றவைகளுக்கு இல்லை. நெட்டைத் தென்னை நட்ட 10, 12 ஆண்டுகளில்தான் காய்க்கத் தொடங்கி சுமார் 100 வருடங்கள் வரை பலன்தரும். ஆனால், குட்டைத் தென்னை 3, 4 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 30, 35 ஆண்டுகள் வரை பலன் தரும்.

சவுக்குக் காட்டுக் குள்ளன், அந்தமான் குள்ளன், அந்தமான் ஜெயன், காப்படம், கங்கா பவானி, லக்கடிவ் குள்ளன், மால்டீவ்ஸ் குள்ளன், கங்கா பொந்தன், ராத் தெம்பிலி, காண் தெம்பிலி, நவாசி தெம்பிலி, க்ளபா குனிங்க், க்ளாபா வாங்கி, க்ளாபா நிபா, க்ளாபா ஹிஜெள, க்ளாபா காடிங், ஸான் ரோமன், கோ கோ நைனா, புகாய் இதெல்லாம் என்ன தெரியுமா? தென்னை வகைகளின் பெயர்கள்!

தென்னையில் சில விநோதமான இனங்களும் உண்டு. தயரு தேங்காய் என்று ஒருவகை. இது கேரளாவில் அதிகம். இதில் பருப்பின் சதை கெட்டியாக இருக்காது. தயிர்க் கட்டி உறைந்தது போல் இருக்கும். அப்படியே ஸ்பூனில் எடுத்துச் சாப்பிடலாம். இது கொப்பரைக்கு ஏற்றது அல்ல.

பிலிபைன்ஸின் வருணா என்ற தீவில் மாங்கிபோட் என்று ஒரு ரகம். இது இரண்டடி உயரமாக இருக்கும் போதே காய்க்க ஆரம்பித்து, குலைகள் பூமியைத் தொட்டு, பூமியிலேயே வளர்கின்றன!

கயத்தே தாலி (கேரளா), நவாசி தெம்பிலி (இலங்கை), நூவா (நியூ காலிடெனியத் தீவு) ரகத் தேங்காய்களின் மட்டைகளைக் கரும்பு மாதிரி சுவைத்துச் சாப்பிடலாம்!

பிலிபைன்ஸ் தீவின் பலாவன் என்ற ரகம் மரத்தில் காய்க்கும்போதே நெற்று விடுகிறது!

தென்னங்கன்று, நெற்று என்று அழைக்கப்படுகிறது. இதை எப்படி நடுவது?

★ மரங்களுக்கு இடையே 10-15 அடிகள் வரை (குறைந்தது) இடைவெளி இருக்கும்படி பார்த்துக் குழி தோண்ட வேண்டும்.

★ குழிகள் 3 அடி சதுரமுள்ளதாக, 3 அடி ஆழமுள்ளதாக இருக்க வேண்டும்.

★ குழியை வெட்டியதும் நடக் கூடாது. சித்திரை வைகாசியில் குழி தோண்டினால் புரட்டாசி ஐப்பசியில் நடுவது நலம். இப்படி ஆறப் போடுவது வெப்ப நிலை மாற்றங்களுக்கு ஏற்ப, குழிமண் தன்னைப் பழக்கிக் கொள்ள.





★ குழிகளில் எரு, தழை, குப்பை களைப் போட்டு எரிப்பது நல்லது. பூச்சி கள், புஞ்சைக் காளான்கள் அழிய இது பெரிதும் உதவும். அதோடு இது இயற்கை உரமாகவும் ஆகி விடும்.

★ மணல், செம்மண், எரு, புண் ணாக்கு, சாம்பல் ஆகியவற்றை சம மாகக் கலந்து குழியின் அடிப்பாகத்தை ஒன்றரை அடி வரை நிரப்ப வேண்டும்.

★ இனி கன்றை நடலாம். நடும் போது தண்டில் இருந்து மட்டை பிரியும் பாகம் ஒன்றிரண்டு அங்குலம் வெளியே தெரியுமாறு வைத்து அதுவரை மண லைப் போட்டு மூட வேண்டும். குழி முழுவதையும் மூடக் கூடாது.

★ நீர் விட்டு வரும் போது மண் சிறிது சிறிதாக இறங்கி அமிழும். அந்த அளவுக்கு மணல், உரம் கலந்து குழியில் போட்டு மீண்டும் பழைய அளவுக்கு உயர்த்தலாம்.

★ பலத்த காற்று வீசும் இடங்களில், பக்கத்தில் ஒரு குச்சியை நட்டு கன்றுடன் கட்டி அண்டம் தரலாம்.

★ முதல் இரண்டு ஆண்டுகள் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் நன்கு நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை போதும்.

★ உப்புச் சத்துக் குறைவான பூமி யாக இருந்தால் நெற்றை நடும்போதே ஒரு படி சமையல் உப்பைக் கலந்து போட வேண்டும்.

★ மழை பெய்து குழியில் நீர் தங்கி விட்டால் நீரை வெளியே இறைக்க வேண்டும். முடியாவிட்டால் மணலைக் கொட்டி கலக்க வைத்து, அந்த மணலை வெளியே எடுத்து விட வேண்டும்.

★ நடுகின்ற பூமியில் கரையான் புற்று இருந்தால் நடும்போதே பூச்சி மருந்தைக் கலந்து இடுங்கள்.

★ சாம்பலும் கால்நடைச் சாணமும் நல்ல இயற்கை எருக்கள்.

★ கிணற்று நீர் கிடைக்கவில்லை என்றால் கழிவு நீரைக் கூடப் பாய்ச் சலாம். ஆனால் கசடுகள், மண்ணில் மக்காத பிளாஸ்டிக், கண்ணாடி போன் றவை தென்னையின் அடியில் நிற்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ நட்ட மூன்று, நான்கு ஆண்டு களில் காய்க்க ஆரம்பிக்கும். தேங்காய் முற்ற 12 மாதங்கள் ஆகும்.

தட்டு யாருக்கு?



பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிறவிக் குருடர் சிலேடை பாடுவதில் தனித் திறமை பெற்றவர்.

சேதுபதியரசர் தேர்ந்த தமிழறிஞர். புலவர்களைப் போற்றிப் பரிசளிப்பவர். நாவலரின் சொல்வன்மையையும் கவியாற்றலையும் கேள்வியுற்ற அரசர் நாவலரைத் தம் அரசவைக்கு வரவழைத்தார். அவையினரையும், அரசரையும் தம் பா வன்மையால் பரவசமடையச் செய்தார் நாவலர்.

நாவலரின் பாட்டில் மயங்கி அரசர், ஒரு தங்கத் தட்டில் சன்மானமாகப் பொற்காசுகளை வைத்து அவரிடம் நீட்டினார்.

பரிசு தட்டைப் பெற்றுக் கொள்ளும் புலவர்கள், பொற்காசுகளை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை வைத்து விடுவதே வழக்கம்.

ஆனால் நாவலர் அவ்வாறு செய்யவில்லை. தட்டை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டே, "தட்டு, புலவருக்கா அரசருக்கா?" என்று கேட்டார்.

தட்டு என்றால் பொருள் தட்டுப்பாடு. அதாவது வறுமை என்றும் பொருள்படும் அல்லவா? புலவர் இரு பொருள்படும்படி பேசுவதைக் கேட்டு மகிழ்ந்த அரசர், "புலவருக்கே" என்றார்.

கூடியிருந்த அவையினர் நாவலரின் சமத்காரப் பேச்சையும் அரசரின் அறிவாற்றலையும், கொடைச் சிறப்பையும் கண்டு போற்றினர்.

– நாகூரார் எஸ். தட்சிணாமூர்த்தி

★ மட்டை நாருக்காக (தேங்காய் பஞ்சு) வளர்ப்பவர்கள் 11 மாதங்களிலேயே காயைப் பறிப்பார்கள். கொப்பரைக்காக வளர்ப்பவர்கள் 12 மாதம் கழித்துப் பறிப்பார்கள். இளநீருக்காக வளர்ப்பவர்கள் 4 மாதங்களிலேயே பறித்து விடுவார்கள்.


★ 2 ஆண்டுகளுக்குப் பிறகு நீர் பாய்ச்ச வேண்டிய தேவை இல்லை. சுமார் மழையே வளர வைக்கும்.

★ ஆண்டுக்கு ஒருமுறையாவது உரம் போட வேண்டும். இது நர்சரிகளில் கிடைக்கும். இயற்கை உரம் (சாணம், சாம்பல், இலை மக்கல்) நல்லது.

★ தென்னை, வாழை மரத்தைப் போல் ஒரு கற்பகக் கொடை மரம். மட்டை (நார்) ஓலை, சிரட்டு, தேங்காய், மரம் என்று எல்லாமே மனிதருக்கும் கால்நடைகளுக்கும் உதவுகின்றன. செயற்கை ரப்பர் செய்யவும், சோப்பு செய்யவும் கூட இது உதவுகிறது.

நமது பள்ளியில் இப்படி மரம் வளர்க்கும் திட்டம் எதுவும் இல்லையே என்று நீங்கள் யாரும் வருந்த வேண் டாம். உங்கள் வீட்டு வாசலில், மரங்களே இல்லாத பொது இடங்களில் பெற்றோர் உதவியுடன் நீங்களே மரம் நடலாம். மரம் நடுவது கூடப் பெரிதல்ல. அதை வாட விடாமல் நீர் ஊற்றிப் பாதுகாத்து வளர்க்க நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதையும் உங்கள் பெற்றோரின் கையெழுத்துடன் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அதை கோகுலத்தில் வெளியிடுகிறோம். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.


அட்டையில் தென்னை நடுபவர்கள் : என். ப்ரீத்தி, ஜி. விஜயசாரதி. ஆர். ஸ்ரீரஞ்சனி.
வண்ணப்படம் : யோகா



உண்ணாவிரதங்கள்!

ஒருவேளை சாப்பிட கொஞ்ச நேரமாகி விட்டால் கூட வயறு நமக்கு எப்படிப் பசிக்கிறது! ஆனால் சிலர் நாட்கணக்கில் உண்ணாவிரதம் இருக்கிறார்களே எப்படி? ஒரு மனிதனால் எத்தனை நாள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்க முடியும்?

இந்தியாவைச் சேர்ந்த ஒரு புத்த சாமியார் 164 நாள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்! இவ்வளவு அதிக நாட்கள் வேறு யாரும் உண்ணாவிரதம் இருந்தது இல்லை.



புரட்சி வீரர் பகத்சிங் கைது செய்யப்பட்ட போது (1929), அவருடன் கைது செய்யப்பட்டவர்களில் விஜயா என்பவர் ஒருவர். சிறையில் இவர் உண்ணாவிரதம் இருந்தார். 64-வது நாள் இவரது உயிர் பிரிந்தது.

ஒருவர் சராசரி 63 நாட்கள் உண்ணாவிரதம் இருக்க முடியும் போலிருக்கிறது. 1942-ஆம் ஆண்டு நடந்த ''வெள்ளையனே வெளியேறு'' என்ற போராட்டத்தின் போது சீமூர் என்ற இடத்தில் பெண்களை ராணுவத்தினர் இழிவுபடுத்தி விட்டார்கள். இதைக் கண்டித்து, 'ஆச்சாரியா பன்சாலி' என்ற தேசபக்தர் உண்ணாவிரதம் இருந்தார். சீமூர் நிகழ்ச்சி பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்பது இவரது கோரிக்கை. இவர் 63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். இவரது கோரிக்கைக்கு ஆதரவாக காந்தியும் உண்ணாவிரதம் ஆரம்பிக்கவே அசராங்கம் பணிந்தது. 63-ம் நாளுடன் ஆச்சாரியா பன்சாலி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

பகத்சிங்குடன் கைது செய்யப்பட்ட யதீந்திர நாத்தாஸ் என்ற இளைஞரும் சிறையில் உண்ணாவிரதம் இருந்தார். 64-ஆம் நாள் இவர் இறந்து விட்டார். இதே போல அயர்லாந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடிய 'மாக்ஸ்விலி' என்ற தேசபக்தரும் உண்ணாவிரதம் இருந்து 64-ஆம் நாளில் உயிர்நீத்தார். இவர் உண்ணாவிரதம் இருந்தது 1920-ல் இங்கிலாந்தில் பிரிக்ஸ்டன் நகரத்து சிறையில்.

உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு 3 நாட்களுக்குப் பிறகு பசி உணர்ச்சி ஏற்படாது என்று இப்பொழுது மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி இருமுறை 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்.

- இராஜ்யவர்த்தனன்



அசட்டுப் புலி

ரேணு சீனிவாசன்

சித்தப்பா உங்களோடு நானும் புலி வேட்டைக்கு வருகிறேன் என்று சொல்லி அடம்பிடித்து, சேகரும் அவரோடு காட்டுக்கு வந்து விட்டான்.

சிறந்த வேட்டைக்காரரான சித்தப்பா மரத்தின் மீது பரண் அமைத் திருந்தார். சேகரும், சித்தப்பாவும் பரணில் உட்கார்ந்து புலிக்காகக் காத்துக் கொண்டு இருந்தனர்.

எங்கோ ஒரு மான் அலறியது. ''புலி வருகிறது அதனால்தான் மான் எச்சரிக்கைக் குரல் கொடுக்கிறது'', என்றார் சித்தப்பா.

ஆனால் ஒரு மணி நேரம் ஆஓழியும் புலி அங்கு வரவில்லை.

''நாம் காத்துக் கொண்டு இருப்பதை புலி தெரிந்து கொண்டதோ என்னவோ?'' என்றான் சேகர்.

அருகே இருந்த புதர் அசைந்தது. புலியின் வால் மட்டும் புதருக்கு மேலே ஆடியது! சித்தப்பா துப்பாக்கியில் குறி வைத்தார். புலியின் தலை எந்தப் பக்கம் இருக்கிறது என்பது தெரியவில்லை. தெரிந்தால் சுடுவது எளிது.

சேகரும் ஆர்வத்தோடு கூர்ந்து கவனித்தான்.

திடீரென்று தலைக்கு மேலே சல சல என்ற ஒலி. மேலே பார்த்தான் சேகர். 'பகீர்' என்றது அவனுக்கு. பயத்தால் மயக்கம் கூட வருவது போல் இருந்தது. பெரிய மலைப் பாம்பு ஒன்று அவர்களின் தலைக்கு மேலாகத் தொங்கிக் கொண்டிருந்தது. ஒரே நேரத்தில் இரண்டு எதிரிகள்! சித்தப்பாவின்

கவனம் முழுவதும் புலியின் மேல்தான். மலைப் பாம்பை அவர் கவனிக்கவே இல்லை. மெதுவாக அவரிடம் விஷயத்தைச் சொன்னான். திடுக்கிட்டு அவரும் மேலே பார்த்தார். யானையின் துதிக்கை பருமன் இருந்த மலைப் பாம்பு உடலை ஸ்பிரிங் போல வளைத்து காற்றில் ஆடியது.

''பாம்பைச் சுட்டால் அந்தச் சத்தம் கேட்டு புலி ஓடிப் போய் விடும்'' என்றார் சித்தப்பா.

''முதலில் புலியைச் சுடுங்கள், பிறகு பாம்பைக் கொல்லுங்கள்'' என்றான் சேகர்.

''புலியின் வால் மட்டுமே தெரிகிறது. உடல் தெரியவில்லை. இப்போது சுட்டால் குறி தவறுவதற்கு வாய்ப்பு அதிகம். புலி ஓடிப் போய் விடுமே?'' என்றார் சித்தப்பா வருத்தமாக.

சேகர் பயத்தோடு பாம்பைப் பார்த்தான். நாக்கை நீட்டி காற்றை ருசி பார்த்துக் கொண்டே தலையை ஆட்டிக் கொண்டிருந்தது அது.

புலியோ புதரை விட்டு வெளியே வருவதாகக் காணோம். பாம்பு கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்க ஆரம்பித்தது. பத்து அடி நீளமுள்ள அந்தப் பாம்பு மேலே விழுந்தால் அவ்வளவுதான். இரண்டு பேரும் அதன் பிடியில் சிக்கி உயிர் விட வேண்டியதுதான். இதை நினைத்த போதே சேகருக்குக் கையும், காலும் தந்தி அடிக்க ஆரம்பித்தன!

''அசையும் பொருளைத்தான் பாம்பு பிடிக்கும். அசையாமல் அப்படியே உட்கார்'' என்றார் சித்தப்பா.

பாம்பிடம் இருந்து தப்ப வேண்டுமானால் தரையில் குதிக்க வேண்டும். ஆனால் கீழே புலி இருக்கிறதே? புலியை புதரில் இருந்து வெளியே வரச் செய்வது எப்படி? சேகர் யோசித்தான். ஐடியா மின்னல் மின்னியது.

''சித்தப்பா, நான் ஒரு தந்திரம் செய்து புலியை வெளியே வரவழைக்கிறேன். முதலில் அதைச் சுடுங்கள். பிறகு பாம்பையும் கொல்லுங்கள்'' என்றான்.



''கீழே குதிக்கும் முட்டாள் தனத்தைச் செய்யாதே'' என்றார் அவர்.

''அப்படிச் செய்ய மாட்டேன். எனக்குச் சில மிருகங்களைப் போல குரல் கொடுக்கத் தெரியும். இப்போது பாருங்கள்'' என்று சொல்லி விட்டு வாயின் அருகே விரல்களைக் குவித்துக் கொண்டு ஒலி எழுப்பினான். அடுத்த வினாடியே ஒரு பெண் புலியின் உறுமல் அந்தக் காட்டையே உலுக்கி எடுத்தது!

பரணிலேயே புலி இருக்கிறதோ என்று நினைக்கும் படியாக சித்தப்பாவையே அயர அடித்தது அந்த உறுமல்.

மிக அருகில் எழுந்த அதிர்வுகளால் பயந்து போன பாம்பு தலையைச் சடாரென்று இழுத்துக் கொண்டு மேலே இருந்த கிளைக்குத் தாவியது. சேகரின் குரலை பெண் புலியின் அழைப்பாக எண்ணி ஏமாந்து ஆண் புலி குபீரென்று தாவி, மரத்தின் எதிரே வந்து நின்றது.

தயாராக இருந்த சித்தப்பா, புலியின் தலையில் இரண்டு குண்டுகளைச் செலுத்தினார். புலி கருண்டு, காற்றில் துள்ளி, பூமியில் விழுந்து இறந்தது. பிறகு பரணில் எழுந்து நின்ற சித்தப்பா, மலைப் பாம்பின் தலையை ஒரு குண்டினால் சிதற அடித்தார்!

ஆபத்தான நேரத்தில் தன் திறமையைக் காட்டி, இரண்டு கொடிய மிருகங்களை ஒரே சமயத்தில் கொல்ல உதவிய சேகரை சித்தப்பா பெரிதும் பாராட்டினார்.

பாராட்டிவிட்டு ''நம் நாட்டில் புலிகளின் எண்ணிக்கை வெகு வேகமாகக் குறைந்து கொண்டு வருகிறது. புலியால் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு ஆபத்து என்பதை உறுதி செய்து, அந்தப் புலி சுட்டுக் கொல்லப்பட வேண்டிய புலிதான் என்பதை வனத் துறை அதிகாரிகள் அறிவித்த பிறகுதான் இனி இப்படி வேட்டையாட முடியும்'' என்றார்.

''ஆமாம் சித்தப்பா'' என்றான் சேகர்.



நாடு போற்றவும்

நாளை நாளை என்றுநாம்
நாளை உந்தித் தள்ளினால்
நாளை செய்யும் கடமைகள்
நம்மை விட்டுப் போய்விடும்.


இன்று செய்து முடித்திட
எண்ணு கின்ற கடமையை
இன்றே செய்து தீர்த்திட
எண்ண வேண்டும் என்றுமே.

போட்டி போட்டு ஆர்வமாய்
பூர்த்தி செய்யத் தவறினால்
ஊட்டச் சக்தி மிக்கவர்
உயர்மை தட்டிச் செல்லலாம்.

சுறுசு றுப்பின் உச்சியைத்
தொடுவ தற்குப் பழகினால்
விறுவி றுப்பாய் வாழ்விலே
வெற்றி அள்ளிக் கொள்ளலாம்.

சோம்பல் என்ற பீடையைத்
துடைத்து மாற்ற எண்ணிலால்
நாம்உ யர்ந்து வாழ்விலே
நாடு போற்ற வாழலாம்!

– அழகனார்



குட்டி நாய்!



ஒரு நாயை வாங்கி வளர்க்க வேண்டும் என்று கேசவனுக்கு கொள்ளை ஆசை. சிறு வயதிலிருந்தே இது அவனுக்கு நிறைவேறாத ஆசையாயிருந்தது.

கேசவனின் ஊரில் புதியதாக ஒரு 'பெட் ஷாப்' ஆரம்பித்திருந்தார்கள். இது அவனுடைய நண்பன் மூலமாகக் கேசவனுக்குத் தெரிந்தது.

அங்கே வகை வகையான குட்டி நாய்கள், சடை நாய், அல்சேஷன், புஸுபுஸு நாய் என விதம்விதமாக விற்பனைக்கு இருந்தன.

கேசவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து, கடைசியில் ஒருநாள் 'பெட் ஷாப்'பிற்கு போனான்.

எந்த நாயைத் தேர்ந்தெடுப்பது என ஒரேயடியாகக் குழம்பி, கடைசியில் ஒரு நாயைத் தேர்ந்தெடுத்தான் கேசவன்.

கடைக்காரர் உடனே, ''வேண்டாம் தம்பீ... அந்த நாய் காலொடிந்தது. வேறே அழகான நாயை எடுத்துக் கொள்...'' என்றார்.


கேசவன் ''இல்லையில்லை. எனக்கு இதுதான் வேண்டும்...'' என்று சொல்லி அந்தக் குட்டி நாயை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். நாயும் அவனுடன் நீண்ட நாள் பழகியது போல வாலாட்டியது.

''ஆச்சரியமாயிருக்கே...'' என்ற கடைக்காரரின் வார்த்தைக்கு கேசவன், ''இதிலென்ன ஆச்சர்யம்? இதன் கஷ்டம் எனக்குத்தான் தெரியும்'' என்று சொல்லி தன் இடதுகால் பேண்ட்டை தூக்கிக் காட்டினான். அங்கே கட்டையில் செயற்கைக் கால் இருந்தது.

– ஜெயஸ்ரீ ராஜ்

கேட்கலாமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்



ஜி. திவாகர், ராஜபாளையம்.

? சாக்லேட் சாப்பிடுவது நல்லதா? அதனால் ஏதேனும் நோய் உண்டாகுமா?


! சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த பண்டம் சாக்லேட். ஆனால் அதில்தான் அதிக ஆபத்து உள்ளது. சாக்லேட்டை அதிகமாகச் சாப்பிட்டால் சொத்தைப் பல், ஈறுவீக்கம், வாய்ப்புண், நாக்குப் புண் போன்ற உபாதைகள் வருவது சர்வ சாதாரணம். எனவே அடிக்கடி ஓயாது சாக்லேட் சாப்பிடுவது நல்லதல்ல.



இரணியல் ராஜா, தஞ்சாவூர்.

? வெறிநாயால் கடிபட்டவருக்கு என்ன முதலுதவி செய்யலாம்?

! கடிபட்ட இடத்தை உடனே சோப்புத் தண்ணீரால் நன்கு கழுவுங்கள். ஸ்பிரிட் அல்லது ஏதேனும் ஒரு கிருமி நாசினியை காயத்தின் மீது தடவுங்கள். காயத்தைத் திறந்தே வைக்க வேண்டும்;



எக்காரணத்தைக் கொண்டும் கட்டுப் போடவோ, தையல் போடவோ கூடாது. வெறிநாய்க்கடி மிகவும் ஆபத்தானது என்பது தெரிந்ததுதானே! அதனால் முதலுதவி செய்த உடனேயே மருத்துவரிடம் சென்று வெறிநாய்க்கடி தடுப்பூசி (ANTI RABIES VACCINE)


போட்டுக் கொள்ளுங்கள். இது மிக வும் முக்கியம்!

டி. மீனா, தஞ்சாவூர்; டி. ரம்யா, ஆரணி; சி. அன்பரசு, செம்மனூர்.

? நான் குள்ளமாக உள்ளேன். நான் வளர்வதற்கு மாத்திரை உள்ளதா? அதைச் சாப்பிட்டால் பலன் கிடைக்குமா?

? எனக்கு வயது 14. நான் குள்ளமாக இருக்கிறேன். நான் வயதிற்கேற்ப வளர்வதற்கு வழி கூறுங்கள்.

? சிலர் மிகவும் குள்ளமாக இருக்கிறார்களே! குள்ளத் தன்மையைப் போக்குவதற்கு வழி உண்டா?



! இதுபோன்று இன்னும் நிறைய தம்பி, தங்கைகள் கேட்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் ஒரே பதில்தான். உயரமாக வளர்வதற்கு எவ்வித மருந்துகளும் இல்லை. உயரம் என்பது அவரவர் பாரம்பரியத்தைப் (HERE- DITY) பொறுத்தது. பெற்றோர்கள் உயரம் குறைவாக இருந்தால் குழந்தைகளும் உயரம் குறைவாக வளர்வதற்கு வாய்ப்புகள் அதிகம். பிறக்கும் போதே உங்கள் உயரத்தை ஜீன்கள் (GENES) கணித்து விடும். எனவே, உயரமாக வளர்வதற்கு மாத்திரை தேடி அலைய வேண்டாம். சிறு வயதிலிருந்தே புரதச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் நிறைந்த சத்துள்ள உணவுகளை சாப்பிட்டு வந்தால் ஓரளவிற்கு அது வளர்ச்சிக்கு உதவலாம். அதே சமயம் பதினெட்டு வயதிற்கு மேல் யாரும் உயரமாக வளர முடியாது.

எம். கே. சக்திவேல், சேலம் - 10.

? சிகரெட்டினால் உண்டாகும் தீமைகள் என்ன?

! சிகரெட் புகைப்பதால் சுவாசப் பாதையில் அடிக்கடி சளி பிடிக்கும். உதடு, வாய், நுரையீரல்களில் புற்று நோய் வரும். ரத்த அழுத்தம் அதிகமாகும். மாரடைப்புக்கு வழிவகுக்கும். காசநோயை வரவழைக்கும். நரம்புத் தளர்ச்சி வரும். இத்தனை தீமைகளையும் நாமாக வலியச் சென்று வாங்கிக் கொள்ள வேண்டுமா என்பதை சிகரெட் புகைப்பதற்கு முன்பு யோசித்தால், இத்தீய பழக்கத்திற்கு அடிமையாவதைத் தவிர்க்கலாம். (சரி, முத்துவேல். நல்ல நல்ல கேள்விகளை அடிக்கடி கேட்கிறீர்களே, ஒருமுறையாவது உங்கள் முழு முகவரியையும் தெரிவித்தாலென்ன?)

நா. ஸ்ரீவித்யா, வெட்டுவாணம்.

? பக்கவாத நோய் என்றால் என்ன? அதன் அறிகுறிகள் யாவை?

! உடம்பில் ஏதேனும் ஒரு பக்கம் கை, கால் செயலின்றிப் போய் விடுவது தான் 'பக்கவாத நோய்' (HEMIPLEGIA) எனப்படுகிறது. இது பெரும்பாலும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வருகிறது. மூளைக்கு ரத்த ஓட்டம் தடைப்படும் போது இந் நோய் உண்டாகிறது. ரத்தக் குழாயின் உள்வீக்கம், அளவுக்கதிகமாக கொழுப்புப் பொருள் ரத்தக் குழாய்களில் படிவது, பெரிய ரத்தக் குழாயிலிருந்து கொழுப்புத் துண்டு விடுபட்டு மூளையில் ரத்தக் குழாயை அடைத்து விடுவது, ரத்தமிகு அழுத்தத்தால் ரத்தக் குழாய் மூளையில் வெடித்து விடுவது போன்ற பல காரணங்களால் மூளைக்கு ரத்த ஓட்டம் தடைபட்டுப் பக்கவாதம் வருகிறது. மூளையில் இடதுபக்கம் ரத்த ஓட்டம் தடைபட்டால் உடம்பின் வலது பக்கம் பக்கவாதம் வரும். மூளையில் வலது பக்கம் ரத்தம் தடைபட்டால் இடதுபக்கம் பக்கவாதம் வரும். பெரும்பாலும் உடம்பின் ஒரு பக்கம் திடீரென செயலற்றுப் போவதுதான் இந் நோயின் முக்கியமான அறிகுறி. சிலருக்கு கையோ, காலோ சிறிது காலம் வேலை செய்யாமல், பலவீனமாக இருந்து, திடீரென முற்றிலும் பலமிழந்து போகும். இன்னும் சிலருக்கு பேச்சு மட்டும் வராமல் இருக்கலாம். இம்மாதிரி சமயங்களில் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.



ஆனந்தப் புன்னகை – புவனை கலைச் செழியன் – பக். 128, ரூ 16/- கடர், 33/15, வெல்கம் காலனி, அண்ணாநகர், மேற்கு விரிவாக்கம், சென்னை – 600 101.

பண்பட்ட எழுத்தாளரும் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகம் ஆனவருமான புவனை கலைச் செழியனின் நாவல் இது. திடீரென்று ஏழையாகி விடும் கிருஷ்ண மோகன், 'செல்வந்தனாகித்தான் திரும்புவேன்' என்று சபதம் ஏற்று, குடும்பத்தை நிர்கதியாக்கி விட்டுப் பிரிய, சிறுவனான பொன்னழகனும் அவனது தாயும், தங்கையும் படாதபாடுபடுகிறார்கள். பக்கத்து வீட்டு நண்பர் ஒருவரும் உதவ, குடும்பம் துளிர் விடுகிறது. நல்ல நிலைக்கு வரும் போது காணாமல் போய் குபேரனாகி விட்டிருந்த தந்தையும் கிடைக்கிறார். தென் ஆற்காடு மாவட்டத்தின் மண் வாசனை நாவல் எங்கும் வீசுகிறது. ஆரவாரம் இல்லாத படைப்பு.

சூப்பர் வேகக் கணக்கு முறைகள் – எம். முருகன், பக். 80 ரூ. 10/- நித்தன் பதிப்பகம், B. 28 (S), **11வது குறுக்குத் தெரு, தில்லை நகர், திருச்சி – 620 018.**

இது கணக்கு யுகம். கணிப்பி (கால்குலேட்டர்)க்கு ஈடாக மாணவர்கள் தங்கள் அறிவை மின்னல் வேகத்தில் இயக்கி செயல்பட வேண்டிய காலம். இதற்கு தீவிரமான பயிற்சிகளே உதவும். இதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை ஆசிரியர் படிப்படியாக கணக்குகள் வாயிலாகவே விளக்கிக் காட்டியுள்ளார். 'கணிதமா!' என்று மலைப்பவர்களுக்கு இது நல்ல தெம்பு அளிக்கும் துணைவன். கணக்குப் பிரியர்களுக்கு பால் பாயசம்!

சிரிப்பு வருது! சிரிப்பு வருது! – ப்ரியா பாலு – பக். 112, ரூ 12.50 – ப்ரியா நிலையம், 32/2 அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600014.

முழுக்க முழுக்க ஏராளமான ஜோக்குகளைக் கொண்ட புதுமையான படைப்பு. வயிற்று வலிக்கு டானிக் வாங்கி வைத்துக் கொண்டு படிப்பது நல்லது! இதில் பெரியவர்கள் மட்டுமே படிக்கக்கூடிய ஜோக்குகள் அதிகம் என்றாலும் சிறுவர்களுக்கான சிரிப்புகளும் இல்லாமல் இல்லை. உதாரணத்திற்கு இதோ :

● ''இதென்ன ஜாங்கிரியில் ஐந்தே ஐந்து வளையம் மட்டும் இருக்கு?''
''இது ஒலிம்பிக் ஸ்பெஷலாச்சே?''

● ''வயிற்று வலிதான் நின்று போச்சே! இன்னும் ஏன் அழறே?''
''இனிமே பள்ளிக்கூடம் போகச் சொல்வாங்களே? அதான்''


இது போன்றவற்றை மட்டும் தனியாக எடுத்து ''சிறுவர் ஜோக்ஸ்'' என்று தனிப் பிரிவாகப் பிரித்திருக்கலாம்.

பாட்டி சொன்ன அறிவுக் கதைகள் – ஆர். பொன்னம்மாள் – பக். 184 ரூ. 20/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17.

கர்ண பரம்பரைக் கதைகளுக்குப் புதிய உருவம் கொடுத்து அருமையாகப் படைத்திருக்கிறார் ஆசிரியை. எதிரே நின்று கதை கூறுவது போல் உள்ள நடை அசத்துகிறது. குழந்தைகள் மட்டுமென்ன, பெரியவர்கள் கூட புத்தகத்தைக் கையில் எடுத்தால் முடித்து விட்டுத்தான் வைப்பார்கள். சிறுவர் புத்தகம் என்பதால் ஓரிரு படங்களையாவது சேர்த்திருக்கலாம்.

மதிப்புரைக்கு புத்தகங்களை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை – 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சிறுவர் நூல்களும், பொது அறிவியல் நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். கட்டணம் இல்லை.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.



“A 'Bhutta' is my delight
nd a Honda is my passion
ut action is my real pride.”
"I just believe in action"
You get the
same Shoes
we Export
JOURNEY
action®
SHOES
A Wide Range of Footwears for Every One!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka